
தர்மசக்கரம்



ரக்தாக்ஷி ௵ மாசி ௴ சக்கரம் 34 ஆரம் 2

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

வேண்டுகோள்

சேலத்தில் நடைபெற்று வருகின்ற ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியைப் பூர்த்தி பண்ணுவதற்காக 1974ஆம் ஆண்டு தர்ம சக்கரத்தின் மூலம் டிபாசிட் வேண்டு மென்று கோரினோம். அதற்காக அன்பர்களிடமிருந்து சுமார் 20 லக்ஷம் ரூபாய் டிபாஸிட்டாக வந்து சேர்ந்தது. அத்தொகையை வைத்துக்கொண்டு அதிவிரைவில் அந்த ஸ்தாபனத்தைப் பூர்த்திபண்ணினோம். டிபாஸிட்டுகளும் குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன.

இப்பொழுது திருநெல்வேலியில் இந்து மகளிர் கல்லூரி ஒன்றுக்குத் தேவை ஏற்பட்டுள்ளது. அதன் அவசியத்தை உணர்ந்த தபோவனம் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலிக்கு அருகில் சுமார் 5 மைல் தூரத்தில் தூத்துக்குடி போகும் பாதையை ஒட்டி உள்ள தளவாய் முதலியார் தர்ம டிரஸ்டைச் சேர்ந்த பூமியில் இக் கல்லூரி கட்டுவதற்காக என்று 75 ஏக்கர் நிலத்தை நிரந்தர குத்தகைக்கு எடுத்து ரிஜிஸ்டர் செய்துள்ளோம். 1985ஆம் ஆண்டு ஜூலையில் இக்கல்லூரி திறப்பதற்கு அரசாங்கத்திடம் விண்ணப்பம் போட்டுள்ளோம்.

இதில் அபிமானம் கொண்டுள்ள அன்பர்கள் சேலத்துக்கு உதவியது போன்று இதற்கும் டிபாசிட் மூலம் உதவிசெய்ய முன் வரவேண்டுமென்று வேண்டுகிறோம்.

டிபாஸிட்களுக்கு முறையே டிபாஸிட் ரசீது வழங்கப்பெறும். ஓர் ஆண்டு கெடுவிற்கு 9% வீதமும் இரண்டு ஆண்டு கெடுவிற்கு 10% வீதமும் மூன்று ஆண் டும் அதற்கு மேலும் உள்ள கெடுவிற்கு 11% வீதமும் வட்டி தரப்படும். எப்பொழுது வேண்டுமானாலும் முதலைத் திரும்பிப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு மேலே குறித்துள்ள படி கெடுவிற்கு ஏற்ற வட்டி விகிதம் வட்டி கணக்கிட்டுத் திருப்பித்தரப்படும். இங்ஙனம் டிபாஸிட் செய்யும் தொகை ரூபாய் ஒரு ஆயிரத்துக்குக் கீழ் போகக்கூடாது. வட்டி ஆண்டிற்கு ஒரு முறை செலுத்தப் பெறும்.

பணம் அனுப்பும் முறை: ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் என்ற பெயரில் தாங் கள் அனுப்புகிற தொகைக்குத் திருச்சியில் உள்ள பேங்குகளில் மாற்றத் தக்கதாக டிராப்ட் எடுத்து A/c Payee என்று கிராஸ் செய்து தபாலில் தபோவனத்துக்கு அனுப்பிவைக்கலாம். யார் பெயருக்கு ரசீது போடவேண்டுமோ அவரது தபால் விலா சத்தைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டுகிறோம்.

ஏற்கனவே தபோவனத்தில் டிபாஸிட் செய்துள்ள தொகைகளுக்கு 1-1-85 முதல் மேற்படி வட்டி விகிதப்படியே வட்டி தரப்படும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சிராப்பள்ளி ஜில்லா
24--12--84

சுவாமி சித்பவானந்த
தலைவர்,

முத்தமிழ்ப்பண்ணை 13.2.85

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	ரக்தாக்ஷி ஹூ மாசி மீ	ஆரம் 2

பொருளடக்கம்

வருட சந்தா:	உள்நாடு ரூ. 15-00	வெளிநாடு ரூ. 45-00
தனி இதழ்	,, ரூ. 1-50	,, ரூ. 4-00

அந்தர்யோக விவரங்கள்

சென்னை—கோபாலபுரம் லாயிட்ஸ்சாலையில் 3—3—85 ஞாயிறு

இடம்: D. A. V. ஹையர் செகண்டரி பள்ளியில் (ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தயானந்த வேதிக் ஸ்கூல்)

நேரம்: காலை 10-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தஞ்சையில் 3—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தஞ்சை மேலராஜவீதி கொங்கணேஸ்வரா நடுநிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 3—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: S. H. N. எட்வர்ட் மேல்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 10—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 2-00ம் மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 10—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம் (பாலாற்றின் தென்கரை பழையபாலம் அருகில்)

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

உணவு வசதி: மதிய உணவுக்கு ரூ. 2-00 நேரில் செலுத்திப் பதிவு செய்துகொள்ளலாம்.

மதுரை ஜில்லா—பெரியகுளத்தில் 10—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

சேலம் ஜில்லா—மேச்சேரியில் 16—3—85 சனிக்கிழமை

இடம்: சன்மார்க்க சங்கக் கட்டடம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—ராசிபுரத்தில் 17—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தர்ம சக்கரம் தை மாத இதழ் தாமதம் பற்றி

தர்ம சக்கரம் தை மாத இதழை முறையாகக் குறிப்பிட்ட தேதியில் தபாலில் சேர்த்து விட்டோம். ஆனால் பொங்கல் வாழ்த்துக்கள் பெரிதும் தபால் அலுவலகங்களில் குவிந்து விட்ட காரணத்தினால் இம்மாத இதழ் சந்தாதாரர்களுக்கு வெகு தாமதமாக வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிகிறது. தபால் இலாகாவின் தவிர்க்க இயலாத தாமதத்தினால் இந்தத் தாமதம் நிகழ்ந்துள்ளதே தவிர எங்களால் இந்தத் தாமதம் ஏற்பட்டு விடவில்லை என்பதைச் சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். பெரும்பாலான சந்தாதாரர்களிடமிருந்து தை மாத இதழ் கிடைக்கவில்லை என்று பல கடிதங்கள் வந்த வண்ணமிருந்தன. தனித்தனியே யாவருக்கும் இது குறித்துப் பதில் எழுதுவது சாத்தியமில்லாமற் போகவே இந்த அறிக்கையின் மூலம் நிலைமையை விளக்கியுள்ளோம்.

காரியதரிசி

ज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம். 34 | ரக்தாக்ஷி ஹூ மாசி மீ | ஆரம் 2

பிரார்த்தனை

दुर्वासना मम सदा परिकर्षयन्ति चित्तं शरीरमपि रोगगणा दहन्ति ।
संजीवनं च परहस्तगतं सदैव तस्मात्वमेव शरणं मम शंखपाणे ॥

— शंकराचार्य

துர்வாஸனு மம ஸதா பரிகர்ஷயந்தி சித்தம் சரீரமபி ரோககணு தஹந்தி ।
ஸம்ஜீவனம் ச பரஹஸ்தகதம் ஸதைவ தஸ்மாத்வமேவ சரணம் மம
சங்கபாணே ॥

— ஆதிசங்கரர்

தீய சம்ஸ்காரங்கள் எப்போதும் என் மனதைக் கலக்கமுறச் செய்கின்றன. நோய்கள் என் உடலை நாசம் பண்ணுகின்றன. என்னுடைய வாழ்வோ பிறரைச் சார்ந்திருக்கும் நிலையில் உள்ளது. ஆகவே சங்கைத் தாங்கியிருப்பவனே, உன்னைச் சரணடைகிறேன்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.

— குலசேகராழ்வார்

அருள் விருந்து

எது உண்மையோ அதில் அழகு ஒளிர்கிறது.

ஆசைக்கு ஏற்றவாறு எண்ணம் மாறியமைகிறது.

கலைகளனைத்தும் ஆத்ம ஞானத்துக்கு வழிகாட்டிகளாம்.

வாழ்வு முழுவதையும் ஒழுங்குபடுத்துவது சன்மார்க்கமாம்.

தனியன் எனினும் துணிந்து சன்மார்க்கத்தில் செல்வாயாக.

மனிதன் அடைந்துள்ள பண்பை வெளிப்படுத்துவது கலைஞானம்.

பொறிகள் மூலம் பெறுகிற இன்பம் பிறகு துன்பமாக மாறுகிறது.

நன்னெறியை உறுதியாகக் கடைப்பிடிக்கிறவன் மனத் தெளிவடைகிருன்.

நீ கொண்டுள்ள இலட்சியத்தில் யாண்டும் கண்ணும் கருத்துமாயிருப்பாயாக.

உலக வாழ்வைக் கனவாகக் கருதுபவன் முக்திக்குப் பக்கத்தில் வந்திருக்கிருன்.

தர்மம் வாளைக் கையில் வைத்துக்கொண்டு மனிதனை நல்வழியில் நடாத்துகிறது.

பிறர் படும் துயரத்தைக் குறித்து உருகுகிறவன் அதிவிரைவில் மேலோன் ஆகிருன்.

நன்னெறியைக் கடைப்பிடிப்பவன் இனிவரப்போவதைக்குறித்துக் கவலைப் படுவதில்லை.

வாழ்வின் மூலம் புகட்டுகிற அறிவு வெறும் வாய்ப்பேச்சால் புகட்டுவதை விட மேலானது.

மக்களின் பாங்கு அவர்கள் அமைத்துக்கொள்ளும் அரசாங்கத்தின் வாயிலாக வெளியாகிறது.

தீமையைக்கொண்டு தீமையை அகற்ற முடியாது; யாண்டும் நலனில் நிலைத்திருப்பதே தீமையை அகற்றுவதற்கு உற்ற உபாயம்.

துளித்துளியாக விழும் நீர் ஜாடி ஒன்றை நிரப்புவது போன்று எண்ணங்கள் தொடர்ந்து ஒன்றுகூடி மனிதனை மேலோன் அல்லது கீழோன் ஆக்குகின்றன.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

தம் எதிரே அமர்ந்திருந்த காப்டன் விசுவநாதரோடு பரமஹம்சதேவர் உரையாடலாயினர். அவர் பகர்ந்ததாவது: "நான் இப்போதுதான் தங்களைப்பற்றியும், தாங்கள் பூண்டுள்ள பக்தியைப்பற்றியும், தாங்கள் சிரத்தையோடு செய்கின்ற சிவ பூஜையைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தேன். சிவனுக்குத் தாங்கள் கொடுக்கும் ஆரதிமுறையைப் பற்றியும் நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்."

சேனாதிபதி விசுவநாதர் தலைவணங்கிய பாங்கில் பகரலாயினர்: "நான் ஒரு சாமானியமான மனிதன்; சிவபூஜையின் மகிமையைப் பற்றி நான் அறிந்திருப்பது மிகச் சொற்பம்."

பரமஹம்சதேவர்: "உலக பந்தபாசங்களில் உழலுகின்ற அகங்காரம் பொல்லாதது. அதற்கு நேர்மாறாக 'நான் இறைவனுடைய பக்தன், அன்னை பராசக்தியினுடைய குழந்தை, என்கிற பாங்கில் அகங்கரிப்பதில் கேடு ஒன்றும் இல்லை. குழந்தை ஒன்றினுடைய அகங்காரம் முக்குணங்களில் எக்குணத்திலும் சம்பந்தப்பட்டதன்று. ஆகையினால் அக் குழந்தையின் அகங்காரத்தில் கேடு ஏதும் இல்லை. சிறு குழந்தைகள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொள்ளுகின்றன. அடுத்த க்ஷணத்தில் அந்தச் சண்டையை மறந்துவிட்டு அவைகள் ஒட்டி உறவாடுகின்றன. மரக்கட்டைகளை வைத்துக்கொண்டு குழந்தைகள் கண்ணும் கருத்துமாக வீடுகட்டுகின்றன. அடுத்த க்ஷணத்தில் தாங்கள் கட்டிய வீட்டைச் சிரமம் ஏதுமின்றிக் கலைத்து விடுகின்றன. வீடு கட்டியதில் தாங்கள் ஏதோ லாபம் அடைந்ததாகவோ பிறகு கட்டிய வீட்டைக் கலைத்துத் தள்ளுதலில் ஏதோ நஷ்டம் அடைந்ததாகவோ குழந்தைகள் உணர்வதில்லை. அகங்காரமற்ற நிலையே அவர்கள் படைத்திருந்த சீரிய பான்மைக்குக் காரணமாகிறது. அக்குழந்தைகளிடத்து உள்ள மனப்பான்மையை ஆத்ம சாதகன் பெறுவது முற்றிலும் அவசியமாகிறது. தன்னைக் கடவுளின் குழந்தையாகவோ, தொண்டனாகவோ வைத்துக்கொள்ளுகின்ற அகங்காரத்தில் தோஷம் ஏதுமில்லை. இத்தகைய பான்மையை அகங்காரமாகக் கருதலாகாது. இத்தகைய அகங்காரத்தைக் கற்கண்டோடு ஒப்பிடலாம். தித்திப்புப்பண்டங்கள் உடலில் கேட்டை உண்டுபண்ணுகின்றன. கற்கண்டு தித்திக்கிறது எனினும் அதில் தோஷம் ஏதுமில்லை. இதற்குச் சான்றாக மற்றொன்றை எடுத்துக்கொள்ளலாம். கூப்பாடு போடுவது மனிதனுக்குப் பொருந்தாது. ஆயினும் ஓங்காரத்தை மனிதன் எவ்வளவு உரக்க உச்சரித்தாலும் அதனால் அவனுக்குக் கேடு ஒன்றும் வந்து விடாது."

"இத்தகைய தூய அகங்காரம் படைத்திருப்பவனுக்கே சச்சிதானந்தப் பொருளிடத்து அன்பு வைப்பது சாத்தியமாகிறது. அகங்காரத்தை ஒதுக்கித் தள்ளுவது எளிதன்று. ஆகையினால் அதை ஒதுக்க முயலுதற்குப் பதிலாக அதைக் கடவுளோடு இணைத்துக் கொள்வோமாகில் அதன் வாயிலாக நாம் நலன் அடைகிறோம். அகங்காரத்தை அடியோடு ஒதுக்க முயன்றால் சரீரத்தைப் பேணுதல்கூடச் சாத்தியப்படாது. கோபிமார்கள் கண்ணனிடத்துக் கொண்டிருந்த அன்பு அலாதியானது." இப்பொழுது விசுவநாதரிடம் பரமஹம்சதேவர் வேண்டிக்கொண்டதாவது: "தாங்கள் பாகவதத்தை நன்கு கற்று அறிந்திருக்கிறீர்கள். ஆகையால் கோபிமார்கள் படைத்திருந்த பராபக்தியைப்பற்றி எங்களுக்குச் சிறிது எடுத்து இயம்புங்கள்."

கேப்டன்: "ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் சாதாரண மனிதன் போன்று வாழ்ந்து வந்தான். அரசாங்க படாடோபம் ஏதும் அவனிடம் அப்பொழுது இருக்கவில்லை. ஆதலால் கோபியர்கள் அவனிடத்து அன்பு மிகப் பூண்டிருந்தார்கள். அதை உலக அன்பு எதனோடும் சீர் தூக்க முடியாது. தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கண்ணனுக்கே உரியவைகள் ஆக்கியது அக்கோபிமார்கள் பூண்டிருந்த பராபக்திக்கு எடுத்துக்காட்டு ஆயிற்று.

யான், எனது என்னும் அகங்கார மமகாரத்

தைத் தாண்டிய நிலையில் கோபிமார்கள் இருந் தார்கள். தங்களுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் மனமுவந்து பரமனுக்கு அர்ப்ப ணம் பண்ணினார்கள். அத்தகைய பேரன்புக் கும் தியாகத்துக்கும் உபமானம் வேறு எங்கும் காணமுடியாது. கோபிமார்கள் கொண்டி ருந்த அன்புக்குப் பிரமாணம் அவர்கள் அன்பே தான்."

விசுவநாதருடைய கூற்று பரமஹம்சதேவ ரின் மனதில் பேருவகையைக் கிளப்பியது. 'கோவிந்தா கோவிந்தா கோவிந்தா' என்று அவர் தழதழத்த குரலிலே இயம்பினர். சமாதி நிலை எய்தும் தறுவாயில் அவர் இருந்தார். அக்காட்சியைக் காணலுற்ற காப்டன் வியப் படைந்தார். 'இவரே பாக்யவான், இவரே பாக்யவான்' என்று அவர் இயம்பினர்.

பரமஹம்சதேவர் அடைந்திருந்த பரவச நிலையைக் காணலுற்ற பக்தர்களும் திகைத் துப் போனார்கள். அவர் மீண்டும் இவ்வுலக நிலைக்குத் திரும்பி வரும் பரியந்தம் அன்னவர் கள் அமைதியுடன் அவரைப் பார்த்த வண்ண மாக அமர்ந்திருந்தனர்.

இவ்வுலக நிலைக்குத் திரும்பிவந்த பரமஹம்ச தேவர் "ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றி இன்னும் ஏதாவது தாங்கள் எங்களுக்கு இயம்ப மாட் டீர்களா?" என்று கேட்டார்.

சேனபதி: "ஸ்ரீ கிருஷ்ணனை யோகிகள் யாருமே எளிதில் அடைய முடியாது. ஆனல் அவனை அணுகுவதற்குக் கோபிமார்கள் படைத் திருந்த பிரேமை பக்தி ஒன்றே உற்ற உபாய மாம். யோகிகள் கிருஷ்ண பரமாத்மாவின் தரிசனத்தைப் பெறுவதற்காகப் பல ஆண்டு கள் யோகசாதனங்கள் புரிந்தும் அவனை அடை வதற்கு அவர்களால் இயலவில்லை. ஆனல் கள் ளங் கபடமற்ற கோபிமார்கள் படைத்திருந்த தூய அன்பு என்னும் வலையினுள் அப்பரமன் மனமுவந்து அகப்பட்டுக்கொண்டான்.

பரமஹம்சதேவர்: (புன்முறுவல் பூத்தவ ராக) "தாம் பகர்வது முற்றிலும் மெய். கோபி மார்கள் வழங்கிய பண்டங்களை மனமுவந்து ஸ்ரீ கிருஷ்ணன் ஏற்றுக்கொண்டான். அமிர் தம் என அவைகளைப் புசித்தான். அவர் களின் அன்புக்கு வசப்பட்டவனாக அவன் கண் ணீர் சிந்தினான். அவர்களோடு ஒரு சிறு பாலன் போன்று ஓடியாடி விளையாடினான். இங்ஙனம் அவன் தன்னை முற்றிலும் அவர் களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டான்."

பக்தர் ஒருவர்: "பங்கிம் சந்திர சட்டர்ஜி என்னும் பிரசித்தி பெற்றுள்ள எழுத்தாளர் ஸ்ரீ கிருஷ்ணனின் ஜீவிதத்தை எழுதியுள்ளார்."

பரமஹம்சதேவர்: "ஆம். அவர் ஸ்ரீ கிருஷ் ணனை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனல் ராதா கிருஷ்ண தத்துவத்தை அவர் ஏற்றுக்கொள்வ தில்லை."

சேனபதி: "அப்படியானல் அந்த நூலாசிரி யர் ஸ்ரீகிருஷ்ணன் கோபிமார்களோடு விளையா டிய லீலைகளை அங்கீகரிப்பதில்லை போலும்!"

பரமஹம்சதேவர்: "பங்கிம் மேலும் விபரீத மான கொள்கை ஒன்று படைத்திருக்கிறார். அதாவது கிருஷ்ணனை அறிந்து கொள்வதற்கு மனிதன் ஒருவனிடம் வேண்டியவாறு காமம் அமைந்திருக்க வேண்டும் என்பது அவருடைய கொள்கை."

பக்தர் ஒருவர்: "பங்கிம் தாம் நடாத்தி வரு கிற பத்திரிகையில் சமயத்துக்கு விளக்கம் தந் துள்ளார். அதாவது மனிதன் படைத்துள்ள உடல் சம்பந்தமானதும், உள்ளத்தை ஒட்டிய தும், ஆத்ம சொரூபத்தைப் பற்றியதுமாகிய பாங்குகள் அனைத்துக்கும் சமயம் இடம் தர வேண்டுமாம்."

சேனபதி: "அப்படியா! அவர் மானுட வாழ்க்கையில் காமநுகர்ச்சி இன்றியமையாத இடம் பெற்றிருக்கிறது என்னும் கொள்கை உடையவராகத் தென்படுகிறார். ஆனல் கிருஷ்ணபரமாத்மா உலகத்தவர்களுடன் கூடி யிருந்து புனிதமானதும் காமரசத்துக்கு இடம் தராததும் ஆகிய விளையாட்டுக்களை உலகத் தவர்களுடன் கூடியிருந்து விளையாடினார் என் பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. பரமன் தாமே மானுட வடிவெடுத்து வந்து பிருந்தா வனத்தில் வாழ்ந்து வந்த கோபிமார்களுட னும், அக்கோபிமார்களுக்கு முன்மாதிரியா யிருந்த திருமதி ராதையுடனும் விளையாட முடி யும் என்பதில் அவருக்கு நம்பிக்கையில்லை."

புன்னகையுடன் பரமஹம்சதேவர் பகர்ந்த தாவது: "பங்கிம் சந்திர சட்டர்ஜிக்கு வேத வாக்குக்கு நிகராக அமைந்திருப்பது சமாசார பத்திரிகை. கிருஷ்ணனைப்பற்றிய இந்த விப

ரங்கள் பத்திரிகையில் வெளியாகவில்லே. அப்படியிருக்க அவர் இதை எப்படி நம்புவார்?

"பிரமுகன் ஒருவன் தன்னுடைய நண்பனிடம் நேற்று நான் கல்கத்தா நகரிலே ஒரு வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தபொழுது பாழடைந்த வீடு ஒன்று வீழ்ந்து நிலமட்டமாவதைப் பார்த்தேன்" என்று தெரிவித்தான். 'ஆனல் இந்தச் செய்தி சமாசாரப் பத்திரிகையில் வெளியாகவில்லேயே' என்று மற்றவன் மறுத்தான். முதல்வன் மீண்டும் மொழிந்ததாவது: "அவ்வீடு விழுந்ததை நானே கண்ணரைப் பார்த்தேன்." இரண்டாமவன் "இருக்கலாம். செய்தித்தாளில் வராததை நான் நம்புவது எங்ஙனம்?" என்ருன். இதுதான் இவ்வுலகத்தவர் போக்கு.

"ஈசன் மானுட வடிவெடுத்து மண்ணுலகில் வந்து விளேயாடுகிருன் என்பதை பங்கிம் சந்திர சட்டர்ஜி எப்படி நம்ப முடியும்? இந்த விஷயத்தை அவர் தாம் கற்றறிந்துள்ள ஆங்கிலப் புஸ்தகங்களில் காணவில்லே. அத்தகைய மனப்பான்மை படைத்திருப்பவர்களுக்கு ஈசன் மானுட வடிவெடுத்து வருகிருர் என்னும் கோட்பாட்டைப் புகட்டுவது மிகக்கடினம். மானுட சரீரம் வெறும் மூன்றரை முழம் உயரமுடையது. அகண்ட வஸ்துவாகிய பரம்பொருள் இத்தகைய வடிவத்தில் தன்னே எங்ஙனம் அடக்கிக்கொள்ள முடியும்?"

சேனபதி : "கிருஷ்ணன் பரமாத்மா சொரூபம். அவனே நாம் விளக்க முயலுகின்றபொழுது பூரணன் என்கின்ற பதத்தையும் பூரணத்தின் சிறிய அம்சம் என்கின்ற பதத்தையும் நாம் கையாண்டாக வேண்டும்."

பரமஹம்சதேவர் : "பூரணன் என்பதையும் பூரணத்தின் அம்சம் என்பதையும் தீ, அதிலிருந்து கிளம்பி வரும் நெருப்புப் பொறி ஆகியவற்ருேடு ஒப்பிடலாம். பரம்பொருள் மானுட வடிவெடுத்து வருகிருர் என்னும் கொள்கை பக்தன் ஒருவனுக்குத் தேவையாயிருக்கிறது. ஞானி ஒருவன் இக்கொள்கையை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவனல்லன். அவனுடையபோக்கு அலாதியானது. அத்யாத்மிக ராமாயணத்தில் ஸ்ரீ ராமனே எங்கும் நிறைபொருளாயும், ஏனையயாவுமாயும் இலங்குகின்ருன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீயே அனைத்துமாயுள்ள ஈசன். ஆதாரம் நீயே. ஆதேயம் நீயே. மூலப்பொருள் நீயே. அப்பொருள் மூர்த்தியாக வடிவெடுத்திருப்பதும் நீயே. பரம்பொருளாய் இலங்குபவனும் நீயே. பிரபஞ்சமாய் இலங்குவதும் நீயே."

"அனைத்திலும் ஊடுருவிப் பாய்ந்திருப்பவன் இறைவனே. அனைத்துமாய் இலங்கும் பிரபஞ்சப்பொருளும் அவனேயாம்" என்ற சேனபதி மேலும் மொழிந்தார்: "கிருஷ்ணன் விஷயத்தில் இக்கோட்பாடு முற்றிலும் பொருத்தமானது. எங்கும் நிறைபொருளாயுள்ள பரவஸ்து ஒரு மூர்த்தியின் வடிவத்தில் அடங்கியதாகவும் தன்னே விளக்கிக்கொண்டிருக்கிறது."

இங்ஙனம் பரமஹம்சதேவரும் சேனபதியும் ஆங்குக் குழுமியிருந்த பக்தர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபொழுது பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த ஜெயகோபால்சேனரும், திரைலோக்கியரும் அங்கு வந்துசேர்ந்தார்கள். அவர்களிருவரும் பரமஹம்சதேவரை வணங்கிவிட்டுத் தரையிலே அமர்ந்தார்கள். புன்னகை பூத்தவராகப் பரமஹம்சதேவர் திரைலோக்யரைப் பார்த்தார். அதன் பிறகு சம்பாஷணை தொடர்ந்து நடைபெறுவதாயிற்று.

"சாதகன் ஒருவன் பரத்தின் காட்சியைப் பெறுவதற்கு இடைஞ்சலாயிருப்பது அகங்காரம் என்னும் மரக்கட்டையாம். பரமனைக் காண விரும்புகிறவன் அதைத்தாண்டி உள்ளே நுழைதல் வேண்டும். மானுடனெருவன் பிசாசைத் தான் விரும்பியவாறு ஆட்டும் சித்தியைப் பெற்றிருந்தான். ஒரு நாள் பிசாசு ஒன்றை இவன் ஏவினன். அது அவன் எதிரே வந்தது. "நான் உனக்கு என்ன செய்யவேண்டும்? கட்டளேயிடு" என்று பிசாசு அவனிடம் தெரிவித்தது. "நீ எனக்கு வேலே கொடுக்காவிட்டால் உன் கழுத்தை நான் ஒடித்துவிடுவேன்" என்று பயமுறுத்தியது. அம்மனிதன் விரும்பிய யாவற்றையும் பிசாசு செய்துமுடித்தது. மேற்கொண்டு அதற்கு வேலேதர அவனுக்கு இயலவில்லே. "வேலே தருகிருயா அல்லது நான் உன் கழுத்தை ஒடிக்கட்டுமா" என்றது அப்பிசாசு. அப்பிசாசிடம் சுருட்டை மயிரை நிமிர்த்துத் தரும்படி ஆணையிட்டபொழுது அம்முயற்சியில் அது தோல்வியுற்றது. சுருட்டை மயிருக்கு நிகரானது அகங்காரம். அகங்காரத்தைத் துறக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிருன்."

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-13

உலகெங்கும் நாம் காணுகிற காட்சி ஒன்று உளது. சமுதாயத்துக்கு ஏதாவது நலனை அமைக்க வேண்டுமென்றால் அதன் பொருட்டுத் தியாகமூர்த்தி ஒருவன் தோன்றுவது அவசியமாகிறது. தியாகத்தாலேயே அரிய பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன. அவ்விதம் ஒருவனால் அமைக்கப்பெற்றுள்ள நலன்களை உலகமக்கள் ஏராளமானபேர் பயன்படுத்துவார்கள். எங்குச் சென்று பார்த்தாலும் இது தான் உண்மை என்று உணரலாம்.

ஒருவன் உய்வடைதற்பொருட்டுத் தன் சுக போகங்களனைத்தையும் துறப்பதில் சிறப்பு ஒன்றும் இல்லை. நான் என்னும் அகம்பாவமே முதலில் அம்முயற்சியின் பின்னணியிலிருந்து கொண்டு அவனை அங்ஙனம் தூண்டுகிறது. ஆனால் 'யான், எனது' என்னும் செருக்கினை வேரறுப்பவனே முடிவில் சாலச் சிறந்தவனாகிறான். உலக நன்மையின் பொருட்டுத் தான் அடைய விரும்புகிற பாரமார்த்திகப் பேற்றினையும் மறந்திருப்பவனே நல்ல தியாகியாகிறான். அத்தகைய உயர்நிலையை நீ அடைதல் வேண்டும். நீ பூண்டுள்ள இலட்சியத்தின் சிறப்பை உன்னுடைய மனையாளுக்கும் எடுத்துப் புகட்டுவாயாக. மணம்புரிந்துள்ள இருவர் கருத்தும் இந்த மேலான விஷயத்தில் ஒன்றுபட்டிருத்தல் முற்றிலும் அவசியமாகிறது. சரீர சம்பந்தமான சுகபோகங்கள் அனைத்தையும் நீங்கள் இருவரும் ஒன்றுகூடி அறவே துறத்தல் அவசியமாகிறது. அரிய பெரிய காரியங்கள் சாதிப்பதற்குத் தூய வாழ்வு முற்றிலும் இன்றியமையாததாகிறது. சுகஜீவனமும், பரநலசேவையும் ஒருபொழுதும் ஒன்று சேர்ந்து இருக்கமாட்டா.

சமுதாயத்தின்மீது நீ வைத்துள்ள அன்பு பேரன்பாகப் பரிணமித்தல் வேண்டும். அன்பு ஓங்குதற்கேற்பத் தியாகமும் தானே வந்து அமைகிறது. அத்துடன் நீ எடுத்துக்கொண்டுள்ள இலட்சியத்தில் பேருக்கம் படைத்தவனாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறாய். உற்சாகமும் ஊக்கமும் சதா உன்னுடைய உள்ளத்தில் ததும்பிக்கொண்டிருத்தல் வேண்டும். தூய வாழ்வில் தொடர்ந்து இங்ஙனம் அன்பும் ஆர்வமும் படைத்தவனாக நீ இருப்பாயாகில் தெய்வீகம் தானாக உன்னுடைய உள்ளத்தில் வடிவெடுப்பது திண்ணம். வெற்றிக்கு இதுவே உற்ற உபாயமாம்.

இங்ஙனம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தர்மப் பிரச்சாரத்திற்கென்றே ஒப்படைத்தல் வேண்டும். அங்ஙனம் நீ செய்வாயாகில் பரமஹம்சதேவர் புகட்டியுள்ள பெருநெறியை நீ உள்ளபடி அனுஷ்டித்தவனாகின்றாய். பக்தி சாதனத்தில் நீ தீவிரமாக ஈடுபடுவாயாக.

இயன்றளவு நீ சமஸ்கிருதம் கற்றுக்கொள். சாஸ்திர ஆராய்ச்சியும் சிறிது செய்வாயாக. பரமஹம்சதேவர் அருளியதாவது: "தற்கொலை புரிந்துகொள்வதற்குப் பேனாக்கத்தி ஒன்று போதுமானது. ஆனால் பிறரோடு சண்டை போடுவதற்குப் பல ஆயுதங்களும் தேவையாகின்றன."

சமயத்தின் பெயரால் யார் யாரோ விபரீதமான கொள்கைகளைப் படைத்திருக்கின்றனர். சிறந்த கோட்பாடுகளை ஆர்வமுடையவர்களுக்கு எடுத்துக்காட்டுவது உன் கடமை. இறைவனருளால் நமது சமுதாயத்திற்கும் சனாதன தர்மத்திற்கும் இன்று நல்ல காலம் வந்துகொண்டிருக்கிறது. சனாதன தர்மத்தை உறுதியாகக்கடைப்பிடிப்பதன் வாயிலாகவே நம் நாடு மீண்டும் உய்வு அடையப் போகிறது.

எது தர்மம், எது அதர்மம் என்பதை அறிந்துகொள்வது மிகக் கடினமானது. தியாகமும் தூய்மையும் வாய்க்கப்பெற்ற தொண்டர்களிடத்துத் தூய நன்னெறி திகழ்வது அவசியமாகிறது. நாட்டிலுள்ள கேடுகள் பலவற்றிற்குக் காரணம் மிகைப்பட்ட சமய அனுஷ்டானம் என்று கூறிச் சிலர் சமயத்தைத் தாக்குகின்றனர். ஆகையினால் தான் எது தர்மம், எது அதர்மம் என்பதைத் தொண்டர்கள் தெளிவுற அறிந்திருப்பது அவசியமாகிறது. நன்னெறியைக் கடைப்பிடிக்கின்ற சமுதாயம் ஒருநாளும் கெட்டுப்போகாது. நன்னெறியின் பெயரால் சமுதாயம் அனுஷ்டிக்கும் துன்மார்க்கமே அதைப் பின்னணிக்கு உந்தித்தள்ளும். ஆகையினால் நன்னெறியை அறிந்து அதன்படி நடக்கவேண்டும்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

12-12. எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

குடும்பம் ஒன்றில் தாய் தந்தையர் மக்கள் இருக்கின்றனர். வடிவத்தில் அவர்கள் பலர் எனினும் ஒருவரை ஒருவர் வேற்றுராகக் கருது வதில்லே. அதற்கேற்ற காரணமும் உண்டு. தாய் தந்தையரின் சொரூபங்களே மக்கள் வடி வெடுத்து வந்திருக்கின்றன. எனவே எக் காரணத்தை முன்னிட்டும் அவர்களுக்கிடை யில் பிளவு வாராது காப்பது நல்லது. இவ் உண்மை பிரபஞ்சத்திற்கும் ஒத்ததாகிறது. உலகனைத்தும் ஆனய் நீயே என்பது மறை மொழி. உயிர்களுக்கிடையில் நல்லவர்கள் கெட்டவர்கள் ஆகிய இரு தரத்தாரும் இருக் கின்றனர். கூடியவரையில் கேடுடைய சகோ தரனைக் கெட்டவனுகக் காணுது தன் சகோ தரன் எனக் காண்பது உலகத்தவர் இயல்பு.

இனி, ஞானியர்கள் உலக முழுதையும் கடவுள் சொரூபமாகக் காண்கின்றனர். 'புலி யாய் வடிவெடுத்திருப்பவனும் நாராயணனே. போக்கிரியாய் வடிவெடுத்திருப்பவனும் நாரா யணனே. நல்லவனுய் வந்திருப்பவனும் நாரா யணனே; பக்தனுய்ப் பரிணமித்திருப்பவனும் நாராயணனே' என்பது ஆன்றேர் வாக்கு. இதுதான் உலகைப் பற்றிய உண்மை. இத் தகைய ஞானக்காட்சியே மெய்க்காட்சியா கிறது. பிரபஞ்சத்தைப் பிரபஞ்சமாகக் காண் பவன் அக்ஞானி. பிரபஞ்சத்தைக் கடவுளாகக் காண்பவன் நிறைஞானி. தவத்தின் வாயி லாகத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொண்ட வர்களே இத்தகைய மெய்க்காட்சிக்குத் தகுதி யுடையவர்களாகின்றனர்கள். வேற்றுமையை வளர்ப்பது அக்ஞானம். ஒற்றுமையை வளர்ப் பது ஞானம்.

இதை விளக்கப் பரமஹம்ச தேவர் ஓர் உப மானக் கதையைச் சொல்லுகிறர். ஒரு கிரா மத்தில் மடம் ஒன்று இருந்தது. ஒரு நாள் சாது ஒருவர் தெருவழியே போய்க்கொண்டி ருந்தார். அப்போது ஒரு மிராசுதார் ஏழைக் குடியானவன் ஒருவனைக் கடுமையாக அடிப் பதைக் கண்டார். அந்த மிராசுதாரரிடம் அவனை அடிக்க வேண்டாம் எனச் சாது கேட்டுக் கொண்டார். ஆனல் கோபத்திலிருந்த அந்த மிராசுதார் சாதுவை அடிக்கவே சாதுவானவர் கீழே மூர்ச்சித்து விழுந்துவிட்டார். இந்தச் செய்தி அவர் இருந்த மடத்திற்கு எட்டியது. அம்மடத்திலிருந்த ஏனைய சாதுக்கள் அந்தச் சாதுவை மடத்திற்குத் தூக்கிக்கொண்டுவந்து சிகிச்சை அளித்தனர். பிரக்ஞையடைந்த சாதுவானவர் தங்களை அடையாளம் கண்டு கொண்டாரா என்பதைத் தெரிந்துகொள்வதற் காக 'சுவாமி எங்களைத் தெரிகிறதா' என்றுர் கள். அதற்குச் சாது 'எந்தக் கை என்னை அடித்ததோ அதே கை எனக்கு இப்பொழுது சிகிச்சை அளிக்கிறது' என்றுர். அந்த நிலையை அடைவதற்கு நாம் அனைத்தையும் ஈசன் சொரூபமாகப் பார்த்துப் பழகவேண்டும். நாம் யாரோடு இணக்கம் பூண்டாலும் ஈசனுடன் இணக்கம் பூணுவதாகப் பாவனை செய்து வந் தால் அந்தப் பாவனையே உணர்வாக மாறி யமைகிறது. பிறகு விருப்பு வெறுப்பு மயமாக, நலன் கேடாகக் காட்சியளித்த உலகம் ஈசன் மயமாகக் காட்சி அளிக்கும். நமது மனது மாற மாறப் புறவுலகமும் மாறியமைவதைக் காண லாம். இது ஒரு நாளில் வந்துவிடுவதன்று. நமது இணக்கத்தைத் தெய்வீக இணக்கமாகத் திருத்தியமைப்பதன் மூலமாகத் தெய்வ தரிச னம் பெறலாம். இந்த ஞானக் காட்சியை உணர்ந்தவர்கள் தபோதனர்கள் ஆகிறுர்கள். அந்தத் தவசிரேஷ்டர்களின் வழியைப் பின்பற் றித்தான் நல்லோர் வாழ்க்கை நடந்துகொண் டிருக்கிறது. பிறருக்குஎடுத்துப்புகட்டுபவர்களை விடத் தாங்களே வாழ்ந்து காட்டுபவர்கள் தாம் உண்மையில் மேன்மக்கள் ஆவர். இப்படித்தான் வாழவேண்டும் என்ற செய்தியை அந்தச் சான் றேர்கள் தங்களின் மேலான வாழ்வின் மூலம் விளக்கிக் காட்டுகிறுர்கள். தவத்தில் மேலே சென்றவர்களின் நெறியைக் கடைப்பிடிப்பவர் கள் அச்சான்றேர் அடைந்த நிலையை அடை கிறுர்கள். இதுவே இக்கண்ணியின் பொருள்.

ஞான வெட்டியான் - 14

ஏற்பது இகழ்ச்சி என்பது கோட்பாடு. ரிஷி புத்திரனாகிய நசிகேதன் தருகிற விளக்கமே இதற்குத் தலைசிறந்த விளக்கமாம். பண்பட்ட ஜீவன் ஒருவன் தன் முயற்சியால் பெறக்கூடிய ஒன்றைத் தானமாகக் கடவுளிடத்திருந்தும் ஏற்றுக்கொள்ளலாகாது என்பது அவனுடைய முடிந்த கொள்கையாம். ஆனால் சிவனார் தாமே இதற்கு மாறாக நடந்துகொள்கிறார். பிக்ஷாடனர் என்பது அவரது பெயர். அது இரந்துண்பவன் என்றும் பொருள்படுகிறது. புத்தமதத்தைச் சேர்ந்த துறவியர்கள் பிக்ஷுக்கள் என அழைக்கப்படுகின்றனர். இரந்துண்பவர்கள் என்பது அதன் பொருள். சிவனாரும் பிக்ஷுக்களும் மக்களுக்கு நல்வாழ்வின் எடுத்துக்காட்டுகளாக இலங்குகின்றார்கள். அன்னவர்கள் தாமே உணவைப் பிறரிடமிருந்து ஏற்று உண்பது எப்படிப் பொருந்தும் என்பது பெரிய கேள்வி. இதற்குத் தக்க விடை காண நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

சிவனாரும் சரீரம் தாங்கி வந்துள்ள புத்தர் பெம்மானும் நாள்தோறும் நண்பகலில் கையில் பிக்ஷாபாத்திரம் ஏந்தி 'பிக்ஷாம்தேஹி' என்று வீதியில் கிளம்பி வருகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து யாசகன் ஒருவனும் வருகின்றான். வடதுருவம் தென்துருவம் போன்று ஒன்றோடொன்று ஒவ்வாத இரண்டு மனநிலைகளை இங்குக் காண்கின்றோம். புத்தர்பெம்மான் சரீர உணர்வை அறவே தாண்டியவர். ஆத்மா வேறு, சரீரம்வேறு என்பதற்கு நல்ல விளக்கமாக அன்னவர் அச்செயலில் ஈடுபடுகின்றார். புத்தர்பெம்மான் அன்னத்தை ஐயமாக ஏற்பதுபோன்று தென்படுகின்றார். உண்மையில் அச்செயல் பிரகிருதியின் கூறு. ஆத்ம சொரூபத்தை அச்செயல் தொடுவதில்லை என்பதற்குச் சான்றாக அவர் செயல் அமைந்திருக்கிறது. விசுவத்துக்கே நாதனாயிருக்கின்ற சிவனார் தாமே பிக்ஷாடனாக வருவதன் பொருள்: 'மானுடா! இவ்வுலகை ஆத்ம சொருபமாகக் கருதாதே. உடல் உலகுக்குரியது. ஆத்ம சொரூபமோ உலகுக்கு அப்பாற்பட்டது என்பதாகும்." இக்கொள்கைக்குஎடுத்துக்காட்டாகச்சிவனும் துறவிவேந்தனாகிய புத்தர்பெம்மானும் இலங்குகின்றார்கள். இனி வீதியிலே அம்மா சோறு போடு என்று வருகிறவன் பிரபஞ்ச வாழ்க்கையின் ஆரம்ப தசையில் இருக்கிறான். உடல் உணர்ச்சியைத் தவிர மேலாம் தத்துவம் எதனையும் அவன் அறியான். நல்லுணவு படைத்தவரை வாழ்த்துவதும் படைக்க மறுத்தவரை வைவதும் அவனுடைய பாங்கு. முற்றத்துறந்த துறவியோ உடம்புக்கும் ஆத்ம சொருபமாகிய தனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்னும் அதீத நிலையில் நிலைத்திருக்கிறான். அத்தகைய துறவி யாரையும் போற்றுவதுமில்லை, தூற்றுவதுமில்லை. யாண்டும் சொரூபத்திலேயே அன்னவன் நிலைத்திருக்கிறான். சீரிய மனநிலையை உலகுக்கு அவன் வழங்குவதன் வாயிலாக ஐயமிட்டுண் என்னும் கோட்பாட்டை நிறைவேற்றுகிறான்.

தர்மத்தின் பாங்கை அறிந்து கொள்ளுதல் மிகக் கடினம். வறியவனாயுள்ள யாசகனுக்கு ஐயமேற்று உண்டு பிழைப்பது அறமாகிறது. ஆனால் நல்ல குடிமகன் அங்ஙனம் செய்யலாகாது. இவ்விரு தரத்தாருக்கும் மேலாகத் துறவி ஒருவன் இருக்கிறான். அவன் பணம் சம்பாதிப்பதில்லை. ஏனென்றால் அவனுடைய பெருவாழ்வு உடலின் கூறுக்கு அப்பாற்பட்டது. உடல் இருப்பதைப் பற்றியோ அழிந்துபோவதைப் பற்றியோ அவன் எண்ணுவதில்லை. பிராரப்த கர்மத்தின் விளைவாக அதற்குத் தேவையான உணவு அன்னபூரணியின் அருளால் தானாக வந்தமைகிறது. எங்குச் சென்றாலும் துறவி தனது மனநிலை பிசகாதிருக்கிறான். பரமாத்ம சொரூபத்துக்கு அன்னியமான எந்த எண்ணமும் அவனுடைய உள்ளத்தில் இடம்பெறுவதில்லை. இத்தகைய சீரிய எண்ணத்துடன் அவன் உலகில் நடமாடுவதன் வாயிலாகச் சீரிய எண்ணத்தை உலக மக்களுக்கிடையில் பரப்புகிறான். இதற்கு நிகரான கொடை வேறு ஏதுமில்லை. ஐயமேற்று உண்பவன் போன்று தென்படுகின்ற துறவி உண்மையில் இவ்வுலக சம்பந்தமான எதையும் ஏற்பதில்லை. மற்று, தெய்வீக உணர்வை மக்களுக்கிடையில் அவன் அமைதியாக வழங்குவது ஒப்பற்ற கொடையாம்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

128. वेदविद् வேதவித் வேதத்தை அறிகிறவன்.

வேதம் என்பது மனிதனல் எழுதப்பட்ட நூல் அன்று. இயற்கையின் அமைப்பு முழுதும் வேதம் எனப்படுகிறது. இதை அறிந்து கொள்ளுதற்கேற்ப மனிதனுடைய வாழ்வு பெருவாழ்வாக மேன்மையடைகிறது. வேதத்தின் அமைப்புத்தான் என்ன? உயிர்கள் அனைத்தும் விரும்புபவற்றை விரும்பியவாறு அடையப் பெறுகின்றன. அத்தகைய உயிர்களுக்கிடையில் மனிதன் மட்டும் அலாதியான இடம் பெற்றவனாக இலங்குகிறான். மானுட ஜன்மத்தின் சிறந்த குறிக்கோள் பிரபஞ்சத்தைத் தன் சுயநலனுக்காகப் பயன்படுத்துவது அன்று; தான் உலகுக்கு எவ்வளவுக்கெவ்வளவு பயன்படுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு சீரும் சிறப்பும் மனிதனுக்கு வந்து வாய்க்கின்றன. இவ் உண்மையை அறிந்திருந்தால் மட்டும் போதாது. அதற்கேற்றவாறு தன் ஜீவிதத்தை மனிதன் உலகுக்குப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிக் கற்றுக்கொள்வதற்கேற்ப அவனுடைய வாழ்க்கையும் திருந்தியமைவது அவசியமாகிறது. எனவே ஒவ்வொரு மனிதனுடைய அறிவும் அவன் வாழ்ந்து வருகிற வாழ்க்கையினின்று வெளியாகிறதாம்.

129. अव्यङ्गा அவ்யங்கா பொறிபுலன்களுக்கு எட்டாதவன்.

கடலில் இரண்டு பகுதிகள் உள. ஒன்று அதன் மேற்பரப்பு. மற்றது அதன் அடிமட்டம். மேற்பரப்பு காட்சிக்கு உரியது. இதற்கு ஆதாரமாகவிருக்கும் கீழ்ப்பரப்போ கட்புலனாவதில்லை. ஆயினும் நிறைபொருளாயிருப்பது கடலின் கீழ்ப்பகுதியேயாம். அதே விதத்தில் இறைவன் உலகாகத் தோன்றியிருப்பது மிகக் குறைவு. தோன்றாதிருக்கும் பகுதியோ அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. இக்கோட்பாட்டை ஆத்மசாதகன் அனுஷ்டானத்தில் கொண்டு வருவது எங்ஙனம் என்பது கேள்வி. பொறிபுலன்களை அவன் அடக்கிவைத்துப் பழகும் அளவு அவனுடைய ஆற்றல் அதிகரிக்கிறது. மற்று பொறிபுலன்களுக்கு அடிமைப்படுகின்ற அளவு அவனுடைய ஆற்றல் தேய்கிறது. நிறைகுடம் ததும்புவதில்லை. பரமன் நிறைகுடம்போன்று அமைதியுற்றிருக்கிறான். சாதகன் இக்கோட்பாட்டை முறையாக அனுஷ்டிப்பதற்கேற்ப மேன்மையுறுகிறான்.

130. वेदाङ्गा வேதாங்கா வேதங்களை அவயவங்களாக உடைத்திருப்பவன்.

அறிந்துள்ள ஒன்றை உபாயமாக வைத்துக்கொண்டு அறியாப்பொருளை அறிந்துகொள்ள முயலுகிறோம். சான்றொன்று எடுத்துக்கொள்வோம். பாதையில் நடந்துபோகும் மனிதன் ஒருவன் ஒரு வீட்டைப் பார்த்தான். அதில் யாரும் குடியில்லை என்ற முடிவுக்கு வந்தான். மேலும் நடந்து சென்றான். மற்றொரு வீட்டைப் பார்த்தான். பார்த்தவன் அவ்வீட்டை அணுகினான். குடியிருப்பவர் யாரும் அவன் கண்களுக்குத் தென்படவில்லை. ஆயினும் அவ்வீட்டின் வாயிலில் கோலம் போடப்பட்டிருந்தது. வீட்டினுள்ளே அடுப்பில் தீ எரிந்து கொண்டிருந்தது. அடுப்பின் மீது ஏற்றிவைக்கப்பட்டிருந்த பாத்திரத்தினுள் ஏதோ கொதித்துக்கொண்டிருந்தது. இதைப்பார்த்தவன் இங்கே யாரோ குடியிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்தான்.

இதே பாங்கில் வேதம் என்னும் சொல் இவ்வுலகைக் குறிக்கிறது. இதில் உள்ள எந்தப் பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அது அறிவு சொரூபமாக இலங்குகிறது. ஆகவே ஏதோ அறிவுப் பொருள் ஒன்று உலகம் முழுதும் வியாபித்திருக்கும் உண்மையை ஆராய்ச்சிக்காரர் அறிய வருகிறார்கள். எனவே கட்புலனாகின்ற உலகைச் சரியாக அறிந்து கொள்ளுதல் வாயிலாக இதில் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் இறைவனுடைய சாந்நித்தியத்தை யூகித்து அறிய வருகிறோம்.

131. वेदविद् வேதவித் வேதத்தை ஆராய்பவன்.

எழுதி வைத்த வேதங்களை ஆராய்கின்றவன் வெறும் ஆராய்ச்சியாளனாகவே இருந்து வருகிறான். ஆனால் உலகோடு நல்லிணக்கம் வைக்க அறிந்துகொள்பவனுடைய வாழ்வு

மேன்மையுறுகிறது. அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கேற்ப அவனுடைய வாழ்வு விரிவடைகிறது. இதுவே மானுட ஜன்மத்தின் சிறந்த குறிக்கோளாம். ஆகையினால் வேத ஆராய்ச்சியை யாரும் தனியுடைமையாக்கலாகாது. அதைப் பொது உடைமை ஆக்குபவனே வேதத்தின்உட்ப் பொருளை உள்ளபடி அறிந்தவனாகிறான்.

132. कविः கவி: அனைத்தையும் காண்போன்.

இக்காலத்தில் கவிதை அல்லது பாட்டுக் கட்ட வல்லவனைக் கவி என்றும் கவிஞன் என்றும் கூறுவது வழக்கம். ஓரளவில் இதில் பொருள் உண்டு. ஏனென்றால் கவிஞன் ஒருவன் தாற்காலிகமாக உண்மையை உள்ளபடி உணருகிறான். அந்த உணர்வை யாப்பாக அமைக்கும் வல்லமையும் அவனுக்கு உண்டு.

ஆனால் கவி என்னும் சொல் பரமனையே குறிக்கிறது. இக்காலத்திற்குரிய அனைத்தையும் இறைவன் சதா கண்டு கொண்டு இருக்கிறான். அவனை முறையாக அணுகுகின்ற சாதகர்களும் அவனருளால் அத்தகைய வல்லமையைப் பெறுகிறார்கள். உண்மையை உள்ளபடி காணவும், விளக்கவும் வல்லவனாயிருப்பவன் கவி. இது பரமனுக்கே முற்றிலும் சாத்தியமாகிறது.

133. लोकाध्यक्षा லோகாத்யக்ஷா லோக அத்யட்சன். உலகம் யாவையும் மேற்பார்வையிடுவோன்.

உலக வழக்கில் சர்வகலாசாலை ஒன்றுக்குக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவனுக்கு அத்யட்சன் என்னும் பெயர் வருகிறது. ஆனால் இப்பெயர் பரமனுக்கே முற்றிலும் பொருத்தமானதாம். ஏனென்றால் பிரபஞ்சம் முழுதின் நடைமுறையை அவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். அப்பரமன் எல்லார் உள்ளத்திலும் மனச்சாட்சியாக வீற்றிருக்கிறான். எவ்வுயிரும் மனச்சாட்சிக்குப் புறம்பாக அல்லது அதற்கு எட்டாத பாங்கில் நடந்து கொள்ளமுடியாது. இந்த உயிர்களின் தொகையாகப் பிரம்மதேவன் இருக்கிறான். அவன் நான்குமுகம் படைத்திருப்பதே எல்லாத் திக்குகளிலுமுள்ள அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்தகைய நான்முகக் கடவுளையும் பரமன் தோற்றுவிக்கிறான். அவனுடைய காட்சிக்குப் புறம்பாக நிகழ்வது யாதுமில்லை.

134. सुराध्यक्षा ஸுராத்யக்ஷா தேவர்களுடைய செயல்களை மேல் பார்வை இடுபவன்.

சுரன் அல்லது தேவன் என்னும் பதம் இந்திரியத்தையும் குறிக்கிறது. இந்திரியத்தின் செயலை அது தனக்குத் தானே நிகழ்த்திக் கொள்ள முடியாது. தொலைபேசி என்னும் கருவி ஒன்று இருக்கிறது. தனக்குத்தானே அது இயங்க முடியாது. அதைப் பயன்படுத்துவதற்கு அறிஞன் ஒருவன் தேவை. அதே விதத்தில் இந்திரியங்களின் செயல்களுக்கெல்லாம் தலைவனாயிருப்பவன் பரமன்.

135. धर्माध्यक्षा தர்மத்யக்ஷா தர்மத்தைக் கண்காணிக்கிறவன்.

'யானேதும் அறியாது என் உள்ளத்துள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்' என்பது ஆப்தமொழி. நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை என்பதும் கோட்பாடு. இங்கு நெஞ்சு என்பது வெறும் மனது மட்டுமன்று. அந்த மனதுக்கு அதிஷ்டான தெய்வமாக இறைவன் வீற்றிருக்கிறான். ஜீவாத்மா செய்கின்ற நல்வினை தீவினையாகின்ற கர்மங்களுக்கேற்ற சன்மானம் அல்லது தண்டனையையும் அவன் விதிக்கிறான். எது மனிதனை முன்னேற்றமடையச் செய்கிறதோ அது தர்மம் எனப்படுகிறது. எதைச் செய்தால் மனிதன் கீழ்மையுறுகிறானோ அது அதர்மம் எனப்படுகிறது. மனச்சாட்சியாயிருக்கும் இறைவன் தர்மத்துக்கு ஆமோதிப்பும் அதர்மத்துக்கு ஆக்ஷேபமும் சர்வகாலமும் செய்து வருகிறான்.

136. कृताकृता க்ருதாக்ருதா காரியம் காரணம் ஆகிய இரண்டுக்கும் கர்த்தாவாயிருப்பவன்.

பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற செயல்களனைத்தும் காரணமாகவும் காரியமாகவும் வந்து கொண்டிருக்கின்றன. மரத்துக்குக் காரணம் வித்து; வித்துக்குக் காரணம் மரம். காரண காரியமாகப் பிரபஞ்ச வாழ்க்கையை வளர்த்துக்கொள்வது பிரவிருத்தி. பிரபஞ்ச வாழ்வை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது நிவிருத்தி. பரமன் இவ் இரண்டையும் தர வல்லவனாயிருக்கிறான்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (446) நாராயணனை வணங்குவோர் திருமண் அணிகின்றனர். சிவனை வணங்கு வோர் திருநீறு அணிகின்றனர். இதன் உண்மை என்ன?

இவ்விரண்டு செயல்களின் உட்பொருள் ஒன்றேயாம். வைஷ்ணவர்கள் திருமண் அணிந்து கொள்வதன் வாயிலாக 'இவ்வுடல் வாழ்வு நித்தியமானதன்று, ஒருநாள் உடல் மண்ணாகப்போம், பரமனே நித்திய வஸ்து' என்னும் கோட்பாட்டை வைஷ்ணவ சமயம் வெளிப்படுத்துகிறது. அதே கொள்கையை மற்றோர் விதத்தில் சைவ சமயம் வெளிப் படுத்துகிறது: முடி சார்ந்த மன்னனும் முடி வில் ஒரு பிடி சாம்பல் ஆவது திண்ணம் என் னும் வாழ்க்கைக் கோட்பாட்டைத் திருநீறு அல்லது சாம்பல் நெற்றியில் அணிவதன் மூலம் நாம் விளக்குகின்றோம். உடல் வாழ்வு நிலை யற்றது என்னும் உண்மை இதன் மூலம் மனிதனுக்கு ஞாபகமூட்டப்படுகிறது.

இவ்வுண்மையை ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர் சிறுவர்களுக்கும் விளங்குகின்ற பாங் கில் ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகின் றார். படகு தண்ணீரின் மீது மிதக்கிக்கொண் டிருக்கலாம். ஆனால் படகுக்குள் தண்ணீர் புகுந்துவிடலாகாது. அதே விதத்தில் மனிதன் உடலில் வர்ழ்ந்திருக்கலாம். ஆனால் உடல் பற்று என்னும் தண்ணீர் அவனுடைய உள் ளத்தில் புகுந்துவிடலாகாது.

உடல்பற்றை நீக்கிய மனிதனே உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வருகிறான். இதுவே திரு மண் அணிபவர், திருநீறு அணிபவர் ஆகிய இரண்டு சமய அனுஷ்டானர்களும் ஞாபகத் தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயமாம்.

கேள்வி: (447) கட்டாய ராணுவப்பயிற்சி சமு தாயத்திற்குப் பயன்படுமா?

ராணுவப் பயிற்சி என்பது உடலைத் திண்ணிய தாக்குதலும் உள்ளத்தினுள்ளே அஞ்சாத் தன்மை படைத்திருப்பதும் ஆகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என் பது கோட்பாடு. உடலைத் திண்ணியதாக்கு தற்குப் பதிலாக மெலிந்த நிலையிலேயே அதை விட்டு வைப்பது அறிவுடையவன் செயல் ஆகாது. தக்க பயிற்சியின் மூலமாக உடலை உறுதிப்படுத்துதல் ராணுவப் பயிற்சியாம். ஆபத்து வந்து வாய்ப்பது உயிர்கள் அனைத் துக்கும் பொதுவானது. ஆதலால் மனிதன் இதற்கு விலக்காகமாட்டான். இனி ஆபத்தைச் சமாளிப்பதற்கு மனிதனுக்கு யாண்டும் உற்ற துணையாயிருப்பது தைரியம் ஒன்றேயாம். நல் வாழ்வுக்கு இன்றியமையாத தைரியத்தைப் பெறுவதற்கு உற்ற உபாயமாயிருப்பது ராணு வப் பயிற்சி ஒன்றேயாம். எனவே நல்வாழ்வு வாழ விரும்பும் சமுதாயம் ஒன்றிற்கு இராணு வப் பயிற்சி முற்றிலும் இன்றியமையாதது.

பள்ளிக்கூடங்களில் ராணுவப் பயிற்சியைக் கட்டாயமாக வைப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

கேள்வி : (448) விஞ்ஞானம் அதிகமானால் பிரச்னைகள் அதிகம். அதுபோன்று வேதாந்தம் அதிகமானாலும் பிரச்னைகள் அதிகம்தானே?

இயற்கையின் பாங்கு எத்தகையது என் பதை அறிந்து அதை மனிதனுடைய வசதிக் காகவும் சுக ஜீவனத்திற்காகவும் பயன்படுத் துவது பௌதிக விஞ்ஞானம். இந்தப் பௌதிக விஞ்ஞானத்தைப் பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுவாமி விவேகானந்தர் அமெரிக் காவில்இருந்த பௌதிக விஞ்ஞானிகள்கூட்டத் தில் இயம்பியதாவது: 'As Science advances man degenerates.' பௌதிக விக்ஞானம் முன் னேற்றம் அடைவதற்கேற்ப மானுட வர்க்கம் க்ஷீணதசையடைகிறது. இது சுவாமி விவே கானந்தருடைய தனி அபிப்பிராயமட்டுமன்று. சாங்க்ய தர்சனம் இயற்கையின் பாங்கு களை இயம்புதற்கிடையில் எச்சரிக்கை யொன்று செய்திருக்கிறது. இயற்கை நல்கு கின்ற வசதிகளை மிகைபட அனுபவிப்பதற் கேற்ப மனிதன் அதற்கு ஈடு கொடுத்தாக வேண்டும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறது. நவீன மனிதன் எப்படி ஈடுகொடுத்து வரு கிறான் என்பதை ஆராய்வோம். பௌதிக விக்ஞானத்தில் மருத்துவத்துறையில் மனிதன் அடைந்திருக்கும் முன்னேற்றம் இவ்வளவு அவ் வளவு அன்று. கிட்டத்தட்ட மரணத்தை வெல்லும் தறுவாயில் மனிதன் வந்திருக்கிறான்.

தொழிற்சாலைகளை மனிதன் ஏராளமாக அமைத்திருக்கிறான். போக்குவரத்து வசதிகள் மிக அருமையாக அமைந்திருக்கின்றன. ரேடியோ மூலம் உலகில் எந்தப் பகுதியில் நிகழுகின்ற எச்செயலும் அதிவிரைவில் உலகெங்கும் எட்டும்படி செய்யப்படுகிறது. மேலான கருத்துக்கள் அடங்கிய புஸ்தகங்களை அச்சடிப்பதற்கு அற்புதமான அச்சு எந்திரசாலை அமைக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் எந்திரங்களைக்கொண்டே பயிர்த்தொழில் பண்ணி உணவுப்பொருள்கள் ஏராளமாக உற்பத்தி பண்ணப்படுகின்றன. நெசவுத் தொழில் விருத்தியும் அத்தகையதேயாம். வீடு கட்டுதற்கான வசதிகள் அற்புதமாக அமைந்திருக்கின்றன. கோடை வெப்பத்தின் கொடுமையையும், பனிக் காலத்தில் குளிரின் கொடுமையையும் பௌதிக விஞ்ஞானத்தின் துணைகொண்டு தவிர்க்கவல்லவனாக நவீன மனிதன் இருக்கின்றான். உணவுப் பொருள்கள் அற்புதமான பாங்கில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. இருந்த இடத்தில் வசதியாக அமர்ந்துகொண்டு உலகில் நிகழுகின்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் டெலிவிஷன் மூலம் மனிதன் காண வல்லவனாகவிருக்கிறான். தொலைபேசியின் துணைகொண்டு உலகெங்குமுள்ள மக்களோடு இருந்த இடத்திலிருந்துகொண்டு மனிதன் பேசுகின்றான். இவ்வையகம் போதாது என்று சந்திரலோகம் போன்ற மற்ற உலகங்களுக்குப் போக இக்காலத்திய மனிதன் வல்லவனாயிருக்கிறான்.

இத்தனை வசதிகளுக்கிடையில் மனிதனுடைய கவலையும், அச்சமும் அதிகரித்து வருகின்றன. நோய்க்குச் சிகிச்சை முறைகள் அதிகரிப்பதற்கேற்ப நோய்கள் அதிகரிக்கின்றன. சிகிச்சை முறையில் ஒரு பங்கு முன்னேற்றம் என்றால் புதிய நோய்கள் நான்கு மடங்கு எண்ணிக்கையில் அதிகரிக்கின்றன. நோய்கள் மனிதனை மட்டும் பாதிப்பதல்ல; அவனைச் சார்ந்துள்ள கால்நடைகள், அவன் உற்பத்தி பண்ணின பயிர் பச்சை முதலியவைகளையும் தாக்குகின்றன. நவீன மனிதனுக்கு உறக்கம் பிடிப்பதில்லை. அதற்கேற்ற தூக்கமாத்திரைகளைக் கையாண்டால்தான் மனிதன் தூங்க இயலுகிறது. நாட்டோடு நாடு பகைகொள்ளுதல் அதிகரித்து வருகிறது. எந்தச் சமயத்தில் பிறநாடு பிரயோகிக்கும் அணுகுண்டு வந்து உலகை அழிக்கும் என்னும் பயம் அதிகரிக்கிறது. பழங்காலத்து மனிதன் பத்து மைல் தூரம் நடந்து போய் ஒரு காரியத்தைச் செய்து முடித்துவிட்டு அன்று இரவே அவன் வீட்டுக்கு நடந்துவந்து தூங்குவான். இக்காலத்திய மனிதனோ ஒருமைல் நடந்தால் ஒரு நாள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கின்றான். இத்தகைய நிலையை அறிஞர் உலகம் பாராட்டாது. சான்றோர் செய்துள்ள எச்சரிக்கையை நவீன உலகம் புறக்கணித்துப் பௌதிக விஞ்ஞானத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்ப நவீன மனிதன் க்ஷீணதசை அடைந்து வருகிறான் என்பது வெளிப்படை. இதற்கு நேர்மாறாக வேதாந்தம் முன்னேற்றம் அடைவதற்கேற்ப மானுடன் திண்ணியனாகத் திருந்தியமைகிறான். இவ்வுலக வைபவம் எதுவும் அவனுக்குத் தேவையில்லை. அவன் தன்னையே கட்டியாளுகிறான். நோய் வந்தால் நோயைச் சகிக்கும் உறுதிப்பாடு அவனிடத்து உண்டு.

“யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்”

என்னும் கோட்பாட்டுக்கு உட்பட அவன் யாண்டும் ஆனந்தத்தில் திளைத்திருக்கின்றான். உயிர்கள் அனைத்தையும் அவன் நேசிக்கின்றான். தீய முறையைக் கையாண்டு உலகில் நலனை நிலைநாட்ட முடியாது என்னும் கொள்கையில் வேதாந்தி நிலைத்திருக்கிறான். தனக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் அவன் நலனே செய்கின்றான். ஆத்ம சொருபத்தை அணுகுவதற்கேற்ப உலகப் பிரச்னை ஏதும் அவனுக்கு இல்லவே இல்லை. ஆதலால் விஞ்ஞானத்தின் வேகத்தைத் தணிக்கவும், வேதாந்தத்தை வளர்க்கவும் செய்வது ஒன்றே உலகுக்கு நிரந்தர நலனை நல்கும். விஞ்ஞானமும், வேதாந்தமும் இணைந்து செயல்பட ஆரம்பிக்கும் பொழுது மனிதன் இகம், பரம் இரண்டிலும் சிறப்படைகின்றான். மனிதனை மனித நிலைக்கு உயர்த்துவதும், அதற்கு மேல் தேவ நிலைக்கு உயர்த்துவதும் வேதாந்தமேயாகும். மனதைத் தூயதாக்கி, திண்ணியதாக்கி மனிதனுடைய பிரச்னைகளைத் தீர்ப்பது வேதாந்தமே.

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

(பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்.)

கவிதைப் பூங்காவின் கவின் அழகு:

"ஊருக்கு நல்லது சொல்வேன், எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்; சீருக்கெல்லாம் முதலாகும் அந்தத் தெய்வம் துணை செய்ய வேண்டும்" என்ற முகமன் மொழிந்து இலக்கிய உலகிற்கு இனிய பாதை வகுத்துத் தருகிறான் வரகவி பாரதி. கவிதை என்பது என்ன? உள்ளத்தில் உள்ளது கவிதை; உண்மை உணர்ந்து சொல்வது கவிதை. இந்த வித்தையைக் கரைகண்டவன் தான் கவிஞன். அன்றாடம் நமது வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நிகழுகின்றன. காலப்போக்கில் அவற்றில் பெரும்பாலானவற்றை மறந்துவிடுகின்றோம். ஆனால் அரிய நிகழ்ச்சிகள் நினைவை விட்டு என்றும் நீங்குவதேயில்லை. அவை நம் உள்ளத்தின் ஆழத்தில் அனுபவமுத்திரைகளாகப் பதிந்துவிடுகின்றன. அந்த அனுபவங்களைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளும்போது மனதில் ஒரு திருப்தியோ, மகிழ்ச்சியோ முகிழ்க்கும். நமது எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த எத்தனையோ வழிமுறைகள் உண்டு. கட்டுரை, கதை, கடிதம், காட்டாற்று வெள்ளம் போன்ற சொற்பெருக்கு, நளினம் பொருந்திய நற்கலைகள் என்று பல வகை வெளிப்பாடுகள் பாரினில் உண்டு. இவற்றில் கருத்துக்களை மனதில் பதிய வைப்பதில் கவிதைஎன்ற வடிவமே முதலிடம் வகிக்கிறது.

கவிதை என்பது உணர்ச்சிகளின் சங்கமம், எண்ணங்களின் வடிகால்; மனித அறிவின் மாண்புக்கு ஒரு மகத்தான எடுத்துக்காட்டு. அது மனிதனின் அறிவாற்றலுக்கு அற்புதம் மிக்கதோர் அடையாளம். சிந்தனைத் தெளிவுடன் சீரிய நடையில் சொல்லால் வரைந்த சித்திரம் தான் கவிதை. நல்ல கவிதை மனித இயல்புகளைப் புடம்போட்டுப் பொன்னாகச் செய்துகாட்டும். குழந்தைப் பருவத்தில் இனிய இசையுடன் எளிய பாடல் வடிவத்தில் நமக்கு அறிமுகமாகின்றது கவிதை. பிறகு இயற்கைத் தாயையும், இறைவன் என்ற தந்தையையும் கவிதை என்ற இந்த இனிய உயிர்த்துணை தான் நமக்கு முறையாக அறிமுகப்படுத்துகிறது. அறிவு முதிர, முதிர மனிதகுலம் இது வரை பெற்றுள்ள அனுபவங்கள் அனைத்தையுமே நாம் அழகான கவிதை வரிகளில் அடுக்கவும், ஆனந்தமாகப் படித்து ரசிக்கவும் அறிந்துகொள்கிறோம். சுவை மிகுந்த விருந்து, அறிவு நிறைந்த அவை, மணம் நிறைந்த மலர் இவற்றைப் போலவே அழகு நிறைந்த கவிதையும் நம் உள்ளத்தில் நிறைவை ஏற்படுத்தும்.

"எமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்கு உழைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்று கவிஞனின் தகுதிகளை விவரிக்கின்றான் பாரதி. கவிதா ஞானம் உள்ளவனுக்குக் காண்கின்ற காட்சியிலெல்லாம் கவிதை தெரிந்துவிடும். 'மூங்கில் இலை மேலே' என்று பாடிக்கொண்டிருந்தான் ஏற்றம் இறைக்கும் ஏழை ஒருவன். அந்த வழியாக வந்துகொண்டிருந்த கவிச்சக்ரவர்த்தி கம்பனையே ஒருகணம் துணுக்குறச் செய்தது அந்த வரி. 'மிகவும் மெல்லியது மூங்கில் இலை; அதன் மேலே எதை வைப்பது?' என்று விழித்தான் புலவன். உணவு முடித்துவிட்டு வந்து மிகுதியைப் பாடினான் உழைப்பாளி. 'மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே' என்று அவன் தொடர்ந்து பாடவும் 'ஏற்றப் பாட்டுக்கு ஏது எதிர்ப்பாட்டு?' என்று வியந்து சொன்னான் கம்பன். கற்பனைத் திறன் மிகுந்தவர்கையில் கவி என்ற உளி கிடைத்தால் அனுபவம் என்கின்ற கல்லெல்லாம் அழகிய வரி என்னும் அற்புதச் சிற்பமாக உருக்கொண்டுவிடும். அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டுகின்ற திறமை கவிதைக்குக் கைவந்த கலையாகும். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதுதான் கவிதையின் உண்மைச் சிறப்பு. இன்பம், துன்பம், நனவு, கனவு, வீரம், ஈரம், பாசம், பக்தி என்று எத்தகைய பொருளையும் நவரத்தினங்கள் பதித்த நல்லதொரு மகுடம் போலப் பாடல் என்னும் வடிவத்தில் பளிச்சிடச் செய்யலாம். உண்மையான கவிதைக்கு அழிவு என்பது என்றுமே இல்லை. உலைந்துபோய்க் கிடக்கும் உள்ளத்தையும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் உண்மைக் கவிதைக்கு உண்டு. இந்த அமிழ்தை அருந்தி

யவன் என்றும் அமரனே ஆவான். கவிதை நமக்குப் பிறப்புமுதல் இறப்புவரை துணை நிற்கும் ஆருயிர்த் தோழன். நமது பள்ளிப் படிப்பில் பலவகைப் பாடல்களை நம் பாடப் பகுதியில் பார்க்கின்றோம். ஆண்டுத் தேர்வுக் காக அவற்றில் சில வரிகளைத் தேர்ந்தெடுத்து மூளைப் பெட்டகத்தில் முடக்கிவைக்கின்றோம். தேர்வு முடிந்தபின் தேவையில்லை இந்தப் பணம் பண்ண முடியாத பாழ்வரிகள் என்று வக்கணை பேசி வழித்தெறிந்து நினைவுத் திரையைத் துடைத்து விடுவோம். கொன்று தின்ற பின்பு பிணத்தை வீசியெறிந்துவிட்டு விலகிப்போகும் விலங்குகளுக்கும் நமக்கும் வேறுபாடு வேண்டாமா? கற்றது கல்லில் பதித் தாற்போல் நம் உள்ளத்தில் உறைந்து நம் சொல்லிலும், செயலிலும் செவ்வையாய் வெளிப்படவேண்டும். அதுவே உண்மைக் கல்வியறிவின் உயர்ந்த இலட்சணம்.

பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குப் பாட மாகக் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆங்கிலக் கவிதைகள் வெறும் வயிற்றுப்பிழைப்பிற்காக மட்டுமல்லாமல் வாழ்க்கைப்பயணத்திற்கும் நல்ல வழித்துணையாக அமைந்துள்ளன. இவற் றில் விரவிக்கிடக்கும் கருத்துக்களைத் தேர்வுக் காக மட்டும் நெட்டுருச் செய்பவர்கள் நாவை நீட்டிப் பூச்சியை உண்ட பிறகு உறக்கத்தில் மூழ்கிவிடும் தவளையைப் போன்றவர்கள். தாமரைக் குளத்தில் கிடந்தாலும் தண்தேன் அறியாது மண்டுகம். பாடங்களைப் புரிந்து கொண்டு ரசிப்பவர்கள் எறும்பினைப் போன்ற வர்கள்.சுறுசுறுப்பும், செயல் வேகமும் உடைய எறும்பினைப் போன்று இவர்களும் நன்கு உழைத்து உண்மையான பொருளைத் தேடித் தெரிந்துகொள்வார்கள். தேனைத் தேக்கி வைத்துள்ள தாமரை போன்றவர்கள் தலைத் தரமான மாணக்கர்கள். அவர்கள் பயின்ற தைத் தேர்வுக்குப் பின் புறக்கணித்துவிடாமல் வாழ்நாள் முழுவதும் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டுவார்கள். அவர்கள் பெற்ற அந்த ஆக்கம் அவர்கள் போற்றிய கவிதை தந்த ஏற்றமேயாகும். எனவே பொன்னை உரைத்துப் பார்ப்பது போலக் கவிதையின் பொருளை அறிந்து போற்ற நாம் பயிற்சி பெறுதல் நன்று.

சிங்கக்குட்டியின் சிறுபிள்ளைத்தனம்:

கவிதைத் தொகுப்பில் முதலாவது,'சிங்க அர சனும் சின்னக்குட்டியும்' என்ற தலைப்பில் ஜான் கே (John Gay) அவர்களின் கவிதையாகும். சின்ன என்ற அடைமொழி குறிப்பது வய தையோ, உடல் அளவையோ அன்று. தனக்கு இயற்கையாக இருக்கவேண்டிய வீர இயல்பு களைமறந்து சிற்றியல்புகளை நாடிச் செல்லுவது சின்னத்தனமாகும். கதையைப் பார்ப்போம். சிங்கங்களின் நடுவே தனக்குச் சிறுமைதான் அதிகம் என்று நினைத்தது ஒரு சிங்கக்குட்டி. தன்னைவிடத் தாழ்ந்தவர்களுடன் வாழ்ந்தால் தான் தனக்குப்பெருமை என்று அது எண்ணி யது. எனவே தன் இனத்தை வெறுத்து விட்டுச் சென்றது. தன்னைச் சுற்றி நின்று கொண்டு எல்லாரும் புகழ்ச்சியாகப் பேச வேண்டும்; தான் ஒரு தலைவன் என்ற அந் தஸ்தை உடனே பெறவேண்டும் என்று அது ஆசைப்பட்டது.

இவ்வாறு புல்லிய இயல்பு படைத்திருந்த அந்தச் சிங்கக்குட்டி தன் பெருமைக்குரிய இனத்தை வெறுத்து அற்பப்பிராணிகளிடம் பாராட்டை விரும்பிச் சென்றது. தன் நேரத்தை யெல்லாம் கழுதைகளின் கூட்டத் தில் அது செலவழித்தது. கழுதைகள் அவற் றின் நிரந்தரத் தலைவனுகவே அதை ஏற்றுக் கொண்டன.சாயல், பழக்கம், பார்வை,பாவனை எல்லாவற்றிலும் அது தன்னையும் ஒரு கழுதை யாகவே கருதிக் கொண்டது. உருவத்தில் மட்டும் அது சிங்கமாக இருந்தது. ஆனல் நடை, பாவனை, குரல் அனைத்திலும் ஒரு கழுதையாகவே மாறிவிட்டது. வன ராஜாவே தங்கள் பழக்கங்களை மேற்கொண்டதைப் பார்த்துக் கழுதைகள் தற்பெருமை கொண் டன. சிங்கத்தலைவனை அளவுக்கு மீறி முகஸ் துதி செய்தன. அது ஏதாவது வேடிக்கை செய்தால் 'ஆகா, என்ன சமத்காரம்' என்று வெகுவாகப் புகழ்ந்தன. அது வாயைத் திறப்ப தற்கு முன்பே 'ஆகா அற்புதம்' என்று கழுதை கள் வாயைப் பிளந்தன. 'கழுதை போலவே என்ன அழகாக இவர் கத்துகிறார்' என்று கொண்டாடின. வீண் புகழ்ச்சியும், தற்பெரு மையும் அதிகரிக்கவே சிங்கக்குட்டி தான் எல்லாத் தகுதிகளையும் பெற்று விட்டதாக

நினைத்தது. சிங்க அரசனைப் போலவே தானும் பெரிய வீரன் என்று எண்ணிக்கொண்டு நேராகச் சிங்க அரசனின் குகைக்குச் சென்றது. தன்னுடைய சாதனைகளை நிரூபிப்பதாக நினைத்துக் கொண்டு அது சிங்கத்தின் முன்னால் நின்று கர்ஜிக்காமல் கழுதை போலப் பெருங் குரல் எடுத்துக் கத்தியது.

சிங்கம் அதைக் கேட்டு வருந்தியது. குட்டியைப் பார்த்து அது திட்டியதாவது: "உன்னுடைய இழிவான குரலே உன்னுடைய இழிந்த தன்மையைக் காட்டிக்கொடுத்து விட்டது. நீ எப்படிப்பட்டவர்களுடன் பழகுகிறாய் என்பதை நீயே தெரிவித்துவிட்டாய். தகுதியை இழந்துவிட்ட நீ உன் வாழ்க்கையில் பெருமைப் படுவதற்கு ஒன்றும் இல்லை. பெருங்குரலெடுத்துத் தற்பெருமை பேசுபவர்கள் தங்களின் சிறுமையைத் தாங்களே வெளிப்படுத்துகிறார்கள்." இதைக் கேட்ட சிங்கக்குட்டி "ஏன் இவ்வளவு கடுமையாகப் பேசுகிறீர்கள்? என்னுடைய கூட்டத்தார் என்னை ஒரு மேதை என்று புகழ்கிறார்களே" என்று கூறியது. "தற்பெருமை என்பது எவ்வளவு மோசமானது. முட்டாள்கள் புகழ்ச்சி செய்தால் மூடர்களுக்குத் தலைக்கனம் அதிகரித்துப் போகிறது. ஆனால் மூடர்கள் எதைப் புகழ்கிறார்களோ, அறிஞர்கள் அதை இகழ்கிறார்கள். முட்டாள்களாகிய கழுதைகள் புகழ்வதைப் பெருமிதம் வாய்ந்த சிங்கங்கள் இகழ்கின்றன என்பதை நீ அறிந்துகொள்" என்று சிற்றினம் சேராமையைப்பற்றி சிங்க அரசன் புத்திமதி கூறியது.

இவ்வாறு சேரிடம் அறிந்து சேராமல் மோசம்போன சிங்கக்குட்டியைத் திருத்த நினைத்தது சிங்கவேந்தன். மனிதர்கள் கீழான பிறவிகளுடன் பழக நேர்ந்தால் அவர்களைத் தங்கள் நிலைக்கு உயர்த்த வேண்டும். தாங்கள் அவர்களுடைய நிலைக்குத் தாழ்ந்து போகக் கூடாது. காந்தியடிகள் தம்மிடம் வந்து சேர்ந்த ஹரிஜனங்கள் நாள்தோறும் குளித்துச் சுத்தமாக இருக்க வேண்டும், பொருந்திய உணவே கொள்ளவேண்டும், தூய கதராடை உடுக்க வேண்டும், உழைத்து ஊதியம் பெற வேண்டும், ஊருக்கு உபகாரமாகத் தொண்டு செய்யவேண்டும், குடி, சூது முதலிய கொடுமைகளை அறவே விலக்கவேண்டும், கல்வி பயில வேண்டும், தினமும் சென்று ஆலயம் தொழவேண்டும் என்றெல்லாம் திட்டங்கள் செய்து அவர்களை உயர் ஜாதி இந்துக்களைப் போலவே மதிப்புடன் வாழும்படி செய்தார். அவர்களுடன் சேர்ந்ததால் அவர் தமது நிலையில் தாழ்ந்துவிடவில்லை. சாதாரண காந்தியாயிருந்தவர் நாளடைவில் மகாத்மா என்ற உயர் நிலையை எய்தினர். ஆனால் சிங்கக் குட்டியோ கழுதைகளுடன் சேர்ந்துகொண்டு தானும் ஒரு கழுதையாக மாறிவிட்டது. தனது நிலையைக் குறித்து வெட்கப்படாமல் அதைப்பற்றிப் பெருமையாக வேறு பறைசாற்றிக்கொண்டது. தரத்தில் தாழ்ந்துபோன அந்தக் குட்டியை விலகிப் போகும்படி சொன்னது கம்பீரமே வடிவெடுத்த சிங்க அரசன். இங்ஙனம் தனக்குப் பிறப்பிலேயே உரிமையாக இருந்த பெருமைகளை எல்லாம் இழந்துவிட்டுப் பரிதாபகரமாகக் காட்சி தந்தது சிங்கக் குட்டி. இவ்வாறு எளிய கதை வடிவில் ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தைப் புகட்டுகிறது இப்பாடல்.

மனிதனும் இயற்கையும்

இன்றைக்கு மனித இனத்திற்குக்கூட இந்தக் கதிதான் நேர்ந்திருக்கிறது என்று எடுத்துக்காட்டுகிறது அடுத்த பாடல். வசந்தத்தின் வருகையைக் குறித்து வில்லியம் வேர்ட்ஸ்வர்த் என்ற பெரும் கவிஞர் எழுதிய கவிதை அது. அழகான சோலையின் குளிர்ந்த நிழலில் மரத்தில் சாய்ந்துகொண்டு சுற்றிலும் உள்ள காட்சிகளில் கருத்தைச் செலுத்துகிறார் கவிஞர். களிப்பும், கவலையும் ஒரே நேரத்தில் அவரை ஆட்கொள்கின்றன.

பல வகையான பறவைகளின் இனிய ஓசைகள் காதில் ஒலிப்பது அவருக்கு இன்பமாக இருக்கின்றது. இருந்தும் ஏதோ ஓர் ஏக்கம் அவர் எண்ணத்தைப் பிடித்து உலுக்குகிறது. இயற்கையின் அழகிய வடிவங்கள் சோலையெங்கும் விரவிக்கிடக்கின்றன. பார்க்கப் பார்க்கப் பரவசம் ஏற்படுத்தும் காட்சிகளைச் சுற்றிலும் காணமுடிகிறது. ஆனால்அடி மனத்திலோ சொல்லொணாத துக்கம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. தன் இனிய மகனைத் தன்னோடு இணைத்துக்கொள்ளவே இயற்கையன்னை விரும்புகிறாள். இயற்கையின் கண் திகழும் இனிமை

யும் ஒற்றுமையும் மனிதனுடைய ஆத்மாவைக் கவர்ந்து விடுகின்றன. ஆனால் மனிதனின் நிம்ம தியைக் குலைக்கவென்றே வந்த சாத்தான் போல ஒரு துயரம் எழுந்து உள்ளத்தை அலக் கழிக்கிறது. 'மனிதன் மனிதனை மாய்த்து விட்டானே' என்ற துயரமே அது.

பூங்காவில் கொடிப்பந்தல்களும், பிரிம்ரோஸ் பூங்கொத்துக்களும் காற்றில் அசைந்து ஆடு கின்றன. காணும் இடமெல்லாம் பெரிவிங் கில் கொடி படர்ந்து எங்கும் பச்சைப்பசேல் என்று காட்சி தருகிறது. ஒவ்வொரு மலரும், இலையும் சுதந்தரமான காற்றை அனுபவித்து ஆனந்தமே தனது இயல்பாகக் காட்சி தருகின் றது. பலவகைப் பறவைகள் தோட்டத்தில் தத்தித் தத்திப் பறக்கின்றன. அவற்றின்மொழி யைக் கவிஞனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஒன்று. அவை துக்கத்துடன் அமைதி யாக ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடக்கவில்லை. ஆபத்து வந்தது என்று உணர்த்தும் வகையில் கிரீச்சிட்டு அலறவுமில்லை. அவற்றின் உடல், அலகு, சிறகு என்று ஒவ்வொன்றிலும் ஏற்படும் ஒவ்வொரு சிறு அசைவும் அவற்றின் எல்லை யற்ற மகிழ்ச்சியையும் துடிப்பையுமே புலப் படுத்துகின்றன. செடிகளின் சிறிய கிளைகள் தங்கள் அரும்புகளையும், தளிர்களையும் எல் லாத் திசைகளிலும் பரப்பி இனிய தென்றல் காற்றை நுகர்கின்றன. கவிஞனுக்கு எல்லாம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. எங்கு நோக்கினும் பூரிப்பு, நிம்மதி, இடை யீடு இல்லாத சாந்தம் தவழ்வதைக்காண் கிறார்.

எங்கும் மகிழ்ச்சி பொங்கும் இந்தச் சூழ்நிலை யில் மனிதனால் மட்டும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. உயிர்கள் அனைத்தும் இன் புற்று வாழவேண்டும் என்பதே இயற்கையின் திட்டம். அதற்கு வேண்டிய வசதிகளையெல் லாம் அது செய்து கொடுக்கிறது. ஆனால் பொறாமை, சுயநலம் போன்ற சிற்றியல்புகளி னால் மனிதர்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு அழிகிறார்கள். மனிதன் மனிதனுக் குச் செய்யும் கொடுமைகளை இந்த இனிய சூழ லிலும் எண்ணிப்பார்த்து வேதனையுறுகின் றார் வேர்ட்ஸ்வர்த். இன்பமே இயற்கையின் திட்டமாக இருக்கத் துன்பத்தை மனிதன் தனக்குத் தானே வலிய வரவழைத்துக் கொள் கிறான்.

'மனத்தின் விகாரங்கள்தாம் மனிதனின் துன்பங்களுக்கு மூலகாரணம். பக்குவப்பட்ட உள்ளத்தில் பாழான எண்ணங்கள் தோன்றா. இயற்கையின் அழகுகளை ஆழ்ந்து ரசிப்பவ னுக்கு இன்பமான நினைவுகளே என்றும் தோன்றும். அவனுக்கு இதயமும் விசாலமான தாக விரிந்தே இருக்கும். இயற்கையன்னை வஞ் சனையில்லாமல் அனைத்தையும் வாரி வழங்கு கிறாள். ஆகவே இயற்கையை ரசியுங்கள், இன்பமாக இருங்கள்' என்று சொல்லாமல் சொல்லுகின்றார் இயற்கையில் இன்பம் காணும் வேர்ட்ஸ்வர்த்.

இரக்கத்தின் இயல்பு

இயற்கையை ஆராதிப்பவன் என்றும் நெஞ் சில் ஈரம் உள்ளவனாகவே இருப்பான். கருணை உள்ள நெஞ்சமே இறைவனின் இருப்பிடம் ஆகும். இந்த இரக்கத்தின் இனிய இயல்புகளை இயம்புகிறது அடுத்த பாடல். கவிச் சக்கர வர்த்தி ஷேக்ஸ்பியர் எழுதிய முப்பத்தேழு நாடகங்களில் மிகச் சிறந்தவற்றுள் ஒன்று 'மர்ச்சண்ட் ஆப் வெனிஸ்' என்ற நாடகம். அதில் பஸானியோ என்ற தன் நண்பனின் திருமணத்திற்குப் பொருள் உதவி செய்கிறான் அந்தோனியோ என்ற வெனிஸ் நகரவணிகன். அச்சமயம் அவனுடைய முதலீடு முழுவதும் கடல் வாணிகத்தில் முடங்கிப்போனதால் ஷைலாக் என்ற யூதனிடம் சிறு தொகை ஒன் றைக் கடனாகப் பெறுகிறான் அந்தோனியோ. யூதன் ஷைலாக்குக்கு நகரில் பேரும் புகழும் பெற்று நலமாக வாழும் அந்தோனியோவைக் கண்டு பொறாமை. ஆகவே கடன் கொடுக்கும் போது ஒரு பத்திரம் எழுதச் சொல்கிறான். குறித்த காலத்தில் தொகையைத் திருப்பித் தராவிட்டால் அந்தோனியோ தன் உடலில் ஒரு பௌண்ட் (Pound) தசையை அறுத்து ஷைலாக்குக் கொடுக்க வேண்டும் என்பது நிபந்தனை. ஷைலாக்கின் சூது புரிந்த பஸா னியோ இந்தத் தொல்லை வேண்டாம் என் கிறான். பெரும் செல்வந்தனான தனக்கு அத் தகைய தொல்லை ஏன் ஏற்படப் போகிறது என்று எண்ணி நிபந்தனைக்குச் சம்மதிக்கிறான் அந்தோனியோ. (தொடரும்)

அகத்தெளிவும் ஆன்ம தரிசனமும்

(ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் 2—12—84 அன்று கன்னியாகுமரி அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[20 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெளியே காணும் காட்சிதான் எளிய மனிதர்களுக்கு உள் மனதிலும் பதிவாகும். ஆனால் வெளித்தோற்றம் வேறு, சொரூபக் காட்சி வேறு என்பதை ஆன்றோர்கள் அறிவார்கள். பரத்தை அறிந்த ஞானிகளுக்கோ எந்தப் பேதமும் கிடையாது. எல்லாம் அவர்களுக்குக் கடவுள் மயமாகவே காட்சிதரும். சான்று ஒன்று கூறவேண்டுமானல் தூணிலும், துரும்பிலும் நாராயணனைக் கண்டான் பரம பக்தனை பிரகலாதன். சைதன்ய மஹாப்பிரபு ஒருமுறை வனத்தைக் கடக்கையில் புலி ஒன்று எதிர்ப்பட்டது. அடியார்கள் இனிமையான இசையுடன் இறைவனைப் பாடிய பாடலின் இன்னிசை அப் புலியையும் கவர்ந்தது. அவர்களைப்போலவே அந்தப் புலியும் கால்களை அசைத்து நடனமாடியது. எனவே வெளித் தோற்றததை மட்டும் காண்பவர்கள் உள்முகமாகச் சிந்தையைத் திருப்பி உள் ஒளியை அறிய முடியாது. உள்ளொளியைக் கண்டவர்களோ வெளித் தோற்றங்களைப் பொருட்படுத்துவதில்லை. எளிய மனிதர்கள் கொடூரம் வாய்ந்த மிருகமாகக் கண்ட அதே பிராணி சைதன்யர் முன்னிலையில் நாராயணனகக் காட்சி தந்தது. இவ்வாறு இறைவன்மீதும், சத்தியத்தினமீதும் பற்று வைத்தவர்களே உண்மையான தவசீலர்கள். தெளிந்த மனமும், தூய சிந்தையும், தெய்வநெறியும் அவர்களுக்குத துணைபோகின்றன. அத்தகைய பாதுகாப்புடன் அவர்கள் மேற்கொள்ளும் தவத்தின் பயனுக அவர்கள் ஆன்ம தரிசனம் அடையப்பெற்று, சொருபக் காட்சியில் திளைப்பார்கள். இறைவன் திருவருளால் நாமும் மனத் தூய்மை பெற்று அத்தகைய உயர்ந்த தவச் செல்வத்தை அடைய முயலவேண்டும். தேவி பகவதி தென்குமரியில் கன்னியாக எழுந்தருளி அத்தகைய உக்கிர தவத்தில் ஈடுபட்டு அகிலாண்டகோடிகளில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் வழிகாட்டி அருளுகின்ருள்.

நிர்மலமான உள்ளத்தில் சத்தியம் குடிகொண்டிருக்கும். அத்தகைய உள்ளமானது எதைச் சங்கல்பிக்கின்றதோ, அது நடந்தே தீரும். சத்தியம் அரசாட்சி செய்யும் உள்ளத்தில் தீங்கான எண்ணங்கள் தோன்றவே முடியாது. ''பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்பனிமலர் எடுக்க மனம் நாணும்'' என்றவாறு எங்கும் எதிலும் அவர்கள் இறைவனையே காணத் தொடங்கி விடுவார்கள். ''புலியும் நாராயணனின் சொரூபம்தான். அந்தப் புலி நாராயணனுக்கு எட்ட இருந்து நமஸ்காரம் செய்'' என்பார் பரமஹம்சர். எளிய மாந்தர்கள் புறக் கண்களால் மட்டுமே பார்ப்பதால் அவர்களுக்குப் புறக்காட்சி மட்டுமே புலனுகிறது. ஞானிகள் அகக்கண்கொண்டு காண்பதால் அகக் காட்சி அவர்களுக்கு எளிதில் சித்திக்கிறது. அகத் தெளிவு என்பது 'காரணம்'. ஆன்ம தரிசனம் என்பது 'விளைவு'. காரணமும் காரியமும் இவ்வாறு ஒன்றையொன்று பற்றி நிற்கின்றன.

1892 ஆம் வருடம் ஒரு மூர்த்தி கன்னியாகுமரியில் எழுந்தருளி உலக சுபீட்சத்தைக் குறித்துத் தியானம் செய்தார். தூய்மையும், சத்தியமும் தமது இரண்டு கண்களாகக் கொண்டு ஒழுகிய அந்தத் தவசீலருக்கு அங்கே அற்புதமான ஞானக் காட்சி ஒன்று சித்தித்தது. புண்ணிய பாரதம் செல்வத்தில் சிறக்கவும், மேலை நாட்டினர் ஆத்மீகத்தில் திளைக்கவும் அவர் வழியொன்று கண்டார். அன்று தென் குமரியில் கற்பாறை மீது அமர்ந்து அவர் சங்கல்பித்தவைகளெல்லாம் இன்று பல்வேறு வடிவங்களில் செயல்பட்டு வருகின்றன. தூய நெறியில் நின்று உலகினருக்கு அத்தகைய அருட்கொடையைச் சுவாமி விவேகானந்தர் வழங்கினர். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் அந்த ஞான வேள்வியின் ஒளி பிரகாசித்து இந்த உலகத்தை மேன்மைப்படுத்தும்.

இங்ஙனம் தமது உள்ளத்தால் சங்கல்பிப்பதை உறுதியாக நிறைவேற்றி வைப்பது ஞானிகளுக்கு ஒரு விளையாட்டுப் போன்று அமைந்துள்ளது. விவேகானந்தர் சந்நியாசம் மேற்கொண்டு தீர்த்த யாத்திரை செய்த சமயம் மகான் பவஹாரி பாபாவைத் தரிசனம் செய்

தார். பாபா சகல சித்திகளும் வாய்க்கப் பெற்ற ஆன்ம ஞானியாயினும் தம்மை வெளிப் படுத்திக்கொள்ளாது ஒரு குகையில் வசித்து வந்தார். அவருடைய பிட்சாபாத்திரத்தைத் திருட வந்தவனும் அவருடைய திருவருளால் களங்கம் நீங்கி துறவியானுன். அவர் சந்நிதி யில் சென்று விவேகானந்தர் "இங்ஙனம் குகை யில் தனிமையில் மோனநிலையில் நீங்கள் தியா னம் செய்வதால் உலகுக்கு என்ன நன்மை?" என்று வினவினர். பவஹாரி பாபா "உடல் மூலமாகத்தான் உலகுக்கு நன்மை செய்வது சாத்தியம் என்று நீ நினைக்கின்ருயா?" என்று விவேகானந்தரைக் கேட்டார். விவேகானந்தர் உள்ளத்தில் ஓர் உண்மை அப்போது தெளிவா யிற்று. உடல் மூலம் தங்களை வெளிப்படுத்தி உலகுக்கு நன்மை செய்த புத்தர், ஏசு, முகமது நபி போன்றவர்கள் இரண்டாம் நிலையினர் ஆவார்கள். தங்களை இன்னர் என்று காட் டிக்கொள்ளாது சங்கல்பமாத்திரத்தில் உலகுக் குப் பெருநலனை உண்டுபண்ணுபவர்கள் முதல் நிலையைச் சேர்ந்தவர்கள் ஆகின்ருர்கள்.

விவேகானந்தர் பாபாபோன்ற பல உத்த மோத்தமர்களைச் சந்தித்து நாட்டையெல்லாம் சுற்றிப் பார்த்த பிறகு தென்குமரியை அடைந் தார். அங்கே முதலில் தேவியைக் குறித்துத் தியானித்தார். பிறகு உலகம் உய்ய ஒரு திட் டத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கலானுர். இமயம் முதல் குமரிவரை அவர் நேரில் பார்த்த காட்சிகளெல்லாம் படலம் படலமாக அப் போது அவர் மனத்திரையில் தோன்றி மறைந் தன. உடல் அமைப்பை ஒத்து உலக அமைப் பும் உள்ளது. ஆகவே உடலைப் போலவே அமைந்திருக்கும் உலக அமைப்பை ஆராய்ந் தார். சரீரத்துக்கு அங்கங்கள் இருப்பது போன்று உலகம் என்ற அமைப்புக்கு நாடு கள் அங்கங்கள் ஆகின்றன. உடலில் ஒவ் வொரு அங்கத்துக்கும் ஒரு குறிப்பிட்ட பணி நியமிக்கப்பட்டிருக்கிறது.ஓர் உறுப்பு மற்றென் றிற்கு ஈடு செய்யவோ, வேறு ஒன்றின் பணி களைத் தான் ஏற்றுச்செய்யவோ இயலாது. அது தன் கடமையைச் செய்ய இயலாமற் போனல் முழு உடலுமே அதனல் பாதிக்கப்படு கிறது. அங்ஙனமே உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் இறைவன் குறிப்பிட்ட பணிகளை நியமித்திருக்கிருன். உலகம் முழுவதும் ஒழுங் காக இயங்கும் பொருட்டு ஒவ்வொரு நாடும் தனக்கென விதிக்கப்பட்ட கடமைகளை ஒழுங் காக நிறைவேற்ற வேண்டும். உலகில் சில நாடுகள் செல்வத்தில் கொழிக்கின்றன. வங்கி யில் போடப்பட்ட பணத்தை வங்கியில் இருப் பவர்களே எடுத்துச் செலவு செய்வதில்லை. அத்தொகையை அவர்கள் பயனுள்ள தொழில் களில் முதலீடு செய்வோருக்கு உதவுகின்ருர் கள். அதன் பயனை யாவரும் நன்மை பெறு கின்றனர். அவ்விதமே செல்வம் கொழிக்கும் நாடுகள் வறுமையில் உழலும் நாடுகளுக்குத் தக்க விதத்தில் அதைக் கொடுத்து உதவ வேண்டும். ஆன்மீக வளம் பொருந்திய நாடு களோ அவ் ஆன்மீகத்தையே பிறநாடுகளுக்கு வரையாது வழங்க முன்வரவேண்டும். எந்த நாடு சுயநலத்துடன் இயங்குகிறதோ அது விரை வில் அழிந்துபோகும். இராவணன் சகல ஐசுவரி யங்களையும் பெற்றிருந்தான். ஆனல் அகங்கா ரத்தினல் அட்டூழியம்செய்து முடிவில் அழிந்தே போனுன். இந்தியா ஆன்மீகத்தின் தாயகம். இந்தியா அழிந்தால் உலகமே அழிந்துபோகும். இராவணன்போல மற்றநாடுகள் நடந்துகொண் டாலும், ஸ்ரீராமன்போல இந்தியா சத்தியத் தைக் கடைப்பிடிக்க வேண்டும்; ஆன்மீகத்தை மற்ற நாடுகளுக்கு வழங்கவேண்டும்.

குமரிப் பாறையில் சுவாமி விவேகானந்தர் இவ்வாறு தீர்மானம் செய்தார். தீர்மானம் செய்த போதிலும் திருவருளும், குருவருளும் சம்மதிக்கும் வரை மேல் நாடு செல்லலாகாது என்று காத்திருந்தார். மேல் நாடு செல்லும் பொருட்டு அன்பர்கள் நிதி திரட்டித் தந்ததை யும் அப்பொழுது நாட்டில் ஏற்பட்ட கடும் பஞ்சத்திற்குப் பயன்படுத்துமாறு கூறிவிட் டார். முடிவில் தெய்வமே அவரைப் பணித்த போது சத்தியமும், தூய உள்ளமுமே துணை யாக அவர் தனிமையில் கிளம்பி விட்டார். நான்கு ஆண்டுகள் அவர் மேலை நாடுகளில் சொற்பெருக்காற்றி அருட் செல்வத்தை வழங் கித் தம் தாய் நாட்டிற்காகப் பொருட் செல்வத் தைச் சேகரித்தார். அவருடைய மகிமையை உணர்ந்து மேலை நாட்டினர் பலர் அவருக்குச் சீடர்கள் ஆனர்கள். அவர்களுள் சகோதரி நிவேதிதையும் ஒருவர். அவரை மிலேச்சப்

பெண் என்று அன்னை சாரதா தேவியாரிடம் அழைத்து வந்து விவேகானந்தர் அறிமுகப் படுத்தினர். அன்னையாரோ "அவள் எனக்கு வாய்த்த திருவின் மகள்" எனக்கூறி அவரை ஆசீர்வதித்தார். இத்தகைய சான்ருண்மைத் திறத்தால் இந்துமதம் மேலும் மேன்மையுற்றது. விஞ்ஞான முன்னேற்றத்தின் வளர்ச்சியின் முன்னே உலகில் நிலவிய பெரும்பாலான மதங்கள் தத்தம் கொள்கைப் பற்றும், சமூகப் பிடிப்பும் இழந்து அவல நிலையை அடைந்தன. விஞ்ஞானத்தின் எல்லாக் கேள்விகளுக்கும் தக்கவாறு விடையளித்த இந்துமதமோ காலப்போக்கில் தன் மீது சுமத்தப்பட்ட சிறுமைகள் எல்லாம் நீங்கிப் புதுப்பொலிவு பெற்றது. தத்துவங்களுக்கெல்லாம் அன்னையாக விளங்கும் வேதாந்தத்தையும், மார்க்கங்களிலெல்லாம் மிகச் சிறந்ததான ஞான மார்க்கத்தையும் சுவாமி விவேகானந்தர் அமெரிக்க தேசத்தில் நிலைநாட்டினர். அவை இந்துக்களின் தனியுரிமைகள் அல்ல; அவை உண்மையில் உலகுக்கே உரியவைகள் என்று மக்களுக்கு எடுத்துப் புகட்டினர்.

இத்தகைய பெருநிலை அவருக்கு எவ்வாறு சாத்தியமாயிற்று? அவர் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்த சத்திய நெறியே அவரை இத்தகைய உன்னதமான பாதையில் செலுத்தியது. முதன் முதலில் அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தரிசனம் செய்தபோது "அஞ்ஞான இருள் மூடிய கல்கத்தா நகரத்தில் இவ்வளவு தேஜஸ் உடைய இளைஞன் எப்படித் தோன்றினன்?" என்று வியந்தார் அண்ணல். "அப்பனே, இத்தனை நாட்களாக நீ எங்கே போயிருந்தாய்? யாரை எதிர்பார்த்துக் காத்திருந்தேனே அந்தக் குழந்தையைத் தேவி என்னிடம் அனுப்பி விட்டாள்" என்று பரமானந்தம் அடைந்தார் பரமஹம்சதேவர். அவர் திருவருள் புரிந்ததால் சமாதியில் திளைத்துச் சொரூபக் காட்சி காணப்பெற்ற போது என்றென்றைக்கும் தாம் அந்த உன்னத அனுபவத்திலேயே மூழ்கி இருக்கவேண்டும் என்று வரம் கேட்டார் சுவாமி விவேகானந்தர். "அப்பனே, உலக நன்மையை முன்னிட்டு அந்த அனுபவத்தை உன்னிடமிருந்து மறைத்துவைப்பேன். நீ நீரில் மிதக்கும் செத்தைபோன்று வாழவிரும்பாதே. உலகினர் பிறவிக்கடலைக்கடந்து முக்தி என்னும் அக்கரையை அடைவதற்கு உதவும் நீராவிக் கப்பல் நீ" என்று அருளினர் பரமஹம்சர். உலக நலனுக்காக உழைப்பதா, அதீத நிலையில் ஆழ்ந்து போவதா என்ற பிரச்னை இவ்வாறு தீர்ந்ததும், வேறு ஒரு தர்ம சங்கடம் அவரை ஆட்கொண்டது. வறுமையில் உழன்று கிடந்த தம் குடும்பத்தவருக்குத் தாம் செய்யவேண்டிய கடமையைக் குறித்து அவர் யோசிக்கலானர். செல்வக் குடும்பத்தில் பிறந்து சீரோடும், சிறப்போடும் வாழ்ந்தவர் தம் தந்தை இறந்த பிறகு பிற மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துப் பணம் பெற்று அதைத் தமது கல்லூரிக் கல்விக்குப் பயன்படுத்திக்கொண்டார். அவருடைய அன்னையாராகிய புவனேசுவரி மாதா "அப்பா, குடும்பத்தைப்பற்றி நீ கவலையுற வேண்டாம். நான் எப்படியும் சமாளித்துக் கொள்வேன். உலகுக்குப் பயன்படும் செயல்களில் நீ தயங்காமல் ஈடுபடுவாய்" என்று உற்சாக மூட்டினர். "பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள. நீ உலகுக்கு உழைத்து வா" என்ற அந்த அருள் வாக்கே குமரி முனையில் அமுதப் பிரவாகமாய்ப் பூரண வடிவெடுத்தது. விவேகானந்தருடைய தந்தையும் "உனக்கு நீயே செல்வம். உன்னையே நீ நம்பி வாழவேண்டும்" என்று உண்மையை எடுத்துப் புகட்டியிருந்தார். இவ்விதம் விவேகானந்தர் சத்திய நெறியில் சென்று ஜயிப்பதற்கு அவருடைய அறிவார்ந்த பெற்றோர்களும், குரு வடிவில் வந்த அண்ணலாரும் பாதை அமைத்துக் கொடுத்தார்கள். சத்தியமும், தூய்மையுமே வடிவாய் அமைந்த அந்தத் தெய்வங்களின் அருளாசியினல் இந்தியா சுபிட்சமடைவதற்குப் புதிய மார்க்கம் ஒன்று பூமியில் பிறந்தது. அதுவே ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் ஆகும்.

"பரம ஏழைகளான மக்களின் நிலையை எண்ணி யெண்ணி நீங்கள் பசியையும் தூக்கத்தையும் மறந்தீர்களா? நாடி நரம்புகளெல்லாம் துடித்து உங்கள் உள்ளம் உணர்ச்சியால் கொதிக்கின்றதா? அவ்விதமானல் நீங்கள் சேவை செய்வதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர்கள் என்று விவேகானந்தர் சீர்திருத்தக்கா

ரர்களுக்கு அறைகூவல் விடுக்கின்றார். அமைதியாக அமர்ந்திருந்த ஆஞ்சநேயரை அணுகி அவருடைய சக்தியை அவருக்கு உணர்த்தி அவருடைய ஆன்ம பலத்தைத் தட்டி எழுப்பிய ஜாம்பவான் போல இக்கால இளைஞர்களையும், யுவதிகளையும் விவேகானந்தர் தூண்டுகின்றார். "பேராற்றலே வடிவெடுத்தவனாக, உறுதியே நிறைந்தவனாக இரும்புத் தசையும், எஃகு நரம்பும் கொண்டு நீ விளங்கவேண்டும். நல்லது என்று உனக்குத் தோன்றுவதை உலகமே எதிர்க்காலும் அஞ்சாமல் செய்து முடிக்கின்ற உள்ள உறுதிப்பாட்டையே ஆண்மை என்று பகரலாம். பிறருடைய நன்மைக்காக எங்கே நீ முழுவேகத்துடன் செயல்படுகின்றாயோ அந்த இடத்தில் உலகத்தின் சுபிட்சத்திற்கான அடிப்படை அமைந்திருக்கும்." உலகில் ஆன்மீகம் தலைதூக்கியபோதெல்லாம் உலகம் மேல் நிலையில் விளங்கியதையும், போக போக்கியங்கள் மிகுந்தபோது உலகம் அழிவு நிலையில் உழன்றதையும் எண்ணிப் பார்த்தே சுவாமி விவேகானந்தர் இத்தகைய புதிய இலட்சியங்களை இந்தியருக்கும், பிற நாட்டவருக்கும் உருவாக்கித்தந்தார். மதம் என்ற பெயரால் குறுகிய நோக்கங்களில் கட்டுண்டு சமையலறைப் பதார்த்தங்களை உண்டு மகிழும் திருநாளும், திருவிழாவும்தான் சமயத்தைக் கடைப்பிடிக்கும் வழிமுறை என்றிருந்த அவல நிலையை மாற்றியமைத்துப் புதிய நெறிகளை வழக்கப்படுத்தினார் விவேகானந்தர்.

அன்பின் பெருக்கால் ஒருவன் தன்னை முற்றிலும் தெய்வப் பணிக்கு ஒப்படைக்கும்போது சுயநலம் முற்றாக ஒழிகிறது. சுயநலம் அழியப் பெற்றவர்கள் செய்கின்ற பணிகள் முழுமையாக நிறைவேறுகின்றன. இதற்கு ஒரு சான்று. அக்பர் சக்கரவர்த்தியின் ஆட்சியில் தான்சேன் என்ற இசை மேதை வாழ்ந்து வந்தார். அவர் உள்ளத்தை உருக்கும் சிறந்த இசைபாடுவதில் வல்லவர். ஒரு முறை அவர் தம்மைப் பார்க்கிலும் தம் குருநாதர் இசை பாடுவதில் வல்லவர் என்றார். "ஆனால் அவர் வைர வைடூரியங்களையும், பொன் மணிகளையும் கண்டு மயங்குபவர் அல்லர். எத்தகைய சூழ்நிலையிலும் அவர் அரண்மனைக்கு வரச் சம்மதிக்க மாட்டார்" என்றார் தான்சேன். "அப்படியானால் நாமே அவர் இருக்கும் இடத்திற்குச் சென்று தரிசிக்கலாம்" என்று சொல்லி அக்பர் அந்த மகான் இருந்த வனத்துக்குச் சென்றார். அவர்கள் போனபொழுது குருநாதர் தியானத்தில் மூழ்கியிருந்தார். அவருடைய தியானத்தைக் கலைப்பதற்காகத் தான்சேன் அங்கே இருந்த வீணையை எடுத்து அபஸ்வரத்தில் பாடினார். குருநாதர் தான்சேனிடமிருந்த வீணையை வாங்கி இறைவனைக்குறித்து உருகிப் பாடினார். அது உள்ளத்தை ஊடுருவிச் சென்று உள்ளே குடிகொண்டிருந்த பரம்பொருளில் லயமானது. மறுநாள் அதே பாடல்களைத் தம் அரண்மனையில் பாடும்படி தான்சேனிடம் கூறினார் அக்பர். ஆனால் அந்த இசையில் முதல் நாள் பெற்ற தெய்வீக அனுபவத்தைப் பெற முடியவில்லை. காரணம் கேட்டபோது "என் குருநாதர் இறைவனை மகிழ்விக்கப் பாடினார். நானோ உங்களை மகிழ்விக்கப் பாடுகிறேன். இறைவனை மகிழ்விக்கும் என் குருநாதருடைய பாடல் உள்ளத்தை உருக்குவதாகத் தான் இருக்கும். உங்களை மகிழ்விக்க நான்பாடும் பாடல் அதற்கு இணையாக எப்படி இருக்க முடியும்?" என்றார். எனவே பரநாட்டத்தில் ஈடுபட்டவனுக்குச் சுயநலம் இருத்தல் கூடாது. சுயநலம் உடையவர்கள் மேலதிகாரிகளிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவேண்டும். ஆனால் அத்தகைய கட்டுத்திட்டத்தினால் இறைத் தொண்டர்களின் திருக்கூட்டத்தை உருவாக்கித் தெய்வீகப் பணிகளைச் செய்ய இயலாது. இதனைக் கருத்தில் கொண்டே அன்னை சாரதா மணிதேவியாரும் "கட்டுத்திட்டத்துக்கு உட்பட்டு நடப்பது அன்று ராமகிருஷ்ண இயக்கம். அது விதிகளைக் கொண்டு இயங்கவில்லை. அன்புக்கு வசப்பட்டே இங்கு அனைத்தும் நடக்கும்" என்றார். ஆன்மீகம் என்பது வெறும் சடங்கு அன்று; அது வாழ்க்கை மயமாகத் திகழவேண்டும். தன்னைப் புதுப்பித்துக் கொண்டு தன்னில் தெய்வத்தன்மையை உணர்தல்—இதுவே உண்மையான ஆன்மீகம். சத்தியமும், தூய்மையுமே இதற்கு உற்ற வழிகளாகும். சத்தியத்தையும், தூய்மையையும் நரசேவையின்மூலம் நாம் செயலுக்குக்கொண்டு வரவேண்டும். திருவருள் அதற்குத் துணை புரிவது ஆகுக. (முற்றும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆதி அந்தம் அற்ற, பிறப்பு இறப்பு அற்ற, அப்புருஷோத்தமன், கற்பகாலங்களின் துவக்கத்தில் தம்மிடத்திலிருந்தே விராட் புருஷனைத் தாமே தோற்றுவிக்கிறார். தம்மைத் தாமே பராமரித்துக்கொள்கிறார். அவர் தூய்மை, சத்யம், ஞானம் ஆகியவற்றின் உருவம். அவர் எல்லாவற்றிலும் அந்தர்யாமியாக இருக்கிறார். ஜீவர்களை வழிநடத்தும் பார்த்தசாரதி அவர். அவர் குணம் குறி அற்றவர். அதனால் குணங்களின் தாரதம்யம் அவரிடத்தில் ஏற்பட முடியாது. அவர் என்றும் நிறை நிலையில் இருக்கிறார். அவர் ஏகன். அவருக்கு அன்னியமாக இரண்டாவது பொருள் இல்லை. அவர் நித்தியமானவர். திரிகரணங்களும் சுத்தியடைந்த முனிவர்கள் ஆண்டவனை உள்ளபடி அறிந்துகொள்ள முடியும். முனிவர்கள் உள்ளத்தில் விஸ்வாசம் குறைந்து வீணான வாதப் பிரதிவாதம், சந்தேக விசாரம் ஆரம்பித்தால், என் ஆண்டவன் உடனே மறைந்து விடுவார். விராட் புருஷனை அப்பரம புருஷனின் முதல் அவதாரம் எனலாம். கால, தேச, வர்த்தமானம், திரிகுணங்கள் எல்லாம் அவனிடத்திருந்தே வந்தவைகள். கர்மம், பஞ்சபூதங்கள், அந்தக்கரணம், பாகிய இந்திரியங்கள், சரம், அசரம், தேவ தேவி வடிவங்கள், ரிஷிகள், சிற்றுயிர் வகைகள், அவைகளிடம் காணப்படும் சிறப்பு, ஆற்றல், அறிவு, வல்லமை எல்லாம் என் ஆண்டவனிடமிருந்து வந்தவைகள். தெய்வ சம்பத்தும், அசுர சம்பத்தும், அழகும், விகாரமும் எல்லாம் என் ஆண்டவனிடமிருந்து வருபவைகளே. இவைகள் எல்லாம் அவருடைய மகிமை, விபூதி, அலகிலா விளையாட்டு, ஆனந்தக்கூத்து ஆகும். குழந்தாய் நாரதா, ஆண்டவனின் இந்த லீலைகளையும் மகிமைகளையும் கேட்டால் மானுட ஜன்மத்தின் தோஷங்கள், குறைபாடுகள், மாசுகள் அகலுகின்றன. உன் காதுகள் பிரயோஜனம் உடையனவாகின்றன. இன்னும் நான் வர்ணிக்கும் என் ஆண்டவனின் புனிதமான, தெய்வீகமான மகிமைகளையெல்லாம் கூர்ந்து கேட்டு மேலும் சிறந்த பக்தன் ஆவாயாக.

ஸ்கந்தம் 2 அத்தியாயம் 7

பிரம்மதேவர் சொன்னார்: "அப்பரம புருஷன் ஒரு தடவை பன்றியின் வடிவெடுத்து ஹிரண்யாக்ஷன் என்கிற அசுரனைத் தன் பற்களால் கிழித்துக்கொன்றார். அவ்வசுர ராஜன் இவ்வுலகைச் சமுத்திரத்தின் அடியில் ஒளித்து வைத்துவிட்டான். (இன்றைய உலகம் ஆடம்பரத்திலும், புலன் இன்பங்களிலும் மூழ்கிக் கிடக்கிறது, ஆணவ அகங்காரத்தில் மூழ்கிக் கிடக்கிறது என்பது போன்றது இது). யக்ஞமூர்த்தியாகிய என் ஆண்டவன் அந்த அசுரனைக்கொன்று உலகைப் பிரகாசப்படுத்தினார். என் ஆண்டவன் ருசி என்கிற பிரஜாபதிக்கும் ஆகுதிக்கும் சுயக்ஞன் என்கிற மகனாகப் பிறந்தார். சுயக்ஞன் தக்ஷிணையை மணந்துகொண்டு சுசமம் முதலிய அழியாத தெய்வ சம்பத்துக்களைப் பெற்றெடுத்தார். இவ்வுலகங்களின் துன்ப, துயரங்களைப் போக்கி, என் ஆண்டவன் மக்களைக் காப்பாற்றினார், மகிழச் செய்தார், சௌபாக்கியமாக வாழச் செய்தார். ஆகையால் அவருக்கு ஸ்ரீஹரி என்று சுயம்புவமனுவானவர் பெயரிட்டு ஸ்துதித்தனர். ஓ துவிஜா, தெய்வ சம்பத் வாய்ந்த குழந்தாய், கர்தமர் என்கிற பிரஜாபதிக்கும் தேவாஹூதி என்கிற தாய்க்கும் என் பிரபு மகவாகப் பிறந்தார். அவருக்கு ஒன்பது சகோதரிகளும் உண்டு. அப்பொழுது தன் தாய் தேவாஹூதிக்கு என் பிரபு பிரம்ம வித்தையைப் புகட்டினார். இவ்வுடல் எடுத்ததனாலும் குண சம்பந்தத்தாலும் மாசுற்று மலினமடைந்த மனதானது அப்போதனையினால் மலம் நீங்கப்பெற்றது. அப்பிறவியிலேயே தேவாஹூதி முக்தி அடைந்தாள். என் குழந்தாய், அத்ரி முனிவர் ஆண்டவனைத் தனக்கு மகனாகப் பிறக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார். கருணைக் கடலாகிய என் பிரபு அப்பிரார்த்தனைக்கு இணங்கி 'நான் உனக்கு மகவாகப் பிறக்கிறேன்' என்று சொன்னார். அங்ஙனமே அருள் கூர்ந்து தத்தாத்ரேயராகப் பிறந்தார். ஹைஹயர் முதலியோர் என் ஆண்டவனைப் பணிந்து பிரார்த்தித்து

அவருடைய பாததூளியை ஏற்று இவ்வுலக சௌபாக்கியங்களையும் பெற்றார்கள். அவர்கள் யோக மார்க்கத்திலும் முன்னேற்றம் அடைந்தனர். சிருஷ்டி துவக்கத்தில் பல்வேறு பரம்பரைகளை, குலங்களைத் தோற்றுவிப்பதற்காக சன் என்கிற தவத்தில் நான் ஈடுபட்டேன். இந்தத் தவத்தில் மகிழ்ந்தவராக என் பிரபு சனத்குமாரர், சனகர், சனந்தர், சனாதனர் என்கிற நான்கு ரிஷிகளாக வடிவெடுத்தார். இந்த நான்கு பெயர்களும் சன் என்கிற அடிச் சொல்லைக் கொண்டதாக, தவத்தின் பெயரைக் கொண்டதாக விளங்கி வருகின்றன. இந்த ரிஷிகளுக்கு அப்பரம புருஷோத்தமன் இதற்கு முந்தைய கல்பத்தில் பிரளயத்தில் மறைந்து போன ஆத்ம தத்துவத்தைப் போதித்தார். அவர்கள் அதனால் கிருதார்த்தர்களானார்கள்.

அதன் பிறகு ஆண்டவன் தர்மதேவதைக்கும் அவரது மனைவி மூர்த்திக்கும் மகவாக நர நாராயணராகப் பிறந்தார். மூர்த்தி தக்ஷனுடைய மகள். நர நாராயணர் மிக்க தேஜஸ்வி. மன்மதனுடைய தோழிகள் ஆகிய அப்சர ஸ்திரீகள் அவருடைய தவத்தைக் கலைக்க முயன்றனர். ஆனால் அப்பெண்களோ தம்மிலும் மிக்க அழகுடைய ஊர்வசி போன்ற தேவ மாதர்கள் அவரது சரீரத்தினின்று வெளிப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தனர். அவர்கள் நர நாராயணரது தவத்தைக் கலைக்க முடியாமல் தோற்று நாணமும் கோபமும் அடைந்தனர். சிவபிரான் தன் பார்வையாலேயே காமனைக் காய்ந்தார். சில ரிஷிகள் காமனை, ஊர்வசியை, ரம்பையைச் சபித்து விட்டனர். காமத்தை அவர்களால் வெல்ல முடிந்தது, ஆனால் கோபத்தை வெல்ல முடியவில்லை. அவர்களுடைய தவம் அழிந்தது, குறைவு பட்டது. ஷட்குண சம்பன்னன் என்று என் ஆண்டவன் கொண்டாடப்படுகிறான். அதே போல எல்லாக் கெட்ட குணங்களும் என் ஆண்டவனிடத்திருந்தே வந்தவைகள். (விவகார தசையில் நம் மனப்பான்மையை அனுசரித்து நமக்கு ஏற்படுகிற சொந்த லாப நஷ்டங்களை வைத்துத் தீமை, கொடுமை, கெடுதல், துன்பம் என்று நாம் வகைப்படுத்துகிறோம். ஆனால் நடுநிலையில், சாக்ஷி நிலையில் பிரபஞ்ச நடைமுறையில் இருமை, துவந்துவம் என்பது இல்லை.) அவைகளைப் படைத்தவன் அவனே. அவனே எல்லாவற்றுக்கும் நாயகன். அமைதியான தென்றலும், கோரமான புயலும் என் ஆண்டவனின் கட்டளைப்படியே ஏற்பட்டவைகள், அவன் விருப்பப்படியே நடக்கின்றன. நர நாராயணர் தவத்தைக் கலைக்க முயன்ற அப்சர ஸ்திரீகளின் முயற்சி பலிக்கவில்லை. அவர் காமத்தையும் கோபத்தையும் வென்று அவர்களை நாணமடையச் செய்தார். என் ஆண்டவன் துருவனாகப் பிறந்தார். உத்தான பாதன் என்கிற தன் தந்தையாகிய அரசன் முன்னால் தன் மாற்றாந்தாய் சொன்ன கடுஞ் சொற்களைக் கேட்டு வருந்தினவனாக சிறுவனாகிய துருவன் வனத்திற்குச் சென்று கடுமையான தவத்தில் ஈடுபட்டான். ஜீவனுக்குக் கடவுளைத் தவிர கதி, புகல், அடைக்கலம் வேறு யார்? குழந்தையாகிய துருவனின் தவத்திற்கு, அன்பிற்கு வசப்பட்ட என் பிரபு ஹரி அவனுக்குக் காட்சி கொடுத்து அவனைத் துருவ லோகத்தில் இருக்கச் செய்தார். துருவன் இருக்கிற இடம் துருவலோகம். பிருகுவும் மற்ற மேலான ரிஷிகளும் துருவலோகத்திற்கு மேல் உலகங்களில் வசிக்கிறார்கள். சப்த ரிஷிகள் துருவலோகத்திற்குக் கீழ் உலகங்களில் வசிக்கிறார்கள். இரு பாலாரும் துருவ லோகத்தில் வாழ விரும்புகிறார்கள், பிரார்த்திக்கிறார்கள்.

வீனா என்கிற அரசன் அதர்மத்தில் அநீதியில் ஈடுபட்டவனாகி அவனது செல்வம், சௌபாக்கியம், கீர்த்தி, வல்லமை ஆகிய யாவற்றையும் இழந்து நரகத்தில் இடர்ப்பட்டான். அவன் பொருட்டு ரிஷிகள் என் ஆண்டவனைப் பிரார்த்தித்தனர். என் பிரபு மகிழ்ந்து வீனா என்கிற அரசனுக்குப் புத்திரனாகப் பிறந்தார். அவ்வரசனைப் புத் என்னும் நரகத்திலிருந்து விமோசனம் அடையச்செய்தார். அதன் மூலம் புத்திரன் என்கிற பெயர் பொருளுடையதாயிற்று. இந்தப் பிருதுஎன்கிற வீனா புத்திரன் தனது ஆட்சிக் காலத்தில் இவ்வுலகில் ஏராளமான செல்வம், சௌபாக்கியம் கொழிக்கச் செய்தான். இவ்வுலகில் விரும்பிய அனைத்தையும் கொடுக்கும் காமதேனுவாக ஆக்கினான். மானுடரின் முயற்சிக்கேற்ப அது செல்வம், நலம் நல்கியது. அக்னிதரரின் புத்திரன்

நபிக்கும் அவர் மனைவி சுதேவிக்கும் ரிஷப தேவர் என்கிற புத்திரனுக என் ஆண்டவன் பிறந்தான். இந்த அவதாரத்தில் என் பிரபு தியானம், புலனடக்கம், நிஷ்டையில் ஆழ்ந்து போதல், உலக விவகாரத்திலிருந்தும், பொருள் களிலிருந்தும் தன்னைப் பிரித்துக்கொள்ளுதல் ஆகிய ஆத்ம சாதனங்களை அப்பியசித்துக் காட் டினுர். அவர் புறவுலகத்துக்கு ஜடம் போன்று ஆகிவிட்டார். எண்ணங்கள், மனேவிருத்தி கள் அடங்கி ஒரே ஒரு விருத்தியில் கடவுள் சிந்தனை, தன்னில் தானே இன்புற்றிருத்தல் என்ற நிலையில் அவர் சிலைபோல் இருந்தார். இந்த நிலையைப் பரமஹம்ஸநிலை என்று ரிஷி கள் பகர்கிருர்கள்.

என் பிரபு ஹயக்ரீவராகத் தோற்றமெடுத் தார். பொன் நிற மேனியும் குதிரை முகமும் உடையவராக ஹயக்ரீவர் என் வேள்வியில் தோன்றினுர். எல்லா வேதங்களும், எல்லா யக்ஞங்களும், எல்லா தேவதேவியரும் சேர்ந்து அடங்கப்பெற்ற வடிவம் அது. இந்த அவதா ரத்தில் வேத வேதாந்தங்களின் மந்திரங்கள், இனிய சுலோகங்கள், துதிப்பாடல்கள் முதலி யன ஹயக்ரீவரது மூச்சுக் காற்றிலிருந்துவெளிப் பட்டன. வைஸ்வத மனுவானவர் பகவான் நாராயணர் மச்சமாக அவதரித்து கல்ப காலத் தின் முடிவில் ஜலப் பிரளயத்தில் சஞ்சரித்து வருவதைப் பார்த்தார். ஜீவர்களுக்குப் பிரளய காலத்தில் அவரே ஆதரவாக, காப்பாக இருப் பதைக் கண்டார். ஜலப்பிரளயம் ஏற்பட்ட போது அதைப் பார்த்து நானே பயந்து போனேன். பயத்தினுல் என் வாயினின்று வேதங்கள் எல்லாம் பிரளய ஜலத்தில் விழுந்து விட்டன. மச்ச வடிவில் பிரளயத்தில் ஆனந்த சஞ்சாரம் செய்து கொண்டிருந்த என் பிரபு அவ்வேதங்களைக் காப்பாற்றினுர். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த பொழுது மத்தாகப் பயன்படுத்தப்பட்ட மந்திர மலையை என் பிரபு ஆமை வடிவெடுத்து முதுகில் தாங் கினுர்.

அடுத்தது என் பிரபு நரசிம்மமாக வடி வெடுத்தார். அசுர ராஜனுன ஹிரண்ய கசிபுவை நகத்தால் கிழித்துக் கொன்ருர். அவன் தேவர்களுக்கும் நல்லவர்களுக்கும் ஓயாத தொல்லையாக இருந்தான். ஆகவே அவனைக் கொன்று தேவர்களுக்கு அபயமளித் தார். இந்த அவதாரத்தில் அவர் உக்கிர மூர்த் தியாக விளங்கினுர்.

என் அருமைக் குழந்தாய்! கருணு மூர்த்தி யாகிய என் ஆண்டவன் ஒரு சமயம் ஒருபெரிய யானையைக் காத்தருளினுர். அந்த யானை ஒரு பெரிய யானைக் கூட்டத்தின் தலைவன். ஒரு சமயம் ஒரு நீர் நிலையில் ஒரு ராக்ஷச முதலை அந்த யானையின் காலைப் பற்றிக்கொண்டு மடு வுக்குள் இழுத்தது. தன் பலம் கொண்ட மட் டும் முயன்ற யானை தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் மிகவும் பரிதாபமாக ஆண்டவனை நோக்கிக் கதறிற்று. "ஒரு கரத்தில் தாமரையை வைத்திருப்பவனே! (கமலாகரா) ஓ புருஷோத்தமா, ஜகந்நாதா, ஆபத்பாந்தவா, அனுதரக்ஷகா, புண்ணிய ஸ்லோகா, தீனபந்தோ" என்று யானை கதறி யது. கருணு மூர்த்தியாகிய என் ஆண்டவன் கருடன் மேல் சங்கு சக்கரதாரியாய் அங்கு ஓடோடி வந்தான். தன் சக்கராயுதத்தால் முதலையைக் கொன்று யானையை அதன் துதிக் கையைப் பிடித்து மடுவிலிருந்து வெளியேற் றிக் காத்தான்.

வாமன அவதாரத்தில் என் பிரபு அதி ஆச் சரியமான காரியங்களைச் செய்தார். அதிதியின் பன்னிரண்டு புத்திரர்களில் வாமனரே வயதில் இளையவர். ஆனுல் அறிவிலும் ஆற்றலிலும் அவரே அனைவரிலும், மிக்கவராக இருந்தார். மூவடியால் மூவுலகும் அளந்த உத்தமன் அன்ருே அவர்! பலிச்சக்கரவர்த்தியிடமிருந்து அவன் யாகதீக்ஷையில் இருந்தபொழுது மூன்று காலடி இடம் வேண்டுமென யாசித்துப்பெற்று அளக்கும்போது மூவுலகையும் அளந்து விட் டார். அவர் இந்த ஜகத்துக்கெல்லாம் நாதன். ஜீவர்களும் அவர்களின் சகல சம்பத்துக்களும் என்ஆண்டவனுல் அருளப்பெற்றவை.ஆயினும் தர்மானுஷ்டானமுள்ள நல்லோரிடமிருந்து அவர்களுடைய சௌபாக்கியங்களை எல்லாம் வாங்கிக்கொண்டு அவர்களை முக்திக்கு உரிய வர்கள் ஆக்க வேண்டுமானுல் அவர்களிட மிருந்து அவைகளை யாசித்தே பெறவேண்டும். ஆகவே என் பிரபு வாமன வடிவில் வந்து பலிச்சக்கரவர்த்தியிடமிருந்து தனக்கு மூன்று காலடி இடம் வேண்டுமென யாசித்துப் பெற்

ஞர். குழந்தாய் நாரதா! தன் குலகுருவாகிய சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்டும் பலி மன முவந்து இந்தத் தானத்தைத் தாரைவார்த்துக் கொடுத்தான். இரண்டு அடிகளால் பூமியை யும் ஆகாயத்தையும் என் பிரபு அளந்துவிட் டான். "மூன்றாவது அடிக்கு இடமெங்கே?" என்று கேட்டபொழுது பலி மனமுவந்து என் ஆண்டவனின் திருப்பாதங்களைத் தன் சிரசில் ஏற்றான். வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்பதுடன் ஆண்டவனின திருவடி என்றுமே தன் சிரசின் மேல் இருக்கவேண்டும். அதை விட வேறு பாக்கியம் என்ன இருக்கிறது என்று எண்ணினன். பலியின் பகதி, தர்மா னுஷ்டானத்தில் உறுதியாக இருத்தல், சத்தி யம் கடைப்பிடித்தல ஆகிய சீலங்கள் எவ் வளவு பெரியவை! திரிலோக ஆதிபத்தியத் தையும் எவ்வளவு எளிதில் அவன் துறந்தான்! திரிலோக ஆதிபத்தியத்தைவிட ஆண்டவனின் திருவடியே பெரியது எனக் கருதினன் பலிச் சக்கரவர்த்தி. இந்த விதமாக என் பிரபு பலியை ஆண்டுகொண்டான். பூலோக சௌ பாக்கியங்களைப் பிக்ஷையாக ஏற்றுக்கொண்டு அவனுக்குப் பரலோக சாம்ராஜ்யம் அருளினன்.

என் குழந்தாய் நாரதா, உன பக்தி படிப்படி யாக வளர்ந்து அது பெரிய பராபக்தியாக ஆனபொழுது என் பிரபு உன்னிடத்துப் பெரு மகிழ்ச்சி அடைந்தவராக உன்னிடத்து ஹம்ஸ வடிவத்தில் தோன்றி உனக்கு ஆதம தத்து வத்தைப் போதித்தார் அல்லவா! ஆண்டவ னிடம் இவ்வளவு பெரிய அன்பும் தூய பக்தி யும் வைத்தால் அன்றி யாரும் ஞானம் பெற முடியாது. சத்திய லோகம் என்பது மூன்று உலகங்களுக்கும் மேற்பட்டது; அவற்றுக்கு அப் பாற்பட்டது. என் பிரபு ஆங்குப் புரிந்த லீலை கள் பலவாகும். அவனே கால சொருபியாக, மன்வந்தரமாக வடிவெடுத்துள்ளான். சுதர்சன சக்கரம் என்பது என் பிரபுவின் சக்தியின சின் னம். சக்ராயுதம் என்பது ஆயுதங்களில், அஸ் திரங்களில் எல்லாம் மிகப் பெரியது அதனால் தீயவர்களைச் சம்ஹரித்து இந்த உலகை என் பிரபு ரக்ஷித்து வருகிறான். எனபிரபு தன்வந்திரி என்னும் வைத்தியனாக அவதரிதது்த் தீராத வியாதிகளை எல்லாம் தீர்த்து வைத்தான். பிறவிப் பிணியையே தீர்தது வைக்கும் வைத் தீஸ்வரன் அன்றோ அவன்! அசுரர்கள் ஹவிர் பாகம் பெறாமல் தண்டிக்கப்பட்டார்கள். (கெட்டவர்களுக்கு உலக நலன்களில் பங்கு இல்லை. ஏனெனில் அதை அவர்கள் துஷ்பிர யோகம் செய்வார்கள்.) அந்த ஹவிர்பாகங் களை எல்லாம் என் ஆண்டவனின் புத்துயிர் கொடுக்கும் தன்வந்திரி அவதாரத்துக்குப் படைத்தார்கள், உரியதாக்கினர்கள். மக்க ளின் நன்மைக்காக என் ஆண்டவன் ஆயுர் வேதம் என்கிற வைத்திய சாஸ்திரத்தை அருளிச் செய்தான்.

க்ஷத்திரியர்கள் தங்களுக்கு வேதம் விதித் துள்ள தர்மப்படி நடக்காமல் அதர்மத்தில் இறங்கிவிட்டார்கள். பிராம்மணர்களை—நல்ல வர்களை—நல்லவைகளை அவமதித்தார்கள். தாங்களே விரும்பித் தங்கள் அழிவைத் தேடிக் கொண்டார்கள். அவர்களுடைய நடவடிக்கை கள் எல்லாம் உலகுக்குத் தீமை விளைவிப்பதாய் அமைந்தன. அவர்களுக்கு ஆண்டவன் அரு ளிய ராஜ்யம், சம்பத்து, அதிகாரம் எல்லாம் ஆணவ அகங்காரத்தால், அதிகார மமதையால் இன்ப வெறியினல் துஷ்பிரயோகம் செய்யப் பட்டன. இதனல் உலகுக்கு அதிகம் கேடு விளைந்தது. இந்த நிலையில் என் ஆண்டவன் பரசுராமனை அவதரித்தார். அளவற்ற ஆற்ற லும் பராக்கிரமமும் வாய்ந்த பரசுராமர் இரு பத்தொரு தலைமுறை க்ஷத்திரியர்களை வேர் அறுத்து நிர்மூலம் ஆக்கினர். என் பிரபு இங் ஙனம் தீயதையெல்லாம் அகழ்ந்து இவ்வுல கின் துயர்துடைத்தார். மாயையின் பிரபு வாகிய ஆண்டவன் நம்மிடத்துப் பேர் இரக கம் கொண்டு இக்ஷ்வாகு குலததில் ராமன், பர தன், லக்ஷ்மணன், சத்ருக்னன் ஆகிய நால்வ ராக அவதரித்தார். இந்த அவதாரத்தில் ஆண்டவன் பித்ருவாக்கிய பரிபாலனம் பண் ணினர். தந்தையார் வாக்குப்படி ஸ்ரீ ராமர் வனம் ஏகினர். வனவாச காலத்தில் ராவணன் சீதையை அபகரித்துக்கொண்டு போய்விட் டான். அதனல் ராக்ஷசர்களுக்கும் ஸ்ரீ ராமச் சந்திரனுக்கும் யுத்தம் மூண்டது. சிவபிரான் தன் பார்வையாலேயே திரிபுரங்களையும் காய்ந் தது போன்று ஸ்ரீ ராமனின் கோபத்துக்கு நடுங்கி சமுத்திரராஜன் ராமசேனைக்கு வழி விட்டான்.

ஆத்ம தரிசனம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1982-ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[29 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாம் நம் போக்கில் வாழ்வில் திருப்தியடைந்தவர்களாக இருக்கின்றோம். பிரபஞ்ச வாழ்க்கையில் உள்ள மோகம் என்றைக்கு அகல்கின்றதோ அன்றைக்குப் பரமனை அடையத் தகுதியுடையவர்களாகின்றோம். பிரபஞ்ச வாழ்க்கையில் நம் மனது கவரப்பட்டுச் சுகத்தைவிரும்புவதால் பிரபஞ்ச வாழ்க்கையினிடத்து நமக்குப் பற்று நீங்குவதில்லை. தொடர்ந்து பிரபஞ்ச வாழ்க்கையில் நம் மனது ஓடிக்கொண்டே இருக்கிறது.

இறைவன் மும்மூர்த்தி வடிவங்களில் இருந்து கொண்டு பிரபஞ்சத்தில் பெரியதொரு விளையாட்டை நிகழ்த்தி வருகின்றார். அவர் பிரம்ம தேவனாக இருந்து சிருஷ்டியைச் செய்து வருகின்றார். மகாவிஷ்ணுவாக இருந்து காப்பாற்றி வருகின்றார். சிவனாக இருந்து துடைத்துத் தள்ளி வருகின்றார். இம் மும்மூர்த்திகளுள் பிரம்ம தேவருக்குப் பிரபஞ்சத்தில் கோவில்கள் இல்லை. அம்பிகைக்கும், சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் கோவில்கள் ஏராளமாக இருக்கின்றன. விநாயகருக்கும் கார்த்திகேயனுக்கும் கோவில்கள் இருக்கின்றன. பிரம்மாவுக்கு ஏன் கோவில் கட்டுவதில்லை என்றால் பிறவி வேண்டாம் என்பது நம்முடைய லட்சியமாகும். நண்பர் ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்துக் கேட்டதாவது: "காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலும் எல்லாத் தெய்வங்களுக்கும் கோவில்கள் இருக்கின்றன. ஆனால் பிரம்மாவுக்கு மட்டும் கோவில்கள் இல்லை. காரணம் என்ன?" பரமஹம்சர் பகர்ந்ததாவது: "ஜீவன் ஒவ்வொருவனும் பிரம்ம தேவனுக்குக் கோவிலாக அமைந்துள்ளான்." பிரம்மதேவன் சிருஷ்டி கர்த்தா ஆவான். ஜீவர்களனைவரும் காம வசப்பட்டவர்களாய்ச் சிருஷ்டி செயலைச் செய்து வருகின்றார்கள். இறைவனடியைச் சேராதவர்கள் பிறவியைப் பெருக்கக்கொண்டே போகின்றார்கள். இறைவனடியைச் சேருகின்றவர்கள் உலகப்பற்றை ஒதுக்கித் தள்ளியவர்களாகின்றார்கள்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

உலகப் பற்று இருக்கும் பரியந்தம் பிறவியும் இருந்துகொண்டே இருக்கும். யோகமும் போகமும் ஒன்றுசேரமாட்டா. போகத்தை ஒதுக்கினால்தான் யோகம் கைகூடும். இவ் உண்மை பலருக்கு விளங்குவதில்லை. குடும்பத்திலிருந்து கொண்டு சிற்றின்பத்தை அனுபவித்துக்கொண்டே பேரின்பம் பெறலாம் என்று எண்ணுகின்ற கூட்டம் உண்டு. போகியாய் இருந்துகொண்டே யோகியாகவும் வாழலாம் என்று ஒருவர் கூறினால் அப்பேர்வழியிடம் ஏராளமான கூட்டம் போகும். போகத்தில் விருப்பம் கொண்டுள்ளவர்கள் அதை விடுவதற்கு ஆயத்தமாயில்லை. "ராமனுள்ள இடத்தில் காமனில்லை; காமனுள்ள இடத்தில் ராமனில்லை" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியுள்ளார். எனவே யார் உலக ஆசையை அடியோடு ஒதுக்குகின்றார்களோ அவர்கள் தாம் யோகத்திற்குத் தகுதியுடையவர்களாவார்கள். மற்றையவர்கள் பற்றுடன் இருந்தாலும் அவர்களுக்கு அனுமதி தருகின்ற பாங்கில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: "மானுடா! நூற்றுக்கு நூறு நீ உலகில் பற்றுடையவனாக இருக்கின்றாய். அடியோடு உலகப்பற்றை உன்னால் விட்டுவிட முடியாவிட்டால் சிறிதளவாவது தெய்வப்பற்றை வளர்த்து வா."

தெய்வப்பற்று உண்டாவதால் உலக வாழ்வில் ஒரு குறையும் வந்து விடாது. योगः कर्मसु कौशलं யோக: கர்மசு கௌசலம் என்பது கோட்பாடு. திறமையுடன் செயலாற்றுவதே யோகம் எனப்படும். யோகத்தில் நிலைத்திருக்கின்ற மனதுக்குத் தெளிவு இருந்துகொண்டே இருக்கும். மனதில் தெளிவு இருக்கின்ற அளவு காரியம் சிறப்பாக நடைபெறும். உலக காரியங்களில் ஆழ்ந்து மூழ்கியிருப்பவர்களுக்குச் சத்சங்கம் செய்யவோ கடவுளைப்பற்றி நினைக்கவோ நேரம் கிடைக்காது. அவர்கள் கடவு

ளைப் பற்றி நினைப்பதையெல்லாம் பின்னல் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறுவார்கள். உலகப் பற்றில் முழு மனதையும் ஈடுபடுத்துவதை விட ஐந்து சதவீத மனதைத் தெய்வத்திடம் செலுத்தினல் நமக்குக் கிடைக்கும் லாபம் என்ன என்பதைப் பார்ப்போம். தொண்ணூற்றைந்து பங்கு உலகத்தில் ஈடுபட்டுள்ள மனதைக் கொண்டு நூறு பங்கு மனது உலகத்தில் ஈடுபட்டுள்ள செயலைச் செய்துவிடலாம். ஐந்து பங்கு மனதைக் கடவுளிடம் செலுத்தியது நமக்கு லாபமாகும். உலகத்தில் ஈடுபடுகின்ற மனதைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டே போய்த் தெய்வத்திடம் ஈடுபடுகின்ற மனதை அதிகரித்துக் கொண்டேவந்தால் உலக காரியமும் ஒழுங்காக நடைபெறும்; தெய்வப்பற்றும் அதிகரித்துக் கொண்டே வரும். கிருஷ்ணன் தம் வாழ்க்கையில் இதை விளக்கிக் காட்டியுள்ளான். கிருஷ்ணன் நித்திய பிரம்மசாரியாக இருந்தவன். பதினயிரம் மனைவிகள் அவனுக்கு இருந்ததாகக் கூறுவது கட்டுக்கதையாகும். நாரதர் கிருஷ்ணனுடைய வீட்டுக்குச் சென்று பார்த்த பொழுது கிருஷ்ணனை அங்குக் கண்டார். பிறகு அவர் ஒவ்வொரு வீடாகச் சென்ற பொழுதும் ஆங்குக் கிருஷ்ணன் இருப்பதைக் கண்டார். ஒவ்வொரு வீட்டிலும் அவர் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டவராக இருந்தார். நாரதர் இதைப் பார்த்து வியப்படைந்தார். இது கண்ணனுடைய மாயாசக்தியின் மகிமையாகும்.

இத்திறமை தெய்வப்பற்று உடையவனுக்கு வந்தமைகின்றது. திறமையைக் காட்டித் தருகின்ற பாங்கில் இத்தனை கோடி ஜீவர்களுக்கும் புருஷனுக இருந்து கொண்டு எல்லார் உள்ளததிலும் மனச்சாட்சியாக அவர் இருக்கின்றார். மனச் சாட்சியாக இருந்துகொண்டு அனுமதி தருகின்ற முறையிலும் அனுமதி தராத நிலையிலும் இருக்கின்றார். சில காரியங்களுக்கு மனச்சாட்சி இடம் தருகிறது. இன்னும் சில காரியங்கட்கு இடம் தருவதில்லை. அம் மனச் சாட்சியை மகாத்மாகாந்தி inner voice என்று குறிப்பிடுகின்றார். மனச் சாட்சி தெளிவு பெற்றால் நாம் தெய்வத்துக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருப்பவர்களாகின்றோம். மனச்சாட்சி வேறு, தெய்வம் வேறு அன்று. மனதில் மாசு படியப் படிய அது மனச் சாட்சியை மறைக்கின்றது. மனத் தெளிவு நாம் பெற்று வரவர மனச்சாட்சி சொல்கின்ற படிதான் நாம் நடப்போம்.

'பொய்வளரும் நெஞ்சினர்தாம் காணுத காட்சியே, போக்கு வரவற்ற பொருளே' என்ற கோட்பாடு கடவுளின் செயலைக் குறிக்கின்றது. போக்கு வரவற்ற பொருளாகிய கிருஷ்ணன் எல்லார் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறாராயினும் பொய் வளர் நெஞ்சினர்கள் அவரைக் காண்பதில்லை. அவர் எதிலும் கட்டுப்படாதவராகவும், நித்திய பிரம்மச்சாரியாகவும் இருக்கின்றார். நாம் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காகப் பிறவி எடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பிறவியில் உலகப் பற்றைக் குறைத்துத் தெய்வப்பற்றை வளர்த்துக்கொண்டே வரவேண்டும். அவ்வாறு உலகப்பற்றுக் குறையக் குறைய காரியம் சிறப்பாக நிகழ்ந்து வருவதைக் காண்போம். இது மனித வாழ்விலுள்ள பெரிய ரகசியமாகும்.

கடவுளைப் பற்றி நினைக்க நேரமில்லை என்று சிலர் சொல்லுகின்றனர். ஆனல் அவர்கள் வம்பு பேசுவதிலும் சோம்பலுற்றிருப்பதிலும் நேரத்தை வீணக்கிக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் சிந்தனை செய்வதால் உலக காரியத்துக்கு ஒரு நஷ்டமும் வந்துவிடாது. இதைக் கண்ணன் விளையாட்டாகக் காட்டியுள்ளார். மழை பெய்து ஓய்ந்த பிறகு உண்டாகும் தெளிந்த நிலை சரத்காலம் எனப்படும். அக் காலத்தில் கண்ணன் யமுனை நதிக்கரையில் நின்று கொண்டு புல்லாங்குழல் ஓசையை எழுப்பினன். கண்ணனுடைய புல்லாங்குழல் ஓசையைக் கேட்ட கோபிமார்கள் தங்களுடைய வேலைகளையெல்லாம் நிறுத்தி வைத்து விட்டு அவ்வோசையில் மனதைப் பறிகொடுத்தவர்களாக அவ்வோசை வந்த இடத்தை நோக்கி ஓடினர்கள். தன் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தவள் கண்ணனின் குழலோசையைக் கேட்டதும் அச்செயலை அப்படியே நிறுத்திவிட்டு ஓடினள். கணவனுக்கு அமுது படைத்துக்கொண்டிருந்தவள் குழலோசையைக் கேட்டதும், அச்செயலை அப்படியே நிறுத்தி விட்டு ஓடினள். சமையல் செய்து

கொண்டிருந்தவள் தன் செயலை அப்படியே நிறுத்திவிட்டு ஓடினாள். இங்ஙனம் எல்லாரும் தங்கள் தங்கள் செயல்களை நிறுத்திவிட்டு ஓடி யமுனை நதிக்கரையில் கண்ணனுடன் சேர்ந்தார்கள். கண்ணனுடைய புல்லாங்குழல் ஓசையில் பரமானந்தம் அடைந்தவர்களாக அநுபூதியில் திளைத்திருந்தார்கள். அவர்கள் தங்கள்காரியங்களை நிறுத்தி விட்டுப் போனதினால் அவர்கள் காரியங்கள் தடைபடவில்லை. அவர்களுக்குப் பதிலாக வேறு யாரோ வந்து அந்தக் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். எல்லாரும் கடவுள் நாட்டம் உடையவர்களாக மாறி விட்டால் உலக காரியம் எப்படி நிறைவேறும் என்ற கவலை வேண்டியதில்லை. எல்லாரும் கடவுள் பற்று உடையவர்களாக மாறி அமைந்து விடமாட்டார்கள். அப்படி மாறி அமைந்தாலும் தெய்வப்பற்று வளர வளரச் சிறிதளவு மனதைச் செலுத்தி உலக காரியங்களை விளையாட்டுப்போல் செய்து முடித்து விடலாம். ஜனக மகாராஜா இதற்குச் சான்றாக விளங்குகின்றார். ஜனகர் ஒரு பெரிய ராஜ்ஜியத்தையே ஆட்சி புரிந்து வந்தார். அவருடைய ஆட்சியில் எந்தக் குறையும் இருக்கவில்லை.

வியாசருக்குச் சுகப்பிரம்மம் என்ற புதல்வர் இருந்தார். அவர் பிறந்ததிலிருந்து பிரம்ம சொரூபத்திலேயே திளைத்திருந்தார். வியாசர் ஐதிகத்தை முன்னிட்டுச் சுகப்பிரம்மத்தை ஞான தீட்சை பெறுவதற்காக ஜனகரிடம் அனுப்பி வைத்தார். அரசாட்சி செய்து வந்த ஜனகர் குரு ஸ்தானத்திற்குத் தகுதியுடையவராக இருந்தாரென்றால் அவருடைய ஞானம் எத்தகையது என்பது விளங்குகிறது. தந்தையினுடைய வேண்டுகோளின்படி சுகர் மிதிலாபுரிக்கு வந்தார். சுகர் வருவதை ஜனகர் அறிந்துகொண்டு "ஒரு ரிஷிபுத்திரன் வருகின்றான். அரண்மனைக்குள் அனுமதிக்காதீர்கள். அரண்மனை வாயிலுக்கு வெளியிலேயே நிறுத்தி விடுங்கள்" என்று ஆணை பிறப்பித்திருந்தார். அவருடைய ஆணையின்படி சுகரை அரண்மனை வாயிலில் நிறுத்தி வைத்தார்கள். மூன்று நாட்கள் அவரை யாரும் கவனிக்கவில்லை. உணவில்லாமல் அரண்மனை வாயிலிலேயே நின்றுகொண்டிருந்தார். மூன்று நாட்கள் அவரைப் பாராமுகமாக விட்டுவிட்டு நான்காவது நாள் ஜனகர் தம் மந்திரி பிரதானிகளோடு வந்து ராஜரீதியில் வரவேற்பளித்தார். மனதைக் கவருமாறு ஏராளமான காட்சிகளை ஜனகமகாராஜா அமைத்து வைத்திருந்தார். மூன்றுநாள் அரண்மனைக்கு வெளியில் பராமுகமாக வைக்கப்பட்டிருந்தபொழுதும், நான்காவது நாள் செய்த ஆரவாரத்துக்கு இடையிலும் சுகப்பிரம்மம் மனதைச் சொரூபத்தில் வைத்திருந்து நடுநிலை பிறழாது இருந்தார். இத்தகைய சுகப்பிரம்மத்துக்கு ஜனகர் குருவாக இருந்தாரென்றால் ஜனகருடைய நிறை ஞானம் விளங்குகிறது. அத்தகைய நிறை ஞானத்திலிருந்த ஜனகர் ராஜ்யபாரத்தைத் திறம்பட நிகழ்த்தி வந்தார். உலக கிருத்தியங்களுக்குப் பரஞானம் இடைஞ்சலில்லை என்பதை ஜனகருடைய வாழ்க்கை விளக்குகிறது.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்வதாவது: "பலாப்பழம் அரிகின்றவன் முதலில் கத்திக்கும் தன் கைக்கும் எண்ணெய் பூசிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பலாப்பழத்திலிருந்து வரும் பால் கையிலும் கத்தியிலும் ஒட்டிக்கொள்ளும். அஃதே போன்று மானுடா, நீ பிரபஞ்ச வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு முன்பு தெய்வ பக்தி என்ற எண்ணெயைப் பூசிக்கொள். அப்பொழுது உலக பந்தம் உன்னை ஒன்றும் செய்யாது. முதலில் சாதனங்கள் புரிந்து பிரபஞ்ச வாழ்க்கை நித்தியமானதன்று என்பதை அறிந்துகொள்ளுதல் வேண்டும். உலகத்துக்குப் பயிற்சி பெறுவதற்காக வந்திருக்கின்றோம். எனவே சாதனங்கள் புரிந்து மனதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். இங்ஙனம் வாழ்க்கையை விமர்சனம் செய்து அறிந்துகொண்டு உலக வாழ்க்கையில் ஈடுபட்டால் பந்த பாசத்தில் கட்டுப்படமாட்டோம்.

மக்களிடம் இருக்கும் பந்தபாசமே அவர்களுக்கிடையில் வேற்றுமையை உண்டுபண்ணுகிறது. பந்தபாசத்தில் அகப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் சொருபத்தை மறந்துவிடுகிறார்கள். வாழ்க்கையின் லட்சியம் என்ன என்பதையும் மறந்துவிடுகின்றார்கள். சொருபத்தை அறிந்திருப்பவர்களின் உலக வாழ்வு நன்றாக நடைபெறுகிறது. சொருப ஞான

மும் அவர்களிடம் மாருது இருந்து வருகிறது. ஜனக மகாராஜாவின் வாழ்வில் ஒரு நிகழ்ச்சியைக் காண்போம். பிரம்ம சூத்திரத்தை எழுதிய வியாசர் ஒரு சமயம் பாடம் நடாத்திக்கொண்டிருந்தார். ஜனகரும் இன்னும் சில துறவிகளும் பாடம் கேட்டுக் கொண்டிருந்தனர். ஜனக மகாராஜா நன்கு ரசித்துப் பாடத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆகையால் வியாசரும் அவரைப் பார்த்துப் பாடம் புகட்டிக்கொண்டிருந்தார். மற்றவர்களை வியாசர் கண்ணெடுத்துப் பார்த்தும்பார்க்காமலும் இருந்தார். பாடம் கேட்டுக்கொண்டிருந்த மற்றத்துறவிகள் எண்ணியதாவது: "ஜனகர் சக்கரவர்த்தியாக இருக்கின்ருர். ஆகையால் வியாசர் அவரையே பார்த்துப் பேசுகின்ருர். நாம் பரதேசிகள். ஆகையால் அவர் நம்மைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை." இப்படி அவர்கள் எண்ணிய எண்ணம் வியாசருக்குத் தெரிந்தது. பாடம் மிக நுட்பமான பகுதியைப் பற்றியதாக இருந்தது. வியாசர் அதற்கு வியாக்கியானம் சொல்லிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் ஒருவன் அவசரமாக ஓடி வந்து மிதிலாபுரி தீப்பற்றி எரிகிறது என்று கூறினன். ஜனகர் இச்செய்தியைக் காதில் போட்டுக்கொள்ளாது தாம் கேட்ட விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். மற்றத் துறவிகள் அச்செய்தியைக் கேட்டுப் பதைபதைப்பு அடைந்தனர். வியாசர் அவர்களுடைய பதைபதைப்புக்குக் காரணம் என்ன என்று கேட்டபொழுது அவர்கள் குடில்களில் கௌபீனம் உலர வைத்திருப்பதாகவும் அவைகள் நெருப்பில் எரிந்து போய்விடும் என்றும் கூறினர். கூறியதோடு மட்டுமன்றி கௌபீனங்களை நெருப்பினின்று விடுவிக்க எழுந்து ஓடினர். குடில்களுக்குப் பக்கத்தில் போனபொழுது நெருப்பு அங்கில்லை என்பதைக் கண்டார்கள். திரும்பி வந்து பாடங்கேட்க அமர்ந்தார்கள். கௌபீனங்களைக் காப்பாற்றியாய் விட்டதா என்று வியாசர் கேட்டார். நெருப்பு ஏதும் ஆங்கு இல்லை என்று அவர்கள் சொன்ஞர்கள். அப்பொழுது வியாசர் பகர்ந்ததாவது: "கௌபீனம் போய் விட்டால் வேறு பெற்றுக் கொள்ளலாம். தலைமைப்பட்டணமே தீப்பற்றி எரிகிறது என்பதைக் கேட்ட பொழுதும் ஜனகர் பாடம் கேட்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். பற்றற்றவர் ஜனகரா, நீங்களா என்பதைக் கூறுங்கள்." அப்பொழுதுதான் துறவிகளுக்கு விஷயம் விளங்கியது.

உலகப்பற்று அதிகரிக்க அதிகரிக்கத் தெய்வப்பற்றுத் தாஞகப் பின்னணிக்குப் போய் விடும். தெய்வப்பற்று ஓங்க ஓங்க உலகக் கிருத்தியங்கள் பற்றில்லாத நிலையில் நன்கு நடைபெறுகின்றன. தெய்வம் பிரபஞ்சம் யாவையும் சிருஷ்டி செய்தும் பற்றற்ற நிலையில் இருக்கின்ருர். தெய்வத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோம். அங்ஙனம்ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்கிடையில் தெய்வப்பற்றை வளர்த்து வருவோமாஞல் உலகக் கிருத்தியங்கள் நன்கு நடைபெறும்; தெய்வப்பற்றும் ஓங்கிவரும். இதைப் பற்றி ராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்வதாவது: "மானுடா, நீ படிப்படியாக உலகப்பற்றைக் குறைத்துத் தெய்வப்பற்றை வளர்த்து வா. உலகப்பற்று நாற்பத்தொன்பது பங்கும் தெய்வப்பற்று ஐம்பத்தொரு பங்குமாக எந்தப் பிறவியில் உன்னிடத்தில் இருக்கிறதோ அந்தப் பிறவி உனக்குக் கடைசிப் பிறவி என்பதை அறிந்துகொள்." இக்கோட்பாட்டை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமக்கு உலகப்பற்று அதிகமா,தெய்வப்பற்று அதிகமா என்பதை அறியவேண்டும். நாள் ஏற ஏற நம்மிடையே தெய்வப்பற்று ஓங்கிவரவேண்டும். உலகப்பற்று படிப்படியாகக் குறையவேண்டும். இது முற்றிலும் அவசியம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரீரத்தை உகுத்தபின் சாரதா தேவியார் பகர்ந்ததாவது: "இனி எனக்கு உலகில் என்ன வேலை இருக்கின்றது? நானும் உடலை உகுத்துவிட விரும்புகின்றேன்." ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாரதாதேவியாருக்குக் காட்சி தந்து, "நான் ஒரு வீட்டிலிருந்து இன்னெரு வீட்டுக்குப் போவது போன்று சரீரத்தை உகுத்திருக்கின்றேன். நீ கவலைப்படுவது எதற்காக? நீ விதவைக் கோலம் பூணுதல் கூடாது" என்ருர். அன்று முதல் சாரதா தேவியாரும் சுமங்கலியாகவே இருந்து வந்தார். "எனக்கு உலகில் என்ன வேலை இருக்

கிறது?'' என்று சாரதாதேவியார் கேட்டார்கள். "பக்தர்களையும் பக்திமதிகளையும் ஊக்குவிக்கின்ற கடமையை மேற்கொள். அக்கடமையை நிறைவேற்றிய பின்பு நீ சரீரத்தை உகுத்து விடலாம்'' என்றார்.

பற்றற்றவர்கள் கிருபைகூர்ந்து உலகுக்கு அரிய பெரிய காரியங்களைச் செய்கின்றார்கள். பற்றுடைய நாம் கண்ணும் கருத்துமாக அவர்கள் காட்டித் தந்த வழியைப் பின்பற்றுவோமானால் உய்வடையலாம். மனதில் தெய்வப் பற்று என்ற எண்ணெயைப் பூசிக்கொண்டால் உலகப்பற்று நமக்கு எவ்விதத் தீங்கும் இழைத்துவிட முடியாது என்பதைச் சாரதா தேவியார் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் அதிகம் தீர்த்த யாத்திரை செய்யவில்லை. அவர் விட்டுச் சென்ற அச்செயலைப் பூர்த்தி செய்வதற்கு இந்தியாவிலுள்ள பல இடங்கட்கும் சாரதாதேவியார் யாத்திரை சென்றார்கள். அந்த யாத்திரையின்போது ராமேஸ்வரத்துக்குச் சாரதாதேவியார் வந்திருந்தார்கள். விவேகானந்தருக்குச் சிஷ்யராக இருந்த ராமநாதபுரம் ராஜா சாரதாதேவியாரை வரவேற்று ராமேஸ்வரத்தில் தரிசனத்திற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். மூலஸ்தானத்துக்குச் சென்று சாரதாதேவியாரே அர்ச்சனை செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார். அரண்மனையிலிருந்த விலை உயர்ந்த பொருள்களையெல்லாம் மேசையின் மீது பரப்பிவைத்துச் சாரதாதேவியாருக்கு விருப்பமானதை அதிலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பணிவுடன் விண்ணப்பித்துக்கொண்டார். எளிய வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த சாரதாதேவியார் "சாதுக்களாகிய எங்களுக்கு நகைகள் தேவையில்லை. உங்களுடைய திருப்திக்காக என்னுடன் வந்துள்ள ராதை என்ற இந்தச் சிறுமி தனக்கு விருப்பமானதை இதிலிருந்து எடுத்துக்கொள்ளட்டும்'' என்று கூறினர். சிறுமியினுடைய உள்ளத்தில் இப்பொருளின்மீது எந்தவித ஆசையும் வரக்கூடாது என்று பிரார்த்தித்துக் கொண்டார். ராதை என்ற சிறுமி எல்லா நகைகளையும் பார்த்துவிட்டு இதில் எதுவும் தனக்கு வேண்டாமென்றும் எழுதுகோல் மட்டும் ஒன்று வாங்கித்தந்தால் போதும் என்றும் கூறினள். அரையணா விலையில் கடையில் ஒரு எழுதுகோல் வாங்கித் தந்து அச்சிறுமியின் விருப்பத்தை நிறைவேற்றினார்கள். சாரதா தேவியார் என்ன நினைத்தார்களோ அவ்வெண்ணமும் நிறைவேறிற்று.

சான்றோர்கள் பிரபஞ்சப் பொருள் எதற்கும் ஆசைப்படுவதில்லை. பிரபஞ்சப் பொருள்கள் வலிய வந்தாலும் தேவையில்லை என்று அவற்றை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பற்றுள்ளவர்களிடம் உலகப் பொருள்கள் அகப்படமாட்டா. பற்றில்லாதவர்களிடம் உலகப் பொருள்கள் ஏராளமாக வந்து குவியும். "பரத்தை நாடி இரு. உலகப்பொருள்கள் அனைத்தும் உன்னை நாடி வரும்" என்பது ஏசுநாதருடைய வாக்கு. பரநாட்டம் கொள்வதைத் தவிர இதர நாட்டம் நமக்கு இருக்கக் கூடாது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு பரத்தில் ஈடுபடுகின்றோமோ அதற்கேற்ற பிரகாரம் நாம் தேடும் பொருள்கள் நமக்கு வந்து சேர்கின்றன. ராமகிருஷ்ணரும் சாரதாதேவியாரும் தம் தேவைக்கு மேல் எப்பொருளையும் வைத்திருக்கவில்லை. விஸ்வத்துக்குத் தலைவனாக இருக்கின்ற சிவனார் இப்பாடத்தையே புகட்டுகின்றார். மனிதன் இதை மறந்துவிட்டுச் செல்வத்தை ஏராளமாகக் குவிக்க முயலுகின்றான். அல்லும் பகலும் செல்வத்தைப் பெருக்குவதில் அரும்பாடுபடுகின்றான். சம்பாதிக்கின்ற எப்பொருளும் சாகும்பொழுது உடன் வருவதில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு நாம் பெற்றுள்ள மனப்பரிபாகத்துடன் இவ்வுலகத்தை விட்டுப் பிரிகின்றோம். உலகத்தில் வாழும்பொழுது பொருளைப் பெருக்குவதன் மூலம் ஆசையைப் பெருக்கி அருளை மறந்தவர்களாகின்றோம். உலகில் நாம் தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டு வாழ்க்கையில் வீண் ஆசைகளைப் பெருக்குவதைத்தவிர்க்க வேண்டும். உலகப்பற்று அற்று இருக்கின்ற அளவு சாதனத்துக்கு நல்லது. அருளைத்தேட வேண்டிய நாம் அதை மறந்துவிட்டு மரண காலத்துக்குப் பயன்படாத பொருளைத் தேடுவதில் காலத்தைக் கழித்து வருகின்றோம். அருளைத் தேடவேண்டும் என்பதை ராமகிருஷ்ணரும், சாரதா தேவியாரும், சிவனாரும் நமக்குப் புகட்டி வருகின்றார்கள்.

"பணம் வீடு கட்ட உதவும்; நகை, உடை வாங்க உதவும்; பக்தியைப் பெறுவதற்குப் பணம் உதவாது. பணத்தைக் கொடுத்துப் பக்தியை விலைக்கு வாங்க முடியாது. மேலும் பணம் பக்திக்கு இடைஞ்சல் ஆகையால் நான் பணத்தைத் தொடமாட்டேன்" என்ற விரதத்தை ராமகிருஷ்ணர் எடுத்துக்கொண்டார். ஒரு கையில் பொன்னையும் மற்றொரு கையில் மண்ணையும் எடுத்துக் கொண்டு "மண் தான் பொன்னாகின்றது. பொன் மறுபடியும் மண்ணாகின்றது. இதில் பற்று வைத்து என்னுடைய பக்தியை இழந்துவிட மாட்டேன். திரிகரணங்களாலும் பணத்தைத் தொடேன்" என்று சங்கல்பித்து மண்ணையும் பொன்னையும் கங்கையில் விட்டெறிந்தார். அன்று முதல் அவருடைய திரிகரணங்களாலும் பணத்தைத் தொட இயலவில்லை. அவர் செய்த சங்கல்பத்திற்கு ஏற்ற பிரகாரம் அவருடைய நாடி நரம்புகளெல்லாம் மாறி அமைந்தன. பணத்துக்கு அடிமையாகக் கூடாது. பணம் நமக்கு அடிமையாக இருக்கவேண்டும். பணத்தை நல்ல முறையில் சம்பாதித்து மக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் அதைச் செலவழித்து வரவேண்டும். பணத்துக்குப் பாலம் போன்று நாம் இருக்கவேண்டும். பாலத்திற்கு ஒரு புறம் ஜலம் வந்துகொண்டும் மறுபுறம் ஜலம் வெளியேறிக் கொண்டும் இருப்பது போன்று நல்ல முறையில் பணத்தைச் சம்பாதித்து நல்ல காரியத்துக்குச் செலவழித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

பற்று வைக்காத நிலைக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்வு பெரிய சான்றாகிறது. இன்றைய உலகம் பணம் படைத்தவர்களைப் பெரியவர்களாகப் போற்றுகின்றது. ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரோ திரிகரணங்களாலும் பணத்தைத் தொடாது பாரமார்த்திக வாழ்வில் ஈடுபட்டிருந்தார். பணத்தைத் தொடமாட்டேன் என்று செய்த சங்கல்பம் அவருடைய நாடி நரம்பெல்லாம் வேலை செய்து வந்தது. அவருக்குத் தெரியாது அவர் சரீரத்தில் நாணயம் பட்டுவிட்டால் அவரால் அதைத் தாங்க முடியாது. ஒரு தடவை அவருடைய சங்கல்பத்துக்கு ஏற்ப அவருடைய சரீரம் நடந்துகொண்டதைச் சுவாமி விவேகானந்தர் சோதனை செய்து அறிந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அமரும் ஆசனத்தின் மேல் அவர் இல்லாத சமயம் பார்த்துக் காலணா நாணயத்தை வைத்துவிட்டு மறைந்திருந்து பார்த்தார். வெளியில் சென்றிருந்த ராமகிருஷ்ணர் அறைக்குள் வந்து ஆசனத்தின் மீது அமர்ந்ததும் அவர் மேனியில் அந்தக் காலணா நாணயம் பட்டது. அப்பொழுது தேள் கொட்டுவது போன்ற வேதனை அவருக்கு உண்டாயிற்று. உடனே ஆசனத்தை விட்டு எழுந்து 'விஷப்பூச்சி தீண்டிவிட்டது பாருங்கள்' என்றார். ஆசனத்தின்மீது காலணா நாணயத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதை மற்றவர்கள் எடுத்து அப்புறப்படுத்திய பின்பு தான் அவர் ஆசனத்தின் மீது அமர முடிந்தது. இந்தச் சோதனையைச் செய்தவர் நரேந்திரர் என்பதை அறிந்ததும் ஒருவருடைய வாக்குக்கு ஏற்ப வாழ்க்கை அமைந்திருக்கிறதா என்பதை இப்படித்தான் சோதிக்க வேண்டுமென்று நரேந்திரருடைய செயலை முற்றும் ஆமோதித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனம் அத்தகைய தூய நிலையில் இருந்தது. அருள் நிலையில் நாம் செல்வதற்குப் பதிலாகப் பந்த பாசத்தை வளர்த்து நெறி பிறழ்ந்து போய்க்கொண்டிருக்கின்றோம். சான்றோர்கள் நம்முடைய செயலை அனுமதிப்பதில்லை. உலக சம்பந்தமான உடைமைகளை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு நலம் உண்டாகும். உலக சம்பந்தமான உடைமைகளை எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பந்தபாசத்திற்குள் அகப்பட்டுக்கொள்கின்றோம். பிரயாணத்தின்பொழுது மூட்டை முடிச்சுகளை ஏராளமாக எடுத்துச் செல்பவர்கள் கூலியாளினுடைய சொல்படி நடந்துகொள்ள வேண்டும். கையில் ஒரு பையுடன் சென்றால் யாருக்கும் நாம் தொந்தரவு கொடுப்பதில்லை. உலகப்பற்றைக் குறைத்துத் தெய்வப்பற்றைவளர்ப்போமானால் மானுட ஜன்மத்தை நன்கு பயன்படுத்துபவர்களாகின்றோம். மனம் பிரபஞ்சப் பொருளிலிருந்து விலகுவதற்குத் தேவைகளைக் குறைப்பது அவசியமாகிறது. பிரபஞ்சப் பொருள்களிலிருந்து விலகிய தெளிந்த மனதைக்கொண்டு தான் ஆத்மதரிசனம் செய்யமுடியும். (முற்றும்)

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

கண்ணனை எண்ணிக்கொண்டே மதுராவை விட்டுப் புறப்பட்டு ரயிலில் ஆக்ரா சென்று சேர்ந்தோம். தாஜ்மஹாலை விட மிகவும் அற்புதமான வேலைப்பாடமைந்த ஜைனக் கோயில்கள் ராஜஸ்தானில் உள்ள மவுண்ட் ஆபுவில் உள்ளன. தாஜ்மஹாலில் சலவைக் கற்கள் வரவர ஒளி இழந்து வருகின்றன. இந்தக் கட்டடத்தின் சாயலில் ஔரங்கபாத்திலும் ஒன்று இருக்கிறது. ஆக்ராவில் ஒரு பெரிய சிவன் கோயில் இருக்கிறது. அங்கு நன்கு வழிபாடு செய்தோம். பின்னர் ஜெய்ப்பூரை நோக்கி எங்கள் பயணம் தொடர்ந்தது. இனிய சுபாவமும், கலகலப்பும், உறுதியான வீர உணர்வும் கொண்டவர்கள் ரஜபுத்திரர்கள்.

நாங்கள் தங்கியிருந்த காரியாலய அன்பர் உணவு, தங்கும் வசதி முதலியவைகளில் எந்தக் குறையும் இல்லாது உற்சாகத்தோடு கவனித்தார். பிறகு Rajasthan Tourism Development Corporation சொகுசு பஸ்ஸில் ஜெய்ப்பூர் முழுதையும் சுற்றிப் பார்க்க ரூபாய் 30 கொடுத்து 22-7-84 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-30க்குப் புறப்பட்டோம். எங்குப் பார்த்தாலும் கோட்டைகள், அரண்மனைகள், பீரங்கிகள், அந்தக் காலத்து மன்னர்கள் உபயோகித்த விதவிதமான போர்க்கருவிகள், மற்றச் சாதனங்கள் ஆகியன நமக்கு வியப்பூட்டுகின்றன. அவையாவும் சேதமுறாது நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஹிந்து ராஜ்யங்கள் முஸ்லீம் மன்னர்களின் அதிகாரத்தின் கீழ் ஆளப்பட்டு வந்தன. சில இடங்களில் கணிதம் மற்றும் வான சாஸ்திர அறிவை விளக்குவதற்குப் பல நினைவுச் சின்னங்களை நிலை நாட்டியுள்ளனர். சரியான நிபுணர் ஒருவரை உடன் வைத்து விளக்கக்கேட்டால் தான் இவற்றை ரசித்துத் தெரிந்துகொள்ள முடியும். ஜெய்ப்பூரில் உள்ள வீதிகள் மிகவும் அகலமாகவும் நேர்க்கோட்டில் கட்டப்பட்டன போன்றும் மிகவும் கவர்ச்சிகரமாக உள்ளன. வண்டியில் பூட்டி இழுக்கவும், பல வேலைகளுக்கும், உழுது விவசாயம் செய்யவும் ஒட்டகம் நன்கு பயன்படுகிறது.

ஜெய்ப்பூரிலிருந்து ஆஜ்மீர் வந்தோம். பயணிகள் பொழுதைக் கழிப்பதற்காக ரயில் பாடகனைக் கொண்டு மீராபாய் பாடல்கள், பண்டரிநாதன் பாடல்கள் எனப் பக்தி சுவை ததும்பும் பாடல்களைப் பாடச் செய்தனர். விருப்பப்படி சன்மானமாக அவரவர்கள் இரண்டு, ஐந்து என்று தருகின்றனர். பாட்டுப் பாடுகிறவன் ஆடம்பரமாக ஆடையணிந்திருந்தான். பயணிகளும் கூச்சமில்லாமல் அவனுடன் சேர்ந்து பாடுகிறார்கள். அவர்களில் பலரும் டிக்கட் இல்லாமலே பிரயாணம் செய்கின்றனர். அதைக் குற்றமாகக் கருதுவதில்லை. ரயில் போகாத இடங்களில் பஸ்களில் ஏறித் தொத்திக்கொண்டு டிக்கட் எடுக்காமல் பிரயாணம் செய்யும் இழிவான நிலையை ராஜஸ்தானத்தில்தான் சகஜமாகப் பார்க்கலாம்.

ஆஜ்மீரிலிருந்து புஷ்கர் என்ற ஊருக்கு வந்தோம். அங்கே பிரம்மாவுக்குப் பெரிய கோயில் உள்ளது. இது பாகிஸ்தான் போவதற்குரிய எல்லை அருகில் இருப்பதால் இராணுவக் கெடுபிடி சற்று அதிகம். பிறகு அங்கிருந்து மௌண்ட் ஆபு என்ற ஒரு சிறந்த கோடை வாசஸ்தலத்துக்குப் போனோம். ஆங்கு சங்கர மடத்தில் தங்கினேன். ஆங்குத் தமிழ் நாட்டைச் சேர்ந்த மூன்று பேர் உள்ளனர். அங்குள்ள மண்டலேஸ்வரர் மிகவும் இனியவர். வெளிநாடு சென்று டாக்டர் பட்டம் பெற்று அனைத்தையும் துறந்து துறவு மேற்கொண்டுள்ளார். அவர் தபோவனத்தைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளார். நமது பெரிய சுவாமிஜியைச் சந்தித்துப் பேசியுள்ளார். அங்கே இரண்டு நாட்கள் தங்கி எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு ஆமதாபாத்துக்குக் கிளம்பினேன். ஆபு ஸ்டேஷனிலிருந்து வண்டி புறப்பட ஆரம்பித்தது. அப்பொழுது சில போலீஸ்காரர்கள் நான் இருந்த பெட்டியை நோக்கி ஓடி வந்தனர். அவர்கள் உள்ளே புகுந்து என் பக்கத்தில் இருந்த வயதான முஸ்லீம் ஒருவன் வைத்திருந்த பெட்டியைத் திறக்கச் சொல்லி பரிசோதனை செய்தனர். அந்த முஸ்லீம் கிழவன்

பைத்தியம் போன்று தென்பட்டான். பாகிஸ் தானிலிருந்து ஆயுதத்தைக் கடத்திக்கொண்டு யாரோ முஸ்லீம் வருகிருன் என்று காவல் துறையினருக்குத் தகவல் வந்ததின் விளைவு தான் அந்தப் பரபரப்புக்குக் காரணம் என்று தெரிய வந்தது.

29—7—84 அன்று ஆமதாபாத் வந்து சேர்ந்தோம். எங்களுக்குத் தெரிந்த ஆஸ்ரமத் தில் நல்ல வசதியோடு தங்கினேம். இந்த ஆஸ்ர மத்தில் கிளிகள், புருக்கள் ஏராளமாக வளர்க் கிருர்கள். அந்தப் பறவைகள் அன்யோன்ய மாக மக்களுடன் பழகுகின்றன. மறுநாள் சபர்மதி நதிக்கரையில் அமைதியோடு காட்சி அளிக்கிற காந்தி ஆஸ்ரமத்தைப் பார்த்தோம். 1918 முதல் 1930 வரை மகாத்மா காந்தியடி கள், கஸ்தூரிபாய் இருவரும் இங்கு இருந்து தேச சேவையில் ஈடுபட்டார்கள். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை யெல்லாம் ஏதோ கற்பனை உலகில் பார்ப்பது போன்று இருக்கிறது. நானை நம் வாழ்வும், எல்லார் வாழ்வும் அப்படித் தானே! கால வெள்ளத்தில் எல் லாம் அடித்துச் செல்லப்பட்டு விடும்; யாரும் மிஞ்ச முடியாது. அப்படியிருந்தும் 'நான், எனது' என்ற அகங்காரம், மமகாரம் நம்மை விட்டுப் போகவில்லையே என்ற எண்ணத் துடன் அவ்விடத்தைவிட்டு அகன்றேள். ஆமதாபாத்தில் உள்ள மிருகக்காட்சி சாலை பெரியது. இங்கு உள்ள பறவைகள் விதவித மான வண்ணங்களில் செழுமையாக இயற்கை யான சூழ்நிலையில் இருந்தன. மிருகங்கள், புலி, சிங்கம் போன்றவை பருத்த உருவில் கொழு கொழுவென்று உள்ளன. ஆறுகால் கள் உள்ள அதிசய மாட்டிலிருந்து வண்ண வண்ணப் பாம்புவகைகள் வரை சிறப்பான முறையில் பராமரிக்கப்படுவதுதான் போற்றத் தக்கது. இங்கே 50 பைசா டிக்கட் வாங்கி நான்கு மணி நேரம் நன்ருகச் சுற்றிப்பார்க் கலாம்.. இதைப் பார்த்த பிறகு கீதா பவனம் சென்ரேம். ஸ்ரீமத் பகவத்கீதையில் சில சுலோகங்களுக்கு ஒரு துறவி ஹிந்தியில் விளக் கம் கொடுத்துக் கொண்டிருந்தார். இரண்டாயி ரம்பேருக்குக் குறையாமல் அங்கு அமைதியாக அமர்ந்து ஆர்வத்தோடு கேட்டதைப் பார்த்த பொழுது உள்ளம் ஆனந்தத்தில் திளைத்தது. அதிலும் கல்லூரி மாணவர்களும், ஆபீஸில் அலுவல் பார்க்கும் இளைஞர்களும் ஆங்கு அதி கம் கூடியிருந்தது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பிறகு பஸ் ஸ்டாண்டு வந்து பஸ்ஸுக்காகக் காத்திருந்த நேரத்தில் ஒரு தமிழரைச் சந்தித் தேன். தமிழ் நாட்டுக்காரர் என்ருலே தோற்றம் தெற்றெனக் காட்டித்தருகிறது. அவர் திருநெல் வேலியைச் சேர்ந்தவர் என்றும் ஆமதாபாத் தில் ஒரு பெரிய ஹோட்டல் நடத்திவருவதாக வும் சொன்னர். சாத்வீகம், அன்பு, பிராணிகளி டத்தில் இரக்கம் காட்டுதல் முதலியவற்றில் குஜராத்திகள் முதலில் நிற்கின்றனர். பணம் சம்பாதிப்பதை லட்சியமாக வைத்து எங்குச் செல்லவும் தயாராய் உள்ளனர். குஜராத் தில் எங்கும் எல்லாரும் காலையில் பல் தேய்க் கப் பல் குச்சியைத்தான் உபயோகிக்கின்றனர். நான் பார்த்த அளவு சாராயக்கடை, கள்ளுக் கடை என்று ஆள் உயரம் உள்ள எழுத்துக்கள் உடைய போர்டுகளைக் காணமுடியவில்லை. அன் பும் அறப்பண்பும் உடைய இம்மாநிலத்தில் பார்க்கவேண்டிய க்ஷேத்திரங்கள் நிறைய உள் ளன. இந்த மாநிலத்தில்தான் மகாத்மா காந்தி யடிகளும், வல்லபாய்படேல் போன்றவர்களும் பிறந்தனர். பிறகு அங்கிருந்து கண்ணன் ஆண்ட துவாரகையைப் பார்க்கப் புறப்பட்டோம்.

புத்தரைச் சரியாக அறிந்துகொள்ளாதவர் அவரை நிரீசுவரவாதி என்று பகர்கிருர்கள். உண்மையில் அவர் ஈசுவர வாதியுமல்லர், நிரீசுவரவாதியுமல்லர். மனிதனை மேலோனுக்கும் மார்க்கத்தை எடுத்து விளக்குதலிலேயே அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தார். உலக வாழ்வு துன்பம் நிறைந்தது; ஜீவிதம் தீபத்துக்கு ஒப்பானது; கர்மம் என்கின்ற எண்ணெய் இல்லாது செய்துவிடு; வாழ்வு என்னும் தீபம் அணைந்து பட்டுப்போம்; அத்துடன் துக்கமும் முடிந்து விடு கிறது என்பதே அவர் போதனையின் சாரம். —''*பரமஹம்சரின் பெருமை*'' *என்ற நூலிலிருந்து*

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு V. S. நரசிம்மன்)

காலத்திற்கு ஏற்ப எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவது இயற்கையின் நியதி. அத்தகைய அவசியம் நேரிட்டபொழுது ஸ்ரீ கிருஷ்ணர் உலகை (குருக்ஷேத்திரப் போரின் மூலம்) ஒழுங்குபடுத்தினர்; அப்போது நல்லது, தீயது இரண்டையுமே அவர் அகற்றினர். எனவே தவறு என்பதும் கூட நம்மை ஒருவாறு சீரமைக்கின்றது எனலாம். இந்தக் கருத்து உங்களுக்கு நிறைவைத் தருகின்றதா?

அன்பர்: ஒருவாறு எனலாம். முற்றிலும் நிறைவு இல்லை!

சுவாமிஜி: இயற்கை நம்முன் உள்ள அசைக்க முடியாத உண்மை. நாம் அதை ஒதுக்க முடியாது; ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தீமையை அறவே ஒழித்துக்கட்டுவது யாராலும் இயலாத செயல்.

கேள்வி: 16. தீமையைக் கண் முன்பு காணும்பொழுது என்ன செய்ய வேண்டும்?

பதில்: நம்மால் முடிந்த அளவு கடும் முயற்சி செய்து அதைக் களைய வேண்டும். தீமையைக் காணும்போது அசிரத்தையாக இருந்தால் நாமே மறைமுகமாகத் தீமையை வளர்த்தவர்கள் ஆகின்றோம்.

கேள்வி: 17. 'இயற்கையின் நியதிப்படி அனைத்தும் சரியாகிவிடும்' என்று நாம் சும்மா இருக்கலாமே?

பதில்: எங்கெல்லாம் தீமையைக் காணுகின்ருயோ, தீமை என்று நன்கு அறிகின்ருயோ அங்கெல்லாம் அதை ஒழிக்க வேண்டிய வழிமுறைகளைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் நாம் கடமை தவறியவர்கள் ஆவோம். சமுதாயத்தில் நன்மையும், தீமையும் எக்காலத்திலும் காணப்படும். தீமை ஒருபக்கம் அதிகரித்துக்கொண்டே இருக்கும் போது, நாம் எதுவும் செய்யாது பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது. தீமையை அழித்து, நிலைமையைச் சீராக்கு ஆனல் ஒருவன் எதிலும் தீமையைக் காண்பதே இல்லை எனில், அவனுடைய பாங்கு வித்தியாசமானது; அவன் நிலை அசாதாரணமானது என்று அறிக.

கேள்வி: 18. ஒரு ஞானி தீமையைக் காண்பது இல்லை. நான் தீமையைக் காண்கின்றேன். இத்தகைய மனப்பான்மை எனது கர்ம வினையால் ஏற்பட்டதா?

பதில்:உன் அகத்தே உள்ளதையே புறத்தே காண்கிருய். ஞானி அகத்தே தெய்வீகத்தில் ஊறித் திளைத்து இருக்கின்ருன். எனவே புறத்தே அவன் காண்பதும் அதே தெய்வீகத்தையே! அவன் தீமையைப் பொருட்படுத்துவதில்லை. அது அவன் பாங்கு. ஆனல் நீ தீமையைப் பொருட்படுத்தும் போது, செயலற்று இருக்கக் கூடாது. உன்னுடைய உயிரைத் தியாகம் செய்தாவது அதைத் தடுக்க வேண்டும். ஞானி தீமையைக் காண்பதில்லை; அவனுடைய தர்மம் வேறு; யதி தர்மம் - துறவிகளுக்கு உரிய தர்மத்தை அவன் பின்பற்றுகின்ருன். ஆயின் சமுதாயப் பொறுப்பு உள்ளவன் தீமைக்கு எதிராக நிற்க வேண்டும். பகவத் கீதையின் உபதேசம் இதுதான். துறவியின் தர்மத்தை சமுதாயக் கடமை உள்ளவன் அனுஷ்டிக்கக் கூடாது. பிரகலாதனுக்குப் பலவிதக் கொடுமைகளை இழைத்தனர். ஆனல் அவனுக்கோ அனைத்தும் ஸ்ரீமந் நாராயணனின் லீலையாகத்தான் இருந்தன; தான் துன்புறுத்தப்படுவதாக அவன் கருதவே இல்லை. நம்முடைய கீழான தன்மைகளைக் களைந்து, பரிபக்குவம் முற்றிலும் பெற்றுல்,பிரச்சினைக்கே இடமில்லை. தருமத்தை நன்கு அறிவதும், கடைப்பிடிப்பதும் பொறுப்பு மிகுந்த நுட்பமான செயல்கள்.

கேள்வி: 19. இரண்டாவது உலகப் போரில் ஹிட்லர் பல்லாயிரக்கணக்கான யூதர்களைப் படுகொலை செய்தான். இதை நாம் 'தீமை' என்று சொல்லலாமா?

பதில்: பழைய நிகழ்ச்சியை நாம் விமர்சனம் செய்வதால் பலன் ஏதும் இல்லை. நம்மால் அதைப்பற்றி இப்பொழுது எதுவும் செய்ய இயலாது. மற்றவர்கள் தீமை என்று கருதினலும், தன்னுடைய புத்திக்கு அது சரியாகவே பட்டது என்று ஹிட்லரே காரணங்களைக் கூறியிருப்பான்! இயற்கையில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறத்தான் செய்கின்றன. கடைசி

யில் பார்க்கப் போனால், நன்மை, தீமை இரண்டுமே கடவுளிடமிருந்து வெளிப்படுகின்றன. தற்போது தீமையாகத் தென்படுவதே, காலப் போக்கில் நன்மையாகக் காணப்படலாம்! எனவே தீமையை நாம் எந்த அளவிற்குப் பொருட்படுத்துகின்றோமோ, அதுவரை தர்மத்தை அனுசரித்து, தீமையை அகற்றவேண்டும். அதற்குமேல் அனைத்தும் இறைவன் செயல்; நம்மால் வேறு எதுவும் செய்ய இயலாது. அதைப்பற்றிய முழு திட்டமும், அறிவும் நமக்குக் கிடைப்பதில்லை. பூகம்பம், எரிமலை விபத்துக்கள், வெள்ளச்சேதம், கொள்ளை நோய்—என்று பல வகைகளில் மனித இனம் பெரும் துயரத்திற்கும், உயிர் நாசத்திற்கும் ஆளாகின்றது. நம்மால் இவற்றைத் தடுக்க முடியாது. இந்தச் சமயங்களில் நல்லவர்களும் சேர்ந்து அவதிப்படுகின்றனர். இயற்கையில் இவை அனைத்திற்கும் தகுந்த இடம் உண்டு.

கேள்வி: 20. ஆத்மீக வாழ்வு வாழத் தாங்கள் கூறும் அறிவுரை யாது?

பதில்: இதே கேள்வியைச் சுவாமி விவேகானந்தரிடம் வேறு முறையில் கேட்டனர். "நீங்கள் விவரித்துக்கூறிய வேதாந்தக் கருத்துக்கள் சிறப்பாகத் திகழ்கின்றன. அதைப் பயிற்றுவிக்கச் சிறந்தமுறை யாது?" "வேதாந்தத்தைப் பயிற்றுவிக்க மிகவும் சிறந்த நெறி, வேதாந்த வாழ்வைக் கடைப்பிடிப்பது தான்" என்றார் சுவாமி விவேகானந்தர். ஆன்மீக வாழ்வு நாம் வாழ்கின்றோம். நாம் செய்யக் கூடிய மிகப்பெரியசேவை அதுவே. சமய வாழ்வில் நல்ல சீரிய வாழ்க்கை முறைதான் தேவை; பொருளற்ற பேச்சு அன்று. நமது வாழ்வு சமுதாயத்தைப் புதுப்பிக்க வேண்டும். ஆன்மீகப் பேருணர்வில் நாம் திளைத்து இருந்தால், நம்மை அறியாது சமுக சேவை புரிகின்றோம். இதற்கு மேல் பெரிய தொண்டு இல்லை. இறைவனுக்கு நாம் புரிய வேண்டிய கடமை அது; எஞ்சியவற்றை அவர் பார்த்துக் கொள்வார். உலகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்பது என்பது நடக்காத காரியம். நாம் வாழும் லட்சிய வாழ்வு மட்டுமே மனித குலத்திற்கு நாம் புரியும் சேவை ஆகின்றது.

அமைதியாகக் கடமையைச் செய்வோம். ஆத்ம சாதனம் பழகுவோம். உலகில் உள்ள சிக்கல்களை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து நாம் ஆராய்வதில்லை. சமய நெறியைப் பின்பற்றும் நமக்கு அது அவசியம் அன்று.

நல்ல மனப்பான்மை, நல்ல அறிவு, நல்ல தொடர்பு, நல்ல வாழ்வு என்று நான்கு நற்குணங்களைப் (சத்வாரீ ஆர்ய சாதனனி) பகவான் புத்தர் உபதேசித்தார். அவைதாம் தற்போது தேவை. 'இறைவா, உன்னுடைய இச்சைப்படி ஆகட்டும்; என்னுடைய விருப்பப்படி அன்று'—என்ற மனப்பான்மையேதேவை. அது இருந்தால் போதும்; அடுத்து நடக்க வேண்டியது தானே நடக்கும். இந்த மனப்பான்மை இல்லாது வினையாற்றும்போது மனிதன் அதிகத் துன்பத்தை விளைவிக்கின்றான். நம்முடைய அகங்காரத்தை ஒதுக்கி, இறைவனை நம்பி வினையாற்றும்போது அதிக நன்மை விளையும். இறைவன் கையில் நம்மைக் கருவிகள் ஆக்குவோம். வில்லாளி ஒருவன் அம்பு எய்கின்றான். குறியை அது தாக்கினால் அம்பிற்குப் பாராட்டுக் கிடையாது; குறி தவறினாலோ இகழ்ச்சியும் கிடையாது! "இறைவன் கரங்களில் நான் ஒரு கருவி; இறைவா, இக்கருவியைக் கொண்டு நீ யாதாயினும் செய்க. ("நன்றே செய்வாய், பிழை செய்வாய்; நானோ இதற்கு நாயகமே"—மாணிக்க வாசகர்) நல்லது என்றால் அதனால் எனக்குப் பெருமை இல்லை; தீமை எனில் எனக்குச் சிறுமை கிடையாது." சிறந்த பக்தனின் உன்னதமான மனப்பான்மை இதுவாகும். 'நிமித்த மாத்ரம் பவ—வெறும் கருவியாக நீ இரு' என்றார் ஸ்ரீ கிருஷ்ணர். அது சிறந்த உபதேசம். இறைவனே இக்கருவியின் மூலம் பெரும் செயல்களைச் செய்கின்றார் என்ற மனப்பான்மையே நம்மிடம் மேலோங்கவேண்டும்.

கேள்வி: 21. 'பிசாசு பிடிப்பது' என்பது உள் மனதின் கோளாறு என்று உள இயலும், மருத்துவ விஞ்ஞானமும் உறுதியாகக் கூறுகின்றன. ஆனால் மதவாதிகளோ பேய், பிசாசு, ஆவிகள் உண்மையே என்று பேசுகின்றனர். உங்களுடைய கருத்து யாது?

பதில்: மதவாதிகளில் பெரும்பாலோர் நம்பிக்கையின் அடிப்படையில் செயல் புரிகின்றனர்; அவர்களிடையே தத்துவ ஆராய்ச்சியைச் செய்பவர் சிறுபான்மையினரே.

ஆத்திச்சூடியில் ஆன்மீகம்

1. அறம் செய விரும்பு

மனம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றுதான் நம்மில் ஒவ்வொருவரும் விருப்பப்படுகின்றோம். துக்கத்தைத் தாமாக ஒருவரும் நாடிப்போவதில்லை. வாழ்க்கையில் சந்தோஷத்தைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் தத்தமக்குத் தெரிந்த வழி முறைகளைக் கையாளுகிறார்கள். அவற்றில் பிழைகள் நேரும்போதுதான் துக்கம் உண்டாகிறது. அறிவாளிகள் துன்பம் வந்தபோது அதையும் ஏற்றுப் பழகுகிறார்கள். அந்த அனுபவத்தைக் கொண்டு வாழ்க்கையில் புதிய பாடங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். மற்றவர்களுக்கு உதவும் பொருட்டுத் தங்கள் அனுபவங்களைத் தெளிவான நடையில் பாடல்களாகத் தொகுத்துத் தருகின்றார்கள். கண்தெரியாமல் தடுமாறுகின்றவனுக்குக் கை விளக்குக் கொடுத்தது போல இந்த ஆன்றோர் தம் அனுபவ வாக்கு உதவி செய்யும்.

சான்றோர்கள் தங்கள் அனுபவங்களையெல்லாம் தொகுத்து அற நூல்கள் வடிவத்தில் மனித குலத்துக்கு அளித்துச் சென்றார்கள். அந்த அற நூல்கள் மனித குலத்தின் ஒவ்வொரு பரம்பரைக்கும் வழிவழியாய்க் கிடைத்து வருகின்ற அற்புதச் செல்வங்களாகும். மானுடர்கள் செய்த தவறுகளையே திரும்பத் திரும்பச் செய்து மீண்டும் மீண்டும் தண்டனை அடைதல் கூடாது; வாழ்க்கைப் பாதையில் அவர்கள் பின்தங்கிவிடலாகாது; தனி மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் உயர்வடைந்து தங்கள் சமூகத்தையும் முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்பனவாகிய உயரிய குறிக்கோள்களுடன் அற நூல்களை நமது ஆன்றோர்கள் ஆக்கித் தந்தார்கள். எனவே அறநூல்களைப் பயில்கின்ற அளவு நாம் அறத்தின் பிறப்பிடமான ஆண்டவனை அறிந்துகொள்கிறோம்.

அருமைத் தமிழ் மொழியில் அழகிய இலக்கிய நூல்கள் அனைத்தும் அறத்தையே வலியுறுத்துகின்றன. "அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்......நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்" என்று தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரம் அறத்திற்கு விளக்கம் தரும் கதைக்கு முன்னுரை தருகின்றது. உலகத்திற்கே உரிய முதல் நூலான திருக்குறள் அறத்துப்பால் என்று ஒரு தனிப்பகுதியைத் தந்து அறனை வலியுறுத்துகின்றது. "அணுவைத் துளைத்து எழு கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறளையும்" விஞ்சும் ஒளவையின் பாடல் என்று சிறப்பித்துச் சொல்லுவார் வரகவி சுப்பிரமணிய பாரதியார். 1330 குறட்பாக்களில் வள்ளுவர்பெருமான் அருளிய கருத்துக்களைத் தொகுத்து மூன்றே வரிகளில் உள்ளடக்கியதுடன் அறம், பொருள், இன்பம் இவற்றோடு நான்காவதாகிய வீடு பேற்றினையும் பெறுகின்ற வழிமுறையை ஒரு வெண்பாவில் உரைக்கின்றார் ஒளவைப் பிராட்டி.

வாழும் வழியைக் குழந்தைக்கு எடுத்துச் சொல்ல வந்த பாட்டி ஆத்திச்சூடியையும், கொன்றைவேந்தனையும் முதலில் பாடினார். முன்னேறத் துடிக்கும் மனிதக் குழந்தை புரிந்து கொள்வதற்காக வாழ்க்கையின் ஈடுபாடுகள், ஆக்கபூர்வமான செயல்கள் அனைத்துக்கும் ஆதார சுருதியாக அமைந்த அடிப்படைத் தத்துவத்தை ஆரம்ப வரியிலேயே அழகாக எடுத்துரைத்தார். "அறம் செய்வதற்கு ஆசைப்படு; அதுதான் உனக்கு நல்லது; உன்னால் முடியவில்லை என்று பொய்க்காரணம் கூறி முயற்சியை நிறுத்திவிடாதே; மனம் போல வாழ்வு, எண்ணம் போல் செயல்; ஆகவே விருப்பம் உண்மையானதாக இருந்தால் விளைவும் விரும்பத்தக்கதாகவே இருக்கும். முதலில் நல்லதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உன் மனதில் நிறைய வளர்த்துக் கொள்; பிறகு அதை நிறைவேற்றுவதற்கு உண்டான வழிமுறைகளைச் சிந்திக்கலாம். எனவே அறம் நல்லது; அது எனக்கு நன்மையையே செய்யும்; அதை நானும் செய்யலாம்; அவசியம் செய்யவேண்டும் என்ற திடமான கருத்தை நீ பெறுவாயாக"— இன்னோரன்ன கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கி 'அறம் செய விரும்பு' என்று பாடினார் அந்தத் தமிழ்

மூதாட்டி.

'சரி, பாட்டி நான் அறத்தை விரும்புகிறேன். ஆனல் அதை எப்படிச் செய்யவேண்டும், ஏன் செய்யவேண்டும் என்பதொன்றும் எனக்கு விளங்கவில்லையே' என்று குழம்பித் தவிப்பவர்களுக்கு உதவும்' பொருட்டுத்தான் கீழே குறிப்பிட்ட வெண்பாவைப் பாடினர் பிராட்டி. அது வருமாறு:

ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்
காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு
பட்டதே இன்பம்-பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்பவீடு.

'கொடுப்பது தருமம், பிறருக்குத் தீமை நினைக்காமல் உழைத்துச் சம்பாதிப்பது பொருள், கணவனும் மனைவியும் ஒற்றுமையுடன் நடத்தும் இல்லறமே இன்பம்; முடிவில் இவற்றையெல்லாம் துறந்து இறைவனின் இணையடி நிழலில் இன்புற்றிருத்தல் வீடு பேறு ஆகும்.' தர்ம, அர்த்த, காம, மோட்சத்திற்கு இதை விடச் சிறப்பாகவும், சுருக்கமாகவும் ஒருவர் விளக்கம் தர இயலுமா?

'சத்யம் வத, தர்மம் சர' என்று ஆன்றோர்கள் புகன்ருர்கள். பைந்தமிழில் அறம் என்றும், வடமொழியில் தர்மம் எனவும் குறிக்கப்படும் வாழ்க்கை நெறியினை வெவ்வேறு சான்றோர்கள் வெவ்வேறு அர்த்தம் தொனிக்கும்படி வாழ்ந்து காட்டியிருக்கிருர்கள். அறம் என்ற சொல்லின் பல்வேறு பாகுபாடுகளை இனி ஒவ்வொன்ருக நாம் சிந்திக்கலாம்.

பெண்ணசையும், மண்ணசையும் பிடித்தால் எத்தகைய மாண்பு உடையவனும் முடிவில் மண்ணகிப் போவான் என்ற நீதியை இராமாயணம், மகாபாரதம் என்ற இரண்டு இதிகாசங்களும் போதிக்கின்றன. அறம் என்பது யாது, அதை ஏன் கடைப்பிடிக்கவேண்டும், அது என்ன நன்மைகளைச் செய்யும், அறம் பிசகியவர்கள் என்ன கதியை அடைவார்கள், அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள் எத்தகைய கஷ்டங்களையும், சோதனைகளையும் சந்திக்க நேரிடும், ஏன் அவ்வாறு நிகழுகிறது, முடிவில் அறம் எவ்வாறு வெல்கிறது, அறத்தின் பல்வேறு பாகுபாடுகள் என்னென்ன ஆகிய எல்லாக் கேள்விகளுக்கும் இந்த இரண்டு அற நூல்களும் விரிவான முறையில் விளக்கங்களைத் தருகின்றன.

வாழ்நாள் முழுவதும் தர்மத்தைக் கடைப்பிடித்தவன் ஸ்ரீ ராமன். அறம் வளர்த்த நம்பி என்றே ஆன்ருேர்கள் அவனை வாழ்த்துவார்கள். கொடுத்த வாக்கை உயிரே போயினும் மீறக் கூடாது என்பது அரசகுலத்தார் நியதி. "ராமா, நீ பதினான்கு ஆண்டுகள் வனத்தில் வசிக்கவேண்டும். உன் தம்பி பரதன் நாடாள வேண்டும். இது தான் உன் தந்தையிடம் நான் பெற்ற வரம்" என்றுசிற்றன்னையான கைகேயி கூறினள். அப்பொழுதுதான் மலர்ந்த தாமரையைப் போன்று இராமன் முகம் மலர்ந்து "தாயே! தந்தையின் கட்டளையைத் தங்கள் மூலம் ஏற்றுக்கொண்டேன். அரசும், உறவும் துறந்து மரவுரி தரித்து இன்றே வனம் புகுவேன்" என்று கூறி அவ்வாறே செய்தான். "அண்ண! தங்களை வஞ்சித்த பாவிகள் என் வாளுக்குப் பதில் சொல்லட்டும்" என்று சீறி எழுந்த இலக்குவனையும் "நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை, விதியின்பிழை, இதற்கு நீ வெகுண்டது என்னை" என்று கூறிச் சாந்தப்படுத்தினன். வனவாசத்தின் போது உத்தமர்களை ரட்சித்தும், அதமர்களை சிட்சித்தும் தன் அரச கடமையை நிறைவேற்றினன். தான் இல்லாதபோது திருட்டுத்தனமாகத் தன் மனையாளைக்கவர்ந்து சென்ற தசமுகனுக்கு முறைப்படித் தூது அனுப்பி அவனைப் போர்க்களத்தில் சந்தித்தான். அவன் போரில் தளைத்துப்போனபோது "இன்று போய் நாளை வா" என்று உயிர்ப்பிச்சை அளித்தான். மறுநாள் போரில் அவனை வென்று மனைவியை மீட்டான். தன்னையே சதம் என்று வந்த நண்பர்களுக்கு உரிய முறையில் நற்பேறுகளை அளித்தான். தன்னிலும் மிக்கார்களான இரண்டு தவப்புதல்வர்களையும் உலகுக்கு அளித்தான். இவ்விதம் தன்மீது நம்பிக்கை வைத்துப் பிறர் ஒப்படைக்கின்ற பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றுதல் என்கின்ற கடமை உணர்வே அறம் எனப்படுவதாகும் என்பதை ஸ்ரீ ராமன் உலகுக்கு உணர்த்தினன். ஒவ்வொருவருக்கும் கடமை ஒன்றுண்டு. அக்கடமையைப் பொறுப்புணர்வோடும், சிரத்தையோடும் செய்து முடிப்பது அவரவர்க்குரிய அறத்தைச் செய்வதாகிறது.

(தொடரும்)

குறிப்புகள்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னுள்

'பருவத்தே பயிர் செய்' என்றும் 'விளையும் பயிர் முளையில் தெரியும்' என்றும் சான்றோர் கள் பகர்ந்துள்ள வாக்கு பயிர்த்தொழிலுக்கு மட்டுமன்று, பண்பாட்டுக் கல்விக்கும் சாலவும் பொருந்தும். தபோவனத்தில் வித்யாவனக் குருகுல மாணவர்கள் நாள்தோறும் மூன்று வேளை பிரார்த்தனைப் பாடல்கள் பாடி இறை யருளை நாடி நிற்பது மரபு. மாதங்களில் சிறந்த மார்கழியில் சிரத்தையோடு காலை நான்கு மணிக்கே எழுந்து பல் துலக்கி நெற்றியில் நீறு தரித்து அருளாளர்களின் பாடல்களைப் பாடிய வண்ணம் தபோவனத்தை வலம் வரு வார்கள். "போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே" என்று தபோதனர்கள் பள்ளி யெழுச்சி பாடி முடித்ததும் மாணவர்கள்

"ஜெய்கணேச ஜெய்கணேச ஜெய்கணேச பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ரக்ஷமாம்"

என்று ஸ்ரீ கணேச நாமத்துடன் பஜனையைத் தொடங்கிவிடுவார்கள். தேவாரம், திருவாச கம், திவ்யப்பிரபந்தம், தாயுமானவர், திரு வருட்பா, திருப்புகழ் முதலிய பல அருட்பாக் களை உரத்த குரலில் திருத்தமாகப் பாடுவார் கள். "அருணாசல சிவ, அருணாசல சிவ" என்று கீதம் இசைத்துத் தாங்களும் மகிழ்ந்து கேட் போரையும் பரவசப்படுத்துவார்கள். விண்ண வரின் தண்ணருளை இம்மண்ணுலகினரும் அனுபவிப்பதற்கு ஏதுவாகிய இந்தப் புண் ணியக் கைங்கரியத்தில் குருகுல மாணவர்கள் இளமையிலேயே முறையான பயிற்சி பெறு கிறார்கள்.

திருச்சி பாய்லர் பிளாண்ட் பொறுப்பில் கைலாசபுரத்தில் உள்ள மூன்று பள்ளிகளைத் தபோவனம் நிர்வகித்து வருகிறது. அந்த மூன்று பள்ளிகளின் மாணவ மாணவிகளும் தங்கள் பகுதியில் உள்ள திருக்கோவில்களில் நிகழும் தனுர் மாத வழிபாட்டில் பெரும் அள வில் பங்கு பெறுகிறார்கள். தொழிற்சாலை யைச் சார்ந்த அப்பகுதி மக்களும் பல்வேறு சங்கங்களை அமைத்துக்கொண்டு ஆன்மீகப் பயிற்சியில் சிரத்தையுடன் ஈடுபட்டு வருகிறார் கள். மார்கழி மாதம் நாள்தோறும் பஜனைக் கோஷ்டிகள் கைலாசபுரத்தின் பல்வேறு பகுதி களில் வீதி உலா போதல் என்ற வழக்கத்தை ஏற்படுத்தித் தொடர்ந்து செய்து வருகின்றார் கள். இந்த வருடம் மார்கழி கடைசி நாளன்று ஒரு விசேஷ ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தி ருந்தார்கள். கைலாசபுரம் தபோவனப் பள்ளி களின் ஐக்கிய வழிபாடு என்ற அந்த நிகழ்ச்சி யில் சுமார் இரண்டாயிரம் மாணவ மாணவி யர் கலந்துகொண்டனர். வேறுபாடு கருதாமல் பிற மதத்தவர்களும் கலந்துகொண்டு தங்கள் கடவுள் பக்தியை வெளிப்படுத்தியது மிகவும் பாராட்டத்தக்க செயலாகும். விநாயகப் பெருமானுக்கு அபிஷேக, ஆராதனைகளுடன் நிகழ்ச்சிகள் துவங்கின. தபோவனப் பள்ளி களின் செயலர் சுவாமிகள் முன்னின்று வழி நடத்த யாவரும் வரிசைக்கிரமமாக அணி வகுத்து நகர் வலம் வந்தார்கள். பாராயணம் செய்யவேண்டிய பாடல்களும், நாமாவளிகளும் அச்சிடப்பட்ட கையேடுகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. பாய்லர் பிளாண்ட் பெண் கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் நாமங் களை முதலில் சொல்லவும், ஏனையோர் அவர் களைத் தொடர்ந்து பாடினர். இவ்விதம் இரண்டரை மணி நேரம் நகரின் பல வீதிகளி லும் இறைவனின் திருப்புகழைப் பாடியவாறு யுவதிகளும், தாய்மார்களும், இளைஞர்களும், ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து சென்ற காட்சி ஞான வள்ளல் விவேகானந்தரின் விசுவ ரூபக் காட்சியாகவே தோற்றம் அளித்தது. ஊர்வலம் முடிந்தபின் தமது அருளுரையில் செயலர் சுவாமிகள் கூறியதாவது: "சாந்தியும், அமைதி யும் இங்கே தவழுகின்றன. நல்லார்கள் அதி கரிக்குமளவு நாட்டில் உறங்கும் ஆன்ம சக்தி யானது ' விழிப்புற்று இயங்கும் சக்தியாக மாறும். நெறிகள் பல; குறி ஒன்று. நாம் அனைவரும் ஆணவ அகங்காரங்களை அழித்து அகத்தில் ஞான தீபத்தை ஏற்ற வேண் டும். 'லோகா சமஸ்தா சுகினோ பவந்து' என்பதே இந்துக்களின் ஐக்கியப் பிரார்த் தனையாகும். அண்டத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் இன்புற்று வாழவேண்டுமென்று

நாம் இறைவனை இறைஞ்சுவோமாக." பிறகு கோவிலில் பூஜைகள் செய்வித்து அன்பர்கள் அன்றைய நிகழ்ச்சிகளை நிறைவு செய்தனர். அனைவரும் பொறுமையாகக் காத்திருந்து பிரசாதங்கள் பெற்றுச் சென்றனர். இவ்விதம் மாணவரும், பொதுமக்களும் இணைந்து செயல் புரியும் ஆன்மீக நிகழ்ச்சிகள் நாட்டில் அதிகரிக்குமளவு சமுதாயத்தைப் பீடித்துள்ள தொல்லைகள் அகன்று மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வார்கள் என்பது உறுதி.

மன்னார்குடியில் ஜயந்தி விழா

மன்னார்குடியில் புதியதாகத் துவக்கியுள்ள சாரதா ஸமிதியின் பணிகள் நாளும் பெருகி வருகின்றன. நகர மாந்தர்கள் சமிதியின் நிகழ்ச்சிகளில் பெரிதும் ஈடுபாடு காட்டி வருகின்றனர். கடந்த 13—1—85 அன்று அங்குத் தபோவனச் சாது சென்றிருந்தபோது ஓர் அரிய ஸத் ஸம்பாஷணை நிகழ்ச்சி நடைபெற்றது. ஊர் மக்கள் மிக்க ஆர்வத்துடன் ஆன்மீகம், சமூகம், சமயம் போன்ற பல்வேறு பிரச்னைகளில் கேள்விகள் கேட்டுத் தங்கள் ஐயம் நீங்கப்பெற்றார்கள்.

சமுதாயப் பணிக்கும் சமயத் தொண்டுக்கும் வேறுபாடு உள்ளதா என்பது முதற்கேள்வி. பாவனையில் வேறுபாடு உள்ளது என்பதே விடை. சமூகத்தில் உள்ளவர்களைச் சகோதரர்களாய்ப் பாவித்து அவர்களுக்கு உற்ற கஷ்டங்களைப் போக்குதல் சமூகப் பணியாகும். மக்களைக் கடவுளாய்க் கருதிப்பணிவிடை பண்ணுவது பக்தனின் மனப்பான்மை. "யாதொன்று பாவிக்க அதுவாய் நான் ஆவேன்" என்பது தாயுமானவர் வாக்கு. மக்களைத் தெய்வ சொருபங்களாகக் கருதி அவர்களுக்குப் பணிவிடை பண்ணுவது கடவுளுக்குச் செய்கின்ற உயரிய வழிபாடு ஆகும். அதனால் சமூகத்தின் பிரச்சனைகளும் தீரும். பக்தனும் உய்வு பெறுகின்றான்.

அடுத்து, சமூகத்தொண்டு புரிபவர் குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்தவராக இருக்கும் போது சமயம், சமுதாயம் ஆகிய இரண்டில் எதற்கு அவர் அதிக மதிப்புத் தரவேண்டும் என்ற கேள்வி எழுந்தது. சமூகத்தில் உள்ள அனைவருமே ஆண்டவனின் அருளுக்குப் பாத்திரமானவர்கள் என்பதை உணர்ந்தவர்கள் சமயத்தின் பெயரால் சச்சரவு செய்யமாட்டார்கள். அவரவர்கள் செய்கின்ற வழிபாட்டு வந்தனைகளைப் பொறுத்துப் பெயரளவில் சில வேறுபாடுகள் தென்படலாம். ஆனால் சமூகநலனைக் கருத்தில் கொண்டு செயலாற்றும் போது இத்தகைய வித்தியாசங்களைப் பொருட்படுத்தலாகாது. மனிதனைப் பண்பாட்டில் உயர்த்துவதே சமயங்களின் நோக்கமாகும். பிரிவினை உணர்ச்சியையும், மனக் கசப்பையும் வளர்ப்பது உண்மையான சமயத்தொண்டு ஆகாது.

சமூகத்தில் ஒற்றுமை நிலவுவதற்காக நாம் உழைக்கும் போது வேறு சிலர் தங்கள் மதமே சிறந்தது என்றும், எல்லாரும் அதில் சேர்ந்துவிடவேண்டும் என்றும் வாதாடுகின்றார்களே என்று ஓர் அன்பர் குறை கூறினர். நமது பரந்த மனப்பான்மையை நமது பலவீனம் என்று பிறர் தவறாகக் கருதுவார்களானால், அந்தத் தவறைத் திருத்துவது நமது கடமை. வெவ்வேறு மன இயல்பு படைத்தவர்கள் புரிந்து கொண்டு பின்பற்றத் தக்கவாறு வெவ்வேறு வகை மதங்கள் உலகில் நிலவுகின்றன. மக்கள் அவரவர்கள் அறிவின் படித்தரத்திற்கு ஏற்ப இவற்றை அனுசரிக்கலாம். ஆனால் அறிவின் முதிர்ச்சியால் அன்றி உடல் வலிமை, பணபலம், அரசாங்க ஆதரவு போன்றவற்றினால் தங்கள் மதத்தை எண்ணிக்கையில் உயர்வுடையதாகக் காட்ட முயல்வார்களேயானால் அதற்கும் நாம் தடைபோடச் சித்தமாக இருக்க வேண்டும். முதலில் நம்மிடையே நிலவும் உட்பூசல்கள் நீங்கவேண்டும். பள்ளிகளில் அடிக்கடி கூட்டு வழிபாடுகள் நிகழ்த்தி இளம் மாணவர்களிடையே சமய உணர்வை வளர்க்க வேண்டும். கோவில்களில் அடிக்கடி துப்புரவுப் பணியும் செய்யலாம். உள்ளத்தின் உறுதி தான் உண்மையான பலம் என்பதை நாம் உணரவேண்டும்.

அடுத்து, மாயை என்பது என்ன என்று ஓர் அன்பர் கேட்டார். அது ஒரு பொய்த் தோற்றம் என்று பலரும் கூறுகின்றனர். அங்ஙனமன்று; உள்ளது ஒன்று; அதை வேறொன்றாகக்கருதி அல்லற்படுவதுதான் உண்மையில் மாயை ஆகும். இன்பமே நமது சொருபமாக இருக்க "நான் துன்பப்படுகிறேன்" என்று பேசுவது மாயை ஆகும். ஆழ்ந்த உறக்கத்தில்

ஒருவன் துன்பத்தை அனுபவிப்பதில்லை. அதுவே உண்மையான சொரூப நிலை. அதை யாண்டும் விழிப்புநிலையில் அனுபவிக்கத் தெரிந்துகொள்வதே ஆன்மீகப் பயிற்சியாகும்.

தியானத்தில் ஆழ்ந்து ஈடுபட இயலவில்லையே என்று ஓர் அன்பர் கேட்டார். தாகம் உண்மையானதாக இருந்தால் தண்ணீரைத் தேடுகின்றவர் தவிப்பும் உண்மையானதாகவே இருக்கும். மனதின் மாசுகளைத் துடைத்துத் தள்ளுவதுதான் இதற்கு உற்ற உபாயம் ஆகும். மனதற்ற பரிசுத்தநிலையை எவ்வாறு பெறலாம் என்பது கேள்வி. விறகைத் தீயிலிட்டால் அது தன் வடிவத்தை இழந்து அக்னி மயமாகி விடுகின்றது. இவ்விதம் மனதையும் ஆத்ம சொரூபம் என்ற தீயில் இடவேண்டும். சதா அதைப்பற்றியே சிந்தனையில் மூழ்கவேண்டும். அப்போது எரிகின்ற வீட்டிலிருந்து எல்லாரும் ஓடுவதுபோல் தீய நினைவுகளும் நீங்கி விடும். தர்ம சக்கரத்துக்கு அச்சு எது, கடையாணி எது என்று கேட்கப்பட்டது. சிரத்தையே அச்சு; விஸ்வாசமே கடையாணியாகும். ஒருவன் இறந்த பின் ஆத்மாவின் கதி என்ன? ஆத்மா வடிவமற்றது. மலர் வாடிய பின் மணம் நீங்குவதுபோல அது வெளியேறுகிறது. எல்லையற்ற பெருவெளியை நான்கு சுவர்களுக்குள் அடைத்து அதனை அறை என்று அழைக்கிறோம். சுவர்களை நீக்கிய பின் இருப்பது முன்னே இருந்த அதே பெருவெளி தான். பேதம் இழந்து பரத்தில் ஒடுங்குவது தான் ஆத்மா.

இவ்விதம் அன்பர்கள் பல்வேறுகேள்விகளை எழுப்பித் தங்கள் ஐயங்களைப்போக்கிக்கொண்டார்கள். அன்று மாலை மன்னார்குடிதேசியமேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற விவேகானந்தர் ஜெயந்தி விழாவில் சேலம் சாரதா ஸமிதியின் தலைவியார் யதீஸ்வரி சாரதாப்ரியாம்பா அவர்கள் உரையாற்றுகையில் "குழந்தைகளை நன்மக்களாக உருவாக்குவதில் சமூகம், அரசாங்கம், பெற்றோர்கள் ஆகிய யாவரும் இணைந்து செயலாற்றவேண்டும். அன்று ஒரு நாள் "கடவுளைக் கண்டதுண்டா?" என்று சுவாமி விவேகானந்தர் கேள்வி எழுப்பினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருக்குக் கடவுளைக் காண்பித்தார். இன்று முறையான கல்விப் பயிற்சியின் மூலம் நாம் குழந்தைகளிடத்தில் தெய்வபக்தியை வளர்க்க வேண்டும். உலகத்தில் பிறந்த குழந்தைகள் அனைத்தையும் தம்முடையதாகப் பாவித்தார்கள் அன்னை சாரதா தேவியார். வெறும் வயிற்றுப் பிழைப்புக்கல்வி உபயோகமற்றது என்று வெறுத்து ஒதுக்கினர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். சோம்பலையும் அறியாமையையும் போர் தொடுத்து ஒழிக்கவேண்டும் என்று வீர கர்ஜனை செய்தார் விவேகானந்தர். இவர்கள் வகுத்துக்கொடுத்த பாதையில் நம் குழந்தைகளை நாம் நடத்திச் செல்வோமாக. ஆன்மீகம் தழைத்து யாவரும் இன்புற்றிருக்க இறைவன் திருவருள் புரிவது ஆகுக" என்று குறிப்பிட்டார்கள்.

"வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் லட்சியம் வேண்டும். துறவறம் பூண்டு தேசத் தொண்டில் ஈடுபடவேண்டும் என்று விவேகானந்தர் இளமையிலேயே லட்சியம் கொண்டிருந்தார். பின்னளில் நவ பாரதத்தை நிர்மாணிக்கும் பெரிய பணிக்கு அவரே அஸ்திவாரம் எழுப்பினர். அயராத உழைப்பும், சிரத்தையுமே அவருடைய மகோன்னத நிலைக்குக் காரணமாகும். சிறந்த விதை, பண்பட்ட நிலம், நீர்வசதி, பாதுகாப்பு, வற்ருத உழைப்பு ஆகிய யாவும் இணைந்தால் விளைச்சல் வியக்கத்தக்கதாக இருக்கும். அது போலவே நம் உள்ளங்களைப் பண்படுத்தி உயர்ந்த லட்சியங்களை விதைத்தால் நம் கர்மவினை தீர்வதுடன் நாட்டுப் பணியிலும் நாம் சுயநலமில்லாமல் ஈடுபட முடியும். மிருக இச்சைகளை மானுடன் தனது மனித இயல்பினல் வெல்லவேண்டும். பின்னர் வேதங்கள் சொல்லியுள்ள வாலறிவனை அறிந்துகொள்ள முயலவேண்டும். ஒழுக்கமும், தூய்மையும் நிறைந்த வாழ்க்கையில் இவையெல்லாம் சாத்தியமே. மக்களைத்தெய்வ நிலைக்கு உயர்த்துகின்ற ஆன்மீக நெறி அனைவருக்கும் உரியது ஆகுக" என்ற அறவுரை வழங்கப்பட்டது. இந்த இரு உரைகளுக்குப் பின்னர் ஸ்ரீ கணேசர் இடை நிலைப்பள்ளி மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

புத்தாநத்தத்தில் ஞானவேல் முருகன்

சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டும் மாட்டுப் பொங்கலன்று புத்தாநத்தம் பகுதியில் ஞானவேல் முருகனின் விழா நிகழ்

தது. இந்து முன்னணியினர் இந்தத் தடவை நூற்றுக்கு மேற்பட்ட R. S. S. தொண்டர்களின் துணையோடு திருவீதிவலத்தைத் திட்டமிட்ட பாங்கில் நடத்திக்காட்டினர். ஆயிரக்கணக்கான மக்கள் கட்டுப்பாட்டுடன் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள்.

ஊர்வலம் ஒழுங்கான முறையில் நடத்தப்பட்டு வடஇடையப்பட்டியை அடைந்தது. அங்கே முருகனுடைய விக்கிரகத்தைப் பொது மக்கள் தாங்களாகவே அபிஷேகம் செய்து வழிபட்டனர். அபிஷேகம், ஆராதனை முடிந்த பின்னர் இந்துக்கள் ஒற்றுமையாயிருப்பதன் அவசியம் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. முருகனின் வேல் ஆற்றல் சொரூபம்; ஆற்றல் விழித்தெழ ஆரம்பித்ததால் இதுவரை அச்சமுற்று இருந்த இந்துக்கள் இப்பொழுது ஒற்றுமைப்பட்டுள்ளனர். இப்பொழுது புத்தாநத்தம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்திலும் மக்கள் சமய எழுச்சி பெற்றுள்ளனர். ஆற்றலே தமது திருவடிவமாக வாழ்ந்த சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் மத்திய அரசாங்கத்தின் ஆணையால் இவ்வருடம் இளைஞர் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. அவ்வீரத் துறவியின் அடிச்சுவட்டில் நமது மக்களின் முன்னேற்றத்துக்காக நாம் அனைவரும் பாடுபடுவோமாக.

பெருகமணியில் பொதுத்தொண்டு

திருப்பராய்த்துறை விவேகானந்த மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆண்டுதோறும் அருகாமையிலுள்ள கிராமப்பகுதிகளுக்குச் சென்று உடல் உழைப்பினை நல்குவார்கள். இவ்வருடம் அவர்கள் எழுபது பேர் பெருகமணியில் ஹரிஜனங்கள் வாழும் பாரதிநகர் சாலையைச் சமன் செய்தும், அங்குள்ள கோவிலுக்கு வெள்ளை அடித்தும் சேவை செய்தார்கள். ஆசிரியர்கள் கிராம மக்களிடம் உரையாடி சமூக நலன் சம்பந்தமான பலவிஷயங்களை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினர்கள். நகரத்துச்சேரிகள் போலன்றி இந்தக் கிராமத்தில் பெரும்பாலான சந்துகள் சாணம் தெளித்துச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. துப்புரவின் அவசியம், ஒற்றுமையின் வலிமை, கோயில் வழிபாட்டினுல் ஏற்படும் நன்மைகள் ஆகியன கிராமத்து மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டன. வீட்டுக்கு ஐம்பது பைசாவும், பிடி அரிசியும் ஒதுக்கி வைத்தால் வருடந்தோறும் ஊர்ப்பொதுவில் பொங்கல் முதலிய வைபவங்களை விசேஷமாகக் கொண்டாடலாம் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. குளித்து முடித்தபின் அனைவரும் கோயிலில் உட்கார்ந்து பஜனை செய்தால் அருள்சக்தி ஓங்கும் என்று அறவுரை வழங்கப்பட்டது. பின்னர் ஸ்ரீராமகிருஷ்ண பக்தர் ஒருவருடைய இல்லத்தில் ஐக்கிய வணக்கமும் சேரிமக்களுடன் சேர்ந்து சம போஜனமும் இனிதே நடந்துமுடிந்தன.

செய்திகள்

நிகழ்பவை

பிப்ரவரி மாதம் 17ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரியாகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்து நான்குமணி நேரம் அகண்ட நாம பஜனை செய்வார்கள்.

21-2-85 வியாழக்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ணர் திதிபூஜையாகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனை செய்வார்கள். பகல் 11 மணிமுதல் 12 மணிவரை ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்களும், திருப்பராய்த்துறை விவேகானந்த மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி மாணவ மாணவிகளும் தபோவனத்தில் ஐக்கிய வணக்கம் செய்வார்கள்.

24—2—85 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீராமகிருஷ்ணர் ஜயந்தி விழா திருப்பராய்த்துறை தபோவனத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். அன்று காலை 6 மணிக்கு விவேகானந்த வித்யாவனக்குருகுல மாணவர்கள்ஸ்ரீராமகிருஷ்ணரின் திரு உருவப்படத்தைத் திருப்பராய்த்துறை சிவாலயத்துக்கு நாமபஜனையுடன் ஊர்வலமாக எடுத்துச்சென்று வருவார்கள்; அன்று காலை 9-30 மணிக்கு ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்களின் பெற்றோர் கூட்டம் ஸ்ரீவிவேகானந்த வித்யாவன உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, —	21-00
மஹாபாரதம்	,, —	8-00
இராமாயணம்	,, —	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, —	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, —	6-50
தினசரி தியானம்	,, —	4-50
ஞானயோக விளக்கம்	—	15-00
ராஜயோக விளக்கம்	—	12-00
கர்மயோக விளக்கம்	—	10-00
பக்தியோக விளக்கம்	—	9-00
விவேகானந்த விவரணம்	—	7-50
விவேகானந்த உபநிஷதம்	—	7-00
பரமஹம்சரின் பெருமை	—	6-00
கடவுளின் வடிவங்கள்	—	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	—	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	—	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	—	5-50
மாணவருக்கு ஒரு சொல்	—	4-50
சகோதரி நிவேதிதை	—	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	—	3-50
சுவாமி விவேகானந்தர்	—	3-50
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	—	3-00
அனுஷ்டான வேதாந்தம்	—	3-00
எதிர்கால இந்தியா	—	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	—	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	—	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	—	3-50
பரிபூரணானந்தம் ,,	—	3-00
சின்மயானந்த குரு ,,	—	3-00
ஆனந்தமானபரம் ,,	—	3-00
சுகவாரி ,,	—	3-00
மௌனகுரு வணக்கம் ,,	—	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ,,	—	2-50
மலைவளர் காதலி ,,	—	1-50
பரசிவ வணக்கம் ,,	—	1-00
கண்ணன் என்னும் கடவுள்	—	2-50
அறம் வளர்த்த நம்பி	—	2-50
சந்நியாசி	—	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	—	2-50
ஹரிச்சந்திரன் ,,	—	2-00
தவப்புதல்வர்கள் ,,	—	2-00
பாதுகா பட்டாபிஷேகம் ,,	—	1-75
நன்மக்களைப் பெறுதல்	—	1-75
விபீஷணன் சரணாகதி ,,	—	1-50
பரமஹம்சர் பாமாலை	—	1-50
காயத்ரி	—	1-50
மாணாக்கன்	—	1-25
செத்தவர்கள் நம்மோடுபேசுகிறார்களா?	—	1-25
சைவன் யார்?	—	1-25

*ஆலய வழிபாடு	—	1-25
*ஆத்ம சக்தி	—	1-25
*மனிதனது நிஜசொரூபம்	—	1-25
*சிவதத்துவம்	—	1-25
இறைவணக்கம்	—	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	—	1-00
இராவண தத்துவம்	—	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	—	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி(நாடகம்)	—	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	—	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	—	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	—	1-00
தபோபலன் (நாடகம்)	—	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம் ,,	—	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	—	1-00
நோய்க்கு இடம் கொடேல்	—	1-00
*கணபதி	—	1-00
*சக்தி தத்துவம்	—	0-90
*சூரியநாராயணன்	—	0-70
தெய்வீக மகிமைகள்	—	0-75
*முருகக்கடவுள்	—	0-75
வர்ணாச்ரம தர்மம்	—	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	—	0-60
விஷ்ணு தத்துவம்	—	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	—	10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	—	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	—	0-30
கந்தர் அநுபூதி	—	0-25
The Bhagavd Gita (12th Imp.)	—	30-00
Sri Lalithambika Sahasranama Stotram		15-00
The Indian National Education	—	10-00
Tirukkural (with plastic cover)	—	9-00
Ramakrishna lives Vedanta	—	8-00
Man Making Message	—	7-00
Ramayana (with plastic cover)	—	7-00
Mahabharata ,,	—	6-00
Sri Bhagavad Gita (Small Size)	—	6-00
Sri Krishna–The Manifest Divinity	—	6-00
Daily Divine Digest (DELUXE)	—	6-00
Daily Divine Digest (Ordinary)	—	4-00
Facets of Brahman or The Hindu Gods	—	5-00
Sri Vishnu Sahasranama Stotram	—	3-50
Thus Speaks Tayumana Swamigal	—	3-50
*Introducing The Gita	—	2-00
Holy Bible—In the Light of Vedanta	—	1-50
Reminiscences of Master Mahashaya	—	1-50
The Nursery School	—	1-50
The Garland of Paraaparam	—	1-50
*Key to Higher Life	—	1-25
*The Student	—	1-25

⁂ இக்குறியிட்ட தலைப்புகள் பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சிராப்பள்ளி Dt.

அன்புடையீர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா 1985 பிப்ரவரி மீ 24ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலே 5-30 மணிமுதல் 8-30 மணிவரை இங்குக் கொண்டாடப்பெறும். நீங்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்,
சித்பவானந்த

நிகழ்ச்சி முறை

24—2—85 ஞாயிறு மாலே

5-30 மணி முதல் 7-00 மணிவரை

குருகுல மாணக்கர் ஆடல், பாடல், பேச்சு முதலியன

7-00 மணிமுதல் 8-30 மணிவரை குருகுல மாணக்கர்களால்

தவப்புதல்வர்கள் என்னும் நாடகம்

தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. சிற்றுண்டிச்சாலே உண்டு.

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் அந்தர்யோகம்

1985 ஞு பிப்ரவரி மாதம் 26, 27, 28 தேதிகளாகிய மூன்று தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 9-00 வீதம் செலுத்திப் பெயர்களேப் பதிவு செய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின் பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்		4-30
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-00	5-30
காவேரி ஸ்நானம் முதலியன	5-30	6-30
காலே தியானம்	6-30	7-00
சிற்றுண்டி	7-00	
காலே உபந்யாசம்	8-30	9-30
மௌனம்	9-30	10-30
பஜனே	10-30	11-30
அர்ச்சனே, பூஜை	11-30	12-00
போஜனம், ஒய்வு	12-00	2-30
மாலே உபந்யாசம்	2-30	3-30
தனியர்க வாசித்தல்	3-30	4-50
பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-00
நாம ஜபம்	6-00	6-15
ஆரத்ரிகம், தியானம்	6-15	7-00
இரவு போஜனம்	7-00	
ஸத் ஸம்பாஷணே	8-30	9-30
நித்திரை	10-00	

உபந்யாசங்கள் :— யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளேப்பற்றி நடைபெறும். ஸத் ஸம்பாஷணேயில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களே நீக்கிக்கொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.